# உள்ளே...


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

இந்தியாவில், காலனி ஆட்சி நுழைய ஆங்கில மருத்துவம் உதவியது
சு.நரேந்திரன்................................................ 09

அரசியலுக்கு வேண்டாமா புதுத்திசை?
க.பழனித்துரை........................................................... 15

காலம் கருதி வரும் ஒரு கவிக்குரல் - கபீர் சொல்கிறான்...
முனைவர் கிருங்கை சொ. சேதுபதி........................ 19

நிழல்போலத் தொடரும் மரணத்தின் வெளியும், புனைவுலகு சித்திரிக்கிற அவ்வுலகமும்:
ந.முருகேசபாண்டியன்............................................ 25

யார் மனிதன்?
பாவண்ணன்............................................................ 31

திருஞானசம்பந்தரின் திருக்கானூர்ப்பதிகத்தில் அகப்பொருளமைவு
முனைவர் க.புஷ்பலதா........................................... 45

காந்தி நேரு பட்டேல்
உதயை மு. வீரையன்............................................ 49

உயிரோடிருப்பவர்கள்
ஜி.சரவணன்............................................................ 53

மொழி அல்ல தமிழ் தமிழரின் அடையாளம்
முனைவர் நா.சுலோசனா........................................ 59

சிலப்பதிகாரம்: வரலாற்றியல் பார்வை
கி.இரா.சங்கரன்........................................................ 63

உ.வே.சாமிநாதையரின் பெங்களூர்ப் பயணம்
முனைவர் இரா. வெங்கடேசன்.............................. 71





கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்
*திருவள்ளுவராண்டு 2050*
*மலர் - 11 இதழ் - 12 - மார்ச் - 2020*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு
*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

பகிர்வு


# படித்துப் பாருங்களேன்...


ஆ.சிவசுப்பிரமணியன்


## எரிக் ஹாப்ஸ்பாம் - ஜியார்ஜ் ரூட் (2001) காப்டன் ஸ்விங்

Eric Hobsbawm & George Rude (2001) Captain Swing

Phoenix Press, London




முதலாளித்துவ அமைப்பின் முக்கிய கூறாக அமைவது தன்னிடம் பணிபுரியும் தொழிலாளர்களின் உழைப்பால் கிட்டும் உபரி மதிப்பை (surplus value) அதிகரிக்கச் செய்து அதைத் தனதாக்கிக்கொள்வது.

உபரிமதிப்புக்கு உறுதுணையாக மூலதனம், தொழிற்கூடம், யந்திரம் என்பன அமைகின்றன. இவை அனைத்திற்கும் மேலாகத் தம் உழைப்பைச் செலுத்தும் தொழிலாளர்கள் இடம் பெறுகின்றனர்.

உலக நாடுகளில், நவீன யந்திரங்கள் முதன் முதலாகப் பரவலாக அறிமுகமான நாடு இங்கிலாந்து. இந் நிகழ்வே 'தொழிற்புரட்சி' என்று அழைக்கப்படுகிறது. 18 ஆவது நூற்றாண்டின் இறுதிக் கால்பகுதியில் (1770) இது நிகழ்ந்தது. இங்கிலாந்தையடுத்து ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் தொழிற்புரட்சி நிகழ்ந்தது.

தொழிற்புரட்சியின் விளைவாக, நகர்ப்புறத் தொழிற்சாலைகளில் பணிபுரிய இங்கிலாந்தின் கிராமப்புறக் குடியானவர்களும் கைவினைஞர்களும் கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்து நகர்ப்புறங்களுக்கு வந்து சேர்ந்தனர். தொழிற்சாலை ஒன்றனுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் வந்து ஒரு குறிப்பிட்ட நேர அளவுக்கு உழைத்து ஊதியம் பெறும் முறை அவர்களுக்குப் புதியதாக இருந்தது. இதற்கு முந்திய கிராம வாழ்க்கையில், தறி, ஊதுலை, தச்சுவேலைக் கருவிகள் போன்ற தொழிற் கருவிகள் அவர்களுக்கு உரிமையானவை. உற்பத்தி செய்த பொருளும் அவர்களுக்கே உரிமையானது. அதன் விலையையும் தம் வேலை நேரத்தையும் அவர்களே முடிவு செய்தனர்.

ஆனால் ஆலைத்தொழிலாளர் ஆன பின்னர் தங்களது இந்தத் தனித்துவத்தை இழந்ததுடன், தங்கள் உழைப்பை விற்று ஊதியத்தை மட்டும் பெறுகிற பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத்துடன் அவர்கள் நிறைவடைய வேண்டியதாயிற்று. இருப்பினும், தம் புதிய நகரவாழ்க்கையில் தம் பழைய தொழில் அடையாளங்களைத் துறந்துவிடவில்லை; தம் பெயர்களின் பின்னொட்டாகவோ, குடும்பப் பெயராகவோ அவற்றைத் தொடர்ந்தனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக, ஆட் பெயர்களின் பின்னொட்டாக இடம்பெற்ற பின்வரும் தொழிற்பெயர்களைக் குறிப்பிடலாம்: கோல்டுஸ்மித் (பொற்கொல்லர்), பிளாக்ஸ்மித் (கொல்லர்), கார்பெண்டர் (தச்சர்), வீவர் (நெசவாளர்), டையர் (சாயம் தோய்ப்பவர்), டெய்லர் (தையற்கலைஞர்), ஷூ மேக்கர் (காலணி செய்பவர்), கார்டர் (வண்டியோட்டி), புல்மேன் (நீர் இறைப்பவர்), தாட்சர் (கூரை மேய்பவர்), ஸ்கின்னர் (தோல் தொழில் செய்பவர்), கார்டனர் (தோட்டக்காரர்), குக் (சமையல்காரர்), பேக்கர் (ரொட்டி சுடுபவர்). இப்பெயர்கள் இன்றும் கூட வழக்கில் உள்ளன.

இவ்வாறு தம் கிராமப்புறத் தொழில் அடையாளங்களுடன் ஆலைத்தொழிலாளர் வாழ்க்கையைத் தொடங்கியோரின் வாழ்க்கை, ஒரு கட்டத்தில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. ஆலையில் உற்பத்தியான பொருள்கள் விற்பனையின்றி சந்தையில் தேக்கமடையும் போது அதை எதிர்கொள்ளும் முகமாக ஆலையின் உற்பத்தியைத் தற்காலிகமாக ஆலை உரிமையாளர்கள் நிறுத்திவிடுவர். இதனால் தொழிலாளர்கள் வேலை இழப்புக்கும் ஊதிய இழப்புக்கும் ஆளாக நேரிட்டது. விற்பனைச் சந்தை சீரான பின்னரே மீண்டும் உற்பத்தி தொடங்கும்.

இது அடிக்கடி நிகழ்ந்தமையால் கோபமுற்ற ஆலைத் தொழிலாளர்கள் தங்களுக்கு நேர்ந்த இந்த அவலத்திற்குக் காரணம் நவீன யந்திரங்கள்தான் என்று தவறாகக் கருதினார்கள். முதலாளித்துவப் பொருள் உற்பத்திமுறையே இந் நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்ற உண்மை அவர்களுக்குப் புரியவில்லை. தம் கடந்த காலக் கிராமப்புற வாழ்வின் இனிமையைப் பறித்ததாக அவர்கள் கருதிய ஆலையின் யந்திரங்களை உடைப்பதன் மூலம் பழிதீர்க்கத் தொடங்கினர்.


பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் ஒரு பெரிய இயக்கமாகவே இது வளர்ச்சி பெற்றது. இதில் பங்கேற்றோர் 'யந்திரம் உடைப்போர் (Machine Breakers) என்றழைக்கப்பட்டனர்.லுடைட் இயக்கம் (Luddite Movement) என்று அழைக்கப்பட்ட இவ் இயக்கத்தில் பங்கேற்றோர் லுடைட்டுகள் என்றழைக்கப்பட்டனர்.

இவ் இயக்கம் குறித்து 'கடந்த காலமும் நிகழ்காலமும்' (Past and present) என்ற ஆய்வுப் பத்திரிகையின் முதல் இதழில், 'யந்திர உடைப்பாளிகள்' (The Machine Breakers) என்ற தலைப்பில் கட்டுரையொன்றை 1952இல் ஹாப்ஸ்பாம் எழுதினார். இக் கட்டுரையில், லுடைட் இயக்கத்தை அடக்க பன்னிரண்டாயிரம் படைவீரர்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், 17ஆவது நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கிய இவ்வியக்கம் 19ஆவது நூற்றாண்டில் 1830வரை நிகழ்ந்ததாகவும் ஹாப்ஸ்பாம் குறிப்பிட்டுள்ளார் .


இதன் பின்னர் இங்கிலாந்தின் கிராமப்புறப் பண்ணைத் தொழிலாளிகள் நிகழ்த்திய தீ வைப்பு, அறுவடை யந்திர உடைப்பு போன்ற நிகழ்வுகளை மையமாகக் கொண்டு 'காப்டன் ஸ்விங்' என்ற இந்நூலை ஜியார்ஜ் ரூடு(1910-1993) என்ற வரலாற்றுப் பேராசிரியருடன் இணைந்து 1969 இல் வெளியிட்டார். இந்நூலின் முதல் பதிப்பை மார்க்சிய நூல்களை வெளியிடும் இங்கிலாந்தின் லாரன்ஸ் & விஸ்ஸாட் நிறுவனம் வெளியிட்டது.

**நூல்**

நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்ட இந்நூலில் மொத்தம் பதினைந்து இயல்கள் இடம் பெற்றுள்ளன. நூலின் அறிமுக உரையையும் நான்கு



எரிக் ஹாப்ஸ்பாம்



ஜியார்ஜ் ரூட்

இயல்களையும் (இயல்கள் : 1,4,9,15) ஹாப்ஸ்பாம் எழுதியுள்ளார். எஞ்சிய பதினொரு இயல்களை ஜியார்ஜ் ரூட் எழுதியுள்ளார். மார்க்சியச்சிந்தனை கொண்ட வரலாற்றுப் பேராசிரியரான இவர் 18ஆவது நூற்றாண்டு அய்ரோப்பிய வரலாற்றில், குறிப்பாகப் பிரஞ்சுப் புரட்சி குறித்த ஆழமான ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். **பிரஞ்சுப் புரட்சியின் வெகுண்டெழுந்த மக்கள் திரள்** (The Crowd in the French Revolution) என்ற இவரது நூல் குறிப்பிடத்தக்க ஒன்று.

18 ஆவது நூற்றாண்டு இங்கிலாந்தின் கிராமப்புறப் பண்ணைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையும், போராட்டமும் இந்நூலின் மையச்செய்தியாகும். இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சியை அடுத்து முதலாளித்துவத்தின் தாக்கம் கிராமப்புறங்களில் ஏற்படலாயிற்று. வேளாண் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் வகையில் யந்திரங்கள் வேளாண்மைத் தொழிலில் அறிமுகமாயின. இதை எதிர்கொள்ளும் வகையில் கிராமப்புறங்களில் வன்முறைத் தன்மை கொண்ட கலவரங்கள் உருவாயின. கோபமுற்ற மக்கள் திரளால் பண்ணைகள் எரியூட்டி அழிக்கப்பட்டன. அறுவடை யந்திரங்கள் உடைத்து நொறுக்கப்பட்டன. அச்சுறுத்தும் தன்மை கொண்ட கடிதங்கள் பண்ணை உரிமையாளர்கள், நீதிபதிகள், கிறிஸ்தவ மதக்குருக்கள் ஆகியோருக்குச் சென்றன. இவற்றை எழுதியவர், 'காப்டன் ஸ்விங்' என்று கையெழுத்திட்டார். ஆனால் இது ஒரு கற்பனைப்பெயர்தான். உண்மையில் காப்டன் ஸ்விங் என்று ஒருவர் கிடையாது. இங்கிலாந்தின் கிராமப்புறங்களில் நிகழ்ந்த இந் நிகழ்வுகள் குறித்த இந்நூல் 19ஆவது நூற்றாண்டு இங்கிலாந்தின் குடியானவர்கள் எழுச்சியையும், கிராமிய முதலாளித்துவத்தின் வெற்றியையும் வெளிப்படுத்துகின்றது.

இந்நூலின் முதற்பகுதி, குடியானவர்கள் எழுச்சியின் போது இங்கிலாந்தின் சராசரிக் குடியானவர்களின் வாழ்க்கை நிலையைச் சித்தரிக்கிறது. இரண்டாவது பகுதி அவர்களிடம் உருவான எழுச்சியை அறிமுகம் செய்ய, மூன்றாவது பகுதி இவ் வெழுச்சியின் தன்மையையும், இவ் எழுச்சியின் ஆதரவாளர்கள் குறித்தும் எழுச்சியால் பாதிக்கப்பட்டோர் யார் என்பது குறித்தும் ஆராய்கிறது. இறுதியாக இவ் எழுச்சியின் பின் புலத்தில் இருந்தோரையும் நாம் அறியச்செய்கிறது. நான்காவது இயல் குடியானவர்கள் எழுச்சி ஒடுக்கப்பட்டமை குறித்தும், அதன் பிந்தைய நிலை குறித்தும் எடுத்துரைக்கிறது.

**வேளாண் தொழிலாளர்கள்**

19ஆவது நூற்றாண்டு இங்கிலாந்தின் வேளாண்மையில் குடியானவர்கள் என்போர் ஒரு வலுவான பிரிவாக உருவாகவில்லை. இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சிக் காலம் தொடங்கி 19ஆவது நூற்றாண்டின் நடுப்பகுதிவரை குடியானவர்களின் நிலை அவலம் நிறைந்ததாகவே இருந்தது. பெரும்பாலும் கிராமப்புற உழுகுடிகள் தமக்கு உரிமையான சிறு துண்டு நிலத்தில் வேளாண்மை செய்து அதன் பலனைத் தம் குடும்பத் தேவைக்கு எடுத்துக் கொண்டனர். உபரி

இருப்பின், அதைச் சந்தையில் விற்றனர். ஆயினும், ஒரு வாணிபமாக இது வளர்ச்சி பெறவில்லை. அவர்கள் வளர்த்த பசு,பன்றி, வாத்து ஆகியனவும் அவர்களது தேவையை நிறைவு செய்தன. இவை அனைத்திலும் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பு அடங்கியிருந்தது. இவர்களது உழைப்பானது தம் குடும்பத்தின் சுயதேவையை நிறைவு செய்வதாகவே அமைந்திருந்தது.

இவர்களை அடுத்து, துண்டு நிலம்கூட இன்றி வேளாண் தொழில் செய்து ஊதியம் பெற்று வாழும் வேளாண் தொழிலாளர்கள் இருந்தனர்.

இவ்விரு பிரிவினரையும் தவிர ஏராளமான நிலங்களின் உரிமையாளர்களான பெரிய நிலவுடைமையாளர்களும் இருந்தனர். நிலமற்ற கிராமத்தினருக்குத் தம் நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து அவற்றிலிருந்து பெறும் பெருத்த ஆதாயத்தைக் கொண்டு வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். நிலக்கிழார்களின் பண்ணைகளில் ஆடுகள் மேய்க்கும் பணியை நிலமற்ற கிராம வாசிகள் சிலர் மேற்கொண்டிருந்தனர்.

இவர்களுள் பெரிய நிலவுடைமையாளர்களைத் தவிர ஏனையோரைக் கிராமப்புறப் பாட்டாளிகள் எனலாம். இவர்களைத் தவிர சிறுவியாபாரிகள், கைவினைத்தொழில் புரிவோர், வண்டியோட்டிகள், சத்திரம் நடத்துவோர், தேவாலய ஊழியர்கள் என்போரும் 19ஆவது நூற்றாண்டுக் கால இங்கிலாந்தின் கிராமப்புற உழைப்பாளர் வரிசையில் இடம் பெற்றிருந்தனர். இவர்களுள் கூலிக்கு உழைப்போரே கிராமப்புறப் பாட்டாளிகள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தனர். இங்கிலாந்தின் வேளாண் தொழிலானது, நிலப்பிரபுகள், குத்தகை விவசாயிகள், கூலி உழைப்பாளர் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. தொழிற்புரட்சியின் தாக்கம் கிராமப்புறங்களில் முழுமையான அளவில் ஏற்படாமையால் வேளாண் சமூகம் முதலாளித்துவ சமூகமாக மாறவில்லை. நவீன ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலாக வேளாண்மை மாறவில்லை. உணவு உற்பத்தி, மதுவுக்கான மூலப்பொருள் உற்பத்தி என்ற எல்லைக்குள் மட்டுமே வேளாண்மை நடைபெற்றது.

குடியானவர்கள் ஏழையாக இருந்தபோதிலும் தேவாலயத்தின் சமயக்குருவுக்குத் தம் வருவாயில் பத்தில் ஒரு பகுதியை தித்தி என்ற பெயரில் வரியாகச் செலுத்த வேண்டும்.இது அவர்களின் உற்பத்திப் பொருள் வடிவில் தொடக்கத்தில் இருந்தது. பின்னர் இது பணவடிவிற்கு மாற்றமடைந்தது.

இங்கிலாந்தின் சமூக வரலாற்றில் முக்கிய நிகழ்வாக நிகழ்ந்த வேலிஅடைப்புப் போராட்டம், குடும்பத்தின் பயன்பாட்டிற்கான வேளாண்மையின் சுயேச்சைத் தன்மையைப் பறித்தது. பொருளாதார சுயேச்சைத் தன்மையையும் நிலத்தையும் இழந்த இவர்கள் முழுநேரக் கூலி உழைப்பாளராயினர். இவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது கிராமப்புற உழைப்புச் சந்தையில் ஊதியக் குறைப்புக்கு வழிவகுத்தது.

19ஆவது நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் இங்கிலாந்து நாட்டின் வேளாண்மை நிலை குறித்த சில செய்திகளை ஹாப்ஸ்பாம் விரிவான முறையில் எழுதியுள்ளார். பெருத்த ஆதாயம் தரும் அளவுக்கு உற்பத்தி செய்யும்படி, குத்தகை விவசாயிகளை நில உரிமையாளர்கள் ஊக்குவித்ததாகவும், உற்பத்தியையும் சந்தைப்படுத்துதலையும் இணைப்பதில் ஆர்வம் காட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். 1830 வாக்கில் நில உரிமையாளர்கள், புதிய வீடுகள் கட்டுவதிலும் பழைய வீடுகளைப் புதுப்பித்தலிலும் அதிக அளவில் ஈடுபட்டனர். வேட்டையாடுதலும் துப்பாக்கிச் சுடுதலும் அதிகரித்தன (இவையிரண்டுக்கும் அதிகச் செலவு பிடிக்கும்). நிலவருவாய் உயர்ந்தமைக்கான சான்றாக ஹாப்ஸ்பாம் இவற்றைச் சுட்டிக்காட்டுகிறார்.

வேலி அடைப்புப் போராட்டத்தின் விளைவாக, சிறு விவசாயிகள், குடும்ப உறுப்பினர்களுடன் குடும்பத் தேவையை மட்டும் நிறைவு செய்யுமளவிலான வேளாண்மை மேற்கொண்டிருந்தோர்,நிலங்களை ஆக்கிரமித்து வேளாண்மை செய்து வந்தோர் ஆகியோர் பாதிக்கப்பட்டனர் என்பது ஹாப்ஸ்பாமின் கருத்தாகும். ‘வேலி அடைப்புப் போராட்டத்திற்கு முன்னதாக, குடும்பத்தேவைக்காகக் குடும்ப உறுப்பினர்களுடன் வேளாண்மை செய்து வாழ்ந்து வந்தோர் நிலம் வைத்திருந்த உழைப்பாளிகளாக இருந்தனர். இப் போராட்டத்திற்குப் பின்னர் நிலமற்ற உழைப்பாளிகளாயினர்’ என்பது ஹாமோண்டோ என்பவரின் கூற்றாகும். இக் கூற்றுடன் ஹாப்ஸ்பாம் உடன்படுகிறார். இதன் தொடர்ச்சியாக, இங்கிலாந்தின் கிராமப்புற ஏழ்மை குறித்த செய்திகளை எடுத்துரைக்கிறார்.

**கிராமப்புற ஏழ்மை**

இங்கிலாந்தின் கிராமப்புறங்களில், தொழிலாளர், பணியாளர் என இரண்டு வகையான உழைப்பாளர் இருந்தனர். இவ்விரு பிரிவினருமே நில உரிமையின்றி தம் உடலுழைப்பை நம்பி வாழ்ந்தனர். இவர்களது உழைப்பு கிராமப்புற நில

உரிமையாளர்களுக்கு மிகவும் தேவைப்பட்டது. எனவே நில உரிமையாளர்கள் இவர்களைப் பணிக்கு அமர்த்திக் கொண்டனர். இவர்களுள் தொழிலாளர்களுக்கு நாள்தோறும் அல்லது வாரந்தோறும் ஊதியம் வழங்கினர்.இவர்களின் உழைப்பை மதிப்பிட்டு அதற்கேற்ப ஊதியம் வழங்கப்பட்டது. இவர்கள் நில உடைமையாளரின் ஊரைச்சேர்ந்தவர்களாகவோ, சுற்றுப்புற ஊர்களைச் சேர்ந்தவர்களாகவோ இருந்தனர்.

பணியாளர்கள் என்போர் பண்ணை உரிமையாளரின் வீட்டிலேயே தம் பணிக்காலத்தில் வாழ்வர். அங்கேயே பண்ணை உரிமையாளர் குடும்பத்துடன் உணவைப் பகிர்ந்துண்பர். அக் குடும்ப உறுப்பினர் போன்றே அவரது இயக்கம் அமையும். ஆனால் ஒரு வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு உட்பட்டதாகவே இது நிகழும். வேளாண்மைப் பணிகளுடன் கால்நடை வளர்ப்பிலும் இவர்கள் ஈடுபடுவர். பணிக்காலம் முடிந்து செல்லும் போது எளிய அன்பளிப்புகள் இவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு நிலமற்ற கிராமப்புற ஏழைகள் தம் உழைப்பை விற்று வாழ்ந்து வந்தனர். இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, நெப்போலியனுடன் இங்கிலாந்து நடத்திய வாட்டர்லூ போர் வழிவகுத்தது.

இப்போர் முடிந்ததும் இரண்டரை இலட்சம் படைவீரர்கள் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இவர்கள் வேறு வேலைவாய்ப்பின்றி, தத்தம் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இவர்களது வருகை கிராமப்புற வேலைவாய்ப்பை நெருக்கடிக்குள்ளாக்கியது. கிராமங்களில் வேலையின்மை அதிகரிக்கலாயிற்று. (இது தொடர்பான புள்ளி விவரங்கள் நூலில் விரிவாக இடம்பெற்றுள்ளன.) இத்தகைய அவலச்சூழலின் பின்புலத்தில் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் வன்முறைக் கிளர்ச்சி இங்கிலாந்து நாட்டுக் கிராமப்புறங்களில் உருவாயிற்று.

இதன் தொடக்கம் குறித்தும், இதன் விளைவுகள் குறித்தும் அடுத்த இதழில் காண்போம்.

**(தொடரும் )**



## சிறப்புப் புத்தகக் கண்காட்சி

11.02.2020 செவ்வாய்க் கிழமையன்று சென்னை, குரோம்பேட்டையிலுள்ள Madras Institute of Technology (MIT) வளாகத்தில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் சார்பில் Science and Technical Book Exhibition துவங்கப்பட்டது. புத்தகக் கண்காட்சியில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் இடம் பெற்றிருந்தன. கண்காட்சி 14.02.2020 வரை நடைபெற்றது.

இந்தச் சிறப்புப் புத்தகக் கண்காட்சியை MIT Dean முனைவர் T. தியாகராஜன் அவர்கள் துவக்கி வைத்தார். துவக்கவிழா நிகழ்ச்சியில் MIT Convenor முனைவர் V. ரைமன்ட் உத்தரையராஜ், Co-Convenor முனைவர் K.M. பரமசிவம், Co-ordinator முனைவர் K.S. சிவகுமாரன் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தின் இயக்குநர் முனைவர் கிருஷ்ணமூர்த்தி, என்.சி.பி.எச். முதன்மை நிர்வாகி எஸ்.மணவாளன் மற்றும் நூலக அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.




# இந்தியாவில், காலனி ஆட்சி நுழைய ஆங்கில மருத்துவம் உதவியது

கலைமாமணி முனைவர் மருத்துவர்
**சு.நரேந்திரன்**

பரம்பரை மருத்துவம் இந்தியாவில் தொன்றுதொட்டு இருந்து வந்தபோதிலும், வேதங்களின் வாயிலாக, கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே சுரம், வயிற்றுப்போக்கு, சீதபேதி, மஞ்சள் காமாலை, காசநோய், புற்று, கண், தோல் நோய்களைப் போல கொள்ளை நோய்களான காலராவையும் அறிந்திருந்தனர். மேலும், நோயைத் தவிர, பேய், விரோதம் ஆகியவற்றினாலும் நோய் ஏற்படுவதாகக் கருதி, தாயத்து, மந்திரம் மற்றும் பல்வேறு சடங்குகளைச் செய்து நோயிலிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றனர்.

**இந்திய மருத்துவ வரலாறு**

ஆரியர்கள் இந்தியாவிற்குள் (கி.மு. 1500) நுழைந்த 3,000 ஆண்டுகளுக்கு முன்பே ஆயுர்வேத மருத்துவம் தோன்றி இருக்க வேண்டும். வேதங்களில் நான்காவதான அதர்வண வேதமே இம்மருத்துவத்தின் உயிர்மூச்சு. இம்மருத்துவத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலைக்குச் சென்ற காலம், சரகசம்ஹிதா, சுசுருத சம்ஹிதா எழுதப்பட்ட காலம் கி.மு. 300 ஆகும். இதை எழுதிய சரகர், காஷ்மீரத்தையும், சுசுருதர், காசியையும் சேர்ந்தவர்கள். இதுவே இன்றுவரை ஆயுர்வேதத்திற்கான அடிப்படை வேதமாகும்.

அஷ்டாங்க ஹிருதயா, மாதவா நிதானா நூல்களும் இம்முறை மருத்துவம் படிப்பவர்கள் படிக்கக்கூடிய நூல்களில் முக்கியமானவையாகும்.

ஒட்டறுவையை முதன் முதலில் செய்தவர் சுசுருதர். இவரது சுசுருத சம்ஹிதா என்ற அறுவை சிகிச்சைக்கான நூலில், அறுவை சிகிச்சைக்கான 121 வகையான கருவிகள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, கத்தி, கத்தரி, சாமணம், ஊசி, தொரட்டி போன்ற வளைந்த கருவிகள் குறித்து இதில் விளக்கப்பட்டுள்ளன. இவை இன்றைய நவீன அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவதுபோல் உள்ளன. இக்கருவிகளினால் ஒட்டறுவை சிகிச்சையும் (Plastic Surgery) செய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மூக்கு அக்காலத்தில் ஒரு தண்டனையாக வெட்டப்பட்டது. (சூர்ப்பனகை ஞாபகம் வருகிறதா?) அதைச் சரி செய்யும் விதமாகக் கன்னத்திலிருந்து அல்லது நடு நெற்றியிலிருந்து தசையினைத் தோலுடன் மூக்கில் பொருத்தி ஒட்டறுவை நிகழ்த்தப்பட்டது. தற்பொழுது இம்முறையே சில மாற்றங்களுடன் நவீன மருத்துவத்திலும் நடைபெறுகிறது.

சுசுருதாவிற்குப் பிறகு, இந்த ஒட்டறுவை வடநாட்டில் செங்கல் சுடுபவர்களும், மட்பாண்டம் (Potters) செய்பவர்களும், நெற்றியிலிருந்து தசையை மூக்கில் பொருத்தும் அறுவை சிகிச்சையை அறிந்திருந்தார்கள். இவர்கள் இந்த அறுவை சிகிச்சையை 15ஆம் நூற்றாண்டிலிருந்து, மகாராஷ்ட்ராவில் செய்து வந்துள்ளனர். இப்படி அறுவை சிகிச்சை புரிபவர்கள், கங்கரா (Kangra) என அழைக்கப்படுவார்கள். இவர்களில் கடைசியாக அறுவை சிகிச்சையை 20ஆம் நூற்றாண்டில் செய்தவர், தினனாதா (Dinanata) என்கிற பானை செய்யும் இனத்தைச் சார்ந்தவர்.

மூக்கு அறுவை சிகிச்சையைக் கேள்வியுற்ற பிரிட்டிஷார், 1794ஆம் ஆண்டு இலண்டனில் ஜென்டில்மேன்'ஸ் மேகசின் (Gentleman's Magazine) என்ற இதழில் படத்துடன் அறுவை சிகிச்சை செய்யும் முறையைத் தெளிவாக விளக்கி எழுதியுள்ளனர்.

ஆயுர்வேத மருத்துவம், தட்சசீலத்திலும், நாலந்தாவிலும் நடைமுறைப் பயிற்சிகளுடன் குருகுல கல்வி முறையில் பாடங்கள் ஒரு குருவிற்கு இத்தனை மாணவர்கள் என்ற நியதியுடன் நடத்தப்பட்டன.

படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மருத்துவத் தொழிலைத் தொடங்குவதற்கு முன் அரசனுடைய அனுமதியைப் பெற வேண்டியது அவசியம் என சுசுருத சம்ஹிதாவில் கூறப்படுகிறது (சுசுருதா, அத்தியாயம் 10).

இதன்காரணமாகப் போலி மருத்துவம் மறைமுகமாகத் தடை செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இதேபோல மருத்துவர்கள் கவனமாகத் தம்


சுசுருதர்

தொழிலைச் செய்ய வேண்டும் என்பதற்காக யாராவது தவறாக அறுவை மருத்துவம் செய்து அல்லது கவனக் குறைவாகச் சரியாக மருந்து கொடுக்காது இருப்பின் அவர்கள் தலையைத் துண்டிக்க வேண்டுமென்று கௌடில்ய அர்த்த சாஸ்திரம் (கி.மு. 400) கூறுகிறது.

சுசுருத சம்ஹிதாவில் 1120க்கும் மேற்பட்ட நோய்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இதற்கான மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டபின், அந்நோயாளி மேற்கொள்ள வேண்டிய உணவு, சுகாதாரம் மற்றும் துப்புரவு போன்றவற்றுடன், நோயை வகைப்படுத்தும் விதங்களும் மிகவும் விரிவாகக் காணப்படுகின்றன.

சரகர், சுசுருதர் போன்றோர் உடலைக் கூறு போட்டே உடலின் அமைப்புகளை, உடல் இயக்கங்களை அறிந்தே நூலை எழுதியுள்ளார்கள். அதன்பின்னர் இடைப்பட்ட காலங்களில் இந்திய மருத்துவம் பிணத்தைக் கூறுபோடுவது மத அடிப்படையில் பாவம் என்பதாலும், பிணத்தை இந்துமத வழக்கத்தின்படி எரியூட்ட வேண்டும் என்பதாலும் உடல்கூறை மருத்துவ மாணவன் அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.


அக்காலத்தில் அசோகர் மரத்தை மட்டும் நடவில்லை; மருத்துவமனையையும் தொடங்கினார். கிறிஸ்துவுக்கு முந்தைய மூன்றாம் நூற்றாண்டிலேயே தகுந்த சிகிச்சை இல்லாததனால் மரித்தோர் எண்ணிக்கை அதிகரித்ததால் வைத்திய சாலைகளின் தேவையை மன்னர் அசோகர் உணர்ந்ததாக அறியப்படுகிறது. அசோகர் பாட்னாவில் நான்கு வாயில் பகுதிகளில் அன்றே புறநகர் மருத்துவமனைகளை நிர்மாணித்துள்ளார் என்றும், அவை மொழி பேதமின்றி ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர், நோய்வாய்ப்பட்டோர் அனைவரும்

தங்கிச் சிகிச்சை பெறும் இடங்களாக அமைந்திருந்தன என்றும் பாஹியான் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் (கி.மு.250 முதல் கி.பி.750 வரை) புத்த மதம் சார்ந்த அரசர்கள் ஒவ்வொரு நகரத்திலும் மருத்துவமனையையும், மருத்துவப் பள்ளியையும் நிறுவினர். இக்காலத்தில் மருத்துவம் தழைத்தது. ஆனால் கொல்லாமை என்னும் இம்மதக் கோட்பாட்டினால் அறுவை மருத்துவம் வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர், இந்து மத பிராமணக் கோட்பாடுகள் நுழைந்த நிலையில் மருத்துவ வளர்ச்சியும் வீழ்ச்சியடைந்தது. பிராமணர்கள் இரத்தத்தையும், நோயுற்றவர்களையும் தொட வெறுப்புற்றவர்களாக இருந்தனர். ஆகவே மருத்துவத்தைத் தங்கள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டதனால், அறுவை மருத்துவம் சுதேசி வைத்தியர்களிடம் சென்றது.

இவர்கள் கீழ்சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களிடமிருந்து வங்க கிராமங்களில் Kabiraj-களுக்குச் சென்றது. தமிழகத்தில் நாவிதர்கள் மருத்துவத்தையும், அறுவை சிகிச்சையையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, தங்களை மருத்துவர் குலம் என அழைத்துக் கொண்டனர்.

பழங்காலத்தில் நாவிதர்களே அறுத்துவம் செய்துள்ளனர். கார்மேக கவிஞர் எழுதிய கொங்குமண்டலச் சதகத்தில், "காந்தபுரத்து அரசன் பெண் கருவுற்றபொழுது தலை திரும்பி சுகப்பிரசவம் நிகழாத போது, நறையூர் நாட்டினளான கொங்கு நாவிதச்சி அடிவயிற்றைக் கீறி வழிகண்டு, சிசுவை எடுத்து, கீறிய வாயை மூடித் தன்னிடத்துள்ள மருந்தைத் தடவினாள்,'' எனக் குறிப்பிட்டுள்ளார்.



இதுபோலவே இங்கிலாந்திலும், ஏன் உலகிலேயே அறுவை மருத்துவம் நாவிதர்களாலே ஆரம்ப காலங்களில் மேற்கொள்ளப்பட்டு, நாவிதர் - அறுவை மருத்துவர் சங்கம் (Barbers' - Surgeons Association) என அழைக்கப்பட்டது. அதன் பிறகே 16ஆம் நூற்றாண்டில் (1745) தனியாக அறுவை மருத்துவ சங்கம் (Royal College of Surgeons Association) பரிணமித்தது.

இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இந்த ஒற்றுமை எப்படி நிகழ்ந்தது என்பது ஒரு சமூகப் பிரச்சினையாகவே தோன்றுகிறது.

ஆரம்ப காலத்தில் குருகுல முறைப்படி காடுகளின் நடுவில் தங்கியிருந்து விஞ்ஞானம், கல்வி ஆகியவை கற்பிக்கப்பட்டன. இவையே பிறகு, தட்சசீலம், காசி, நாலந்தா போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்களாக உருவெடுத்தன.

தட்சசீலம், ராவல்பிண்டியிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ளது. இங்கு பல்கலைக்கழகம் கி.மு.6இல் ஆரம்பிக்கப்பட்டு, உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்தது.

இதுபோல நாலந்தா பல்கலைக்கழகம் கி.பி. 5 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்றது. சீன யாத்திரிகர் யுவான் சுவாங், ஹர்ஷர் ஆட்சியில் இங்கு வந்து தங்கி, ஐந்து ஆண்டுகள் மாணவராகப் பயிற்சியிலிருந்தார். இங்கு மொத்தமாக 10 ஆயிரம் மாணவர்களும், 1,500 ஆசிரியர்களும் தங்கி இருந்தனர்.

புத்தமதம் தழுவிய அரசர்கள் முடிசூடிய பிறகு, இம்மருத்துவ முன்னேற்றம் சற்றே பின்னடைவு கண்டது. இக்காலத்தில் மருந்தும் உணவாகவே கொடுக்கப்பட்டு, துப்புரவும், சுகாதாரமும் பேணப் பட்டன.

சீன யாத்திரிகர் பாஹியான் தன் குறிப்பில் தனவந்தர்களும், குடிமக்களும் இந்தக் கண்டத்தின் நகரங்களில் பல மருத்துவ மனைகளைத் திறந்து, வறியவர்களுக்கும், முடமானவர்களுக்கும் இலவச மருத்துவம் அளித்து, உணவு போன்ற மற்றைய உதவிகளையும் அளித்ததாகக் கூறியுள்ளார். மேலும் மருத்துவர்கள் மேற்பார்வையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைந்தாலும் நோயாளிகள் தங்களுக்கு ஏற்ற நாட்களிலே அங்கிருந்து சென்றனர் எனவும் பாஹியான் குறிப்பிட்டுள்ளார்.

யுவான் சுவாங் (கி.பி. 629 - 645) கூற்றுப்படி, நகரத்திலும் கிராமங்களிலும் உள்ள நெடுஞ் சாலைகளில் புண்ணியசாலைகள் (Hospices) என்ற பெயரில் இருந்த மருத்துவமனைகளில் யாத்ரிகர் களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் மருத்துவர் மேற்பார்வையில் நீருடன் உணவும், மருத்துவமும் அளிக்கப்பட்டன.

இதன் பிறகு கி.பி. 700 - 1300களில் தாந்தரீகக் கோட்பாடுகள் தலை விரித்தாடின. அதன் பின்னர் உலோகங்களைச் சுத்திகரித்து மூலிகைகளுடன் சேர்த்து, மருந்துகள் தயாரிக்கப்பட்டன. இது தமிழக மருத்துவமான சித்த மருத்துவத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

இதே காலத்தில், மலபார் கடற்கரைப் பிரதேசத்தில் மருத்துவ அறிவை இந்தியர்களும், அரேபியர்களும் கொடுத்து, வாங்கிக் கொண்டதால் இந்தியர்களின் மருத்துவ உத்திகள் மொழி பெயர்க்கப் பட்டு, அரேபிய நூல்களில் பதிவாயின.

தென் இந்தியாவில் மருந்தகமும், மருத்துவமனையும் பல்லவர், சோழ அரசர்களால் (கி.பி. 574 - 1200களுக்கு) இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்டன.

கல்வெட்டுக்களில் மருத்துவர்களுக்குத் தரப்பட்ட தானம், விதிக்கப்பட்ட வரிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. மருத்துவப் பேறு என்பது வரியில்லாத கிராமத்தை மருத்துவனுக்குக் கொடுத்ததைக் குறிக்கும். இதுபோலவே நோய் தீர்க்கும் மருத்துவர்களுக்கு ஊதியத்திற்குப் பதில், "வைத்திய போகம்" என்ற பெயரில் நிலம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுக்களின்படி, மருந்தகங்கள் பல்லவர் (கி.பி. 574 - 879) மற்றும் சோழர் (கி.பி. 900 - 1200) காலத்தில் இருந்தமையையும், அதில் பணிபுரிந்த மருத்துவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டதையும் அறிய முடிகின்றன. சோழர்கள் மருந்தகங்கள் ஆதுலர் சாலை அல்லது வைத்திய சாலை என அழைக்கப்பட்டன (ஆதுலர் - மருந்து - சாலை - இலவச நிறுவனம்). இவர்களுக்கு வரியில்லா நிலம் பாரம்பரியமாகத் தானமாகக் கொடுக்கப்பட்டு இலவசமாக அவ்வூரில் பணிபுரிந்து வந்தனர்.

இது குறித்த கல்வெட்டு, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருமுக்கூடல் வெங்கடேஸ்வரா கோவில் உட்பிரகாரத்தில் வீர ராஜேந்திர சோழனால் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகளின்படி 12 மருத்துவப் படுக்கை, ஒரு மருத்துவர், 'சல்லிய கிரிகை பண்ணுவான்' என்ற ஒரு அறுவை உதவி மருத்துவர், மூலிகை பெற்றுவர இரண்டு நபர்கள், இரண்டு பணியாளர்கள், நோயாளிகளுக்கு உதவியாக ஒரு நாவிதர், தண்ணீர் கொண்டுவருபவர் ஆகியோர் பணிபுரிந்தனர். இவர்களுடன், மருந்து வைக்கும் இடத்தில் ஓராண்டுக்கான 20 வகையான மருந்துகள் எப்போதும் நோயாளிக்கு வழங்க தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

கி.பி. 1120 திருவாவடுதுறையுடையான் கோமதீஸ்வரர் கோவில் உள்ள திருவாவடுதுறையில் மாணவர்களுக்கு வாகபட்டரின் அஷ்டாங்க ஹிருதையாவும் மற்றும் சரக சம்ஹிதாவும் பாடமாக நடத்தப்பட்டன.

மேலும் முகமதியர்கள், இந்தியாவை வென்று நுழைந்தபோது (கி.பி.12 - கி.பி.15)அவர்களுடன் ஹக்கீம்களும் வந்தார்கள். இவர்களுடைய மருத்துவ நூல்கள் பெரும்பாலும், ஹிப்பாகரடீஸ், கேலன் போன்ற கிரேக்க மருத்துவ அறிஞர்களின் நூல்களிலிருந்தும், பழைமையான சமஸ்கிருத நூல்களிலிருந்தும் மொழிபெயர்க்கப் பட்டவையாகும். இவர்கள் அரசர்களுக்கும், மேல்தட்டு மக்களுக்கும் மருத்துவம் புரிந்தனர். இதே காலகட்டத்தில் கீழ்த்தட்டு மக்களுக்கும் கிராம மக்களுக்கும் சுதேசி மருத்துவர்கள் சிகிச்சையளித்தனர்.

### இந்தியாவில் மேலை மருத்துவம் கோவாவில் நுழைந்தது

இந்தியாவில் அலோபதி மருத்துவமனையை ஆரம்பித்தவர்கள் போர்ச்சுக்கீசியர்களே. அராபியர்கள், போர்ச்சுக்கீசியர்கள் மற்றும் டச்சு வணிகர்கள் இந்தியக் கடற்கரையை ஒட்டிய ஊர்களுக்கு ஆங்கிலேயர்களுக்கு முன்னரே வந்துவிட்டனர். வாஸ்கோடகாமா, கோழிக்கோட்டிற்கு (கள்ளிக்கோட்டைக்கு) 1498ஆம் ஆண்டு வந்தாலும், கேப்டன் அல்பான்சோ டி அல்டிகுவர்குயூ (1509-1515) கோவாவைப் பிடித்து, கிழக்குப் போர்ச்சுக்கீசியர் அரசிற்குத் தலைநகராக்கினான். இவருடைய முதன்மையான எண்ணம், மலபாரில் நடைபெறும் வணிகத்தை மேற்பார்வையிடுவதாகும். 1490ஆம் ஆண்டு கடைசியில் போர்ச்சுக்கீசிய சிப்பாய்களுக்குச் சிறிய அளவில் மருத்துவம் அளிக்க ஒரு மையம் இங்கு அமைக்கப்பட்டது. இதுவே பிறகு, அல்டிகுவர்குயூவினால் கூடுதல் மருத்துவ வசதிகளுடன் "ராயல் மருத்துவமனை" என்ற பெயரில் கோவாவில் 1510இல் திறக்கப்பட்டது. இதுவே ஐரோப்பியர்களின் முதல் அலோபதி மருத்துவமனை ஆகும்.

இதைத் தொடர்ந்து, தன் முப்பது ஆண்டு ஆய்வின் மூலம் கார்சியா டி ஓர்டா (Garcia Da Orta) என்னும் போர்ச்சுக்கீசிய மருத்துவர், இந்திய மூலிகை மருத்துவம் குறித்த நூலை 1563ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். அதன் பெயர், Coloquios Dos Simples E Drugas - (Discussions on Indian plants and drugs) என்பதாகும்.

இந்த மருத்துவமனை, இந்தியர்களுக்கு மட்டும் பயிற்சியளிக்காது, பொதுவாகப் பயிற்சி அளித்து, பின்னர் இவர்கள் மற்றைய போர்ச்சுக்கீசிய காலனிகளுக்கும் மருத்துவம் அளிக்க அனுப்பி வைக்கப்பட்டனர்.

### கோவா மருத்துவமனைச் சிறப்பு

1591ஆம் ஆண்டுக்குப் பிறகு, இம்மருத்துவமனை ஜெசுவர் கிறித்தவப் பிரிவினர் மேலாண்மைக்கு உட்பட்டு, ராயல் மருத்துவ மனையில் 1703இல்

Cipriamo Valadarews என்பவரால் சில மருத்துவப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பிறகு உலகில் சிறந்த ஒரு மருத்துவ மனையாகத் திகழ்ந்தது. பைராட் டி லாவில் (Pyrard De Lauel) என்ற யாத்திரிகர் சரியான ஆவணமின்றி கொச்சியில் ஊர்சுற்றிக்கொண்டிருந்த போது, உடல்நலமில்லாத நிலையில் பிடிபட்டு, இம்மருத்துவ மனையில் உள்நோயாளியாகச் சேர்க்கப்பட்டார். இவர் உலகம் சுற்றியவர். குறிப்பாக, ரோம் ஹோலிகோஸ்ட் மருத்துவமனை, மால்டா போர்வீரர்களுக்கான மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளைப் பற்றியும் அறிந்தவர். இவர் கோவா மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது, அது குறித்து தன் கருத்தைக் கூறும் நிலையில், மருத்துவமனையைப் பார்ப்பதற்கு, மருத்துவமனைபோல் இன்றி அரண்மனை போல் காட்சி அளித்தது என்றும், முகப்பில் Hospital Die Roy Nortru Seignoro என்று எழுதப்பட்டிருந்தது என்றும், படுக்கைகள் பட்டு உறையிடப்பட்டு, பருத்தியினால் ஆனதாகவும், தலையணைகள் வெள்ளைத் துணியினால் உறையிடப்பட்டு இருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மருத்துவர், அறுவை சிகிச்சை நிபுணர், உதவியாளர், நாவிதர் மற்றும் இரத்தம் அகற்றுபவர் ஆகியோர் ஒரு நாளைக்கு இரண்டு முறை நோயாளிகளைப் பார்வையிட வருகிறார்கள், நோயாளிகள் மொத்தம் 1500 பேர் உள்ளனர். இவர்கள் போர்ச்சுக்கீசிய போர் வீரர்களாகவோ அல்லது கிறித்தவ ஐரோப்பியர்களாகவோ இருந்தனர் என்றும், அம்மருத்துவமனையின் சிறப்பைப்பற்றி தம் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மருத்துவமனை, கோவாவில் தோன்றக் காரணம், 16ஆவது நூற்றாண்டின் கடைசி பத்து ஆண்டுகளில் துப்புரவு இன்மையால் கொள்ளை நோய் கடுமையாக ஏற்பட்டது. இதன் காரணமாக மக்கள் தொகை 4 லட்சமாக இருந்த இடத்தில் 1670இல் அது 40 ஆயிரமாகக் குறைந்தது. 1540இல் வைசிராய் D. Carcio Norouha சீதபேதியில் இறந்தார். பிறகு இதுபோல 10 வைசிராய்களும் கவர்னர்களும் கோவாவில் இறந்தனர். 1602 - 1682 வரை 25 ஆயிரம் சிப்பாய்கள் இறந்தனர். இந் நிலைமையில்தான் வைசிராய் 1687இல் வெளிநாடுகளுக்கான மாநில செயலருக்கு வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக, 1703இல் மருத்துவக் கல்வி போதிக்கப்பட்டு, பிறகு 1842இல் Panjim-இல் கோவா மருத்துவப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. பிறகு இதுவே 1888இல் கடற்படையினருக்கும், காலனி அரசுக்கும் என மாற்றியமைக்கப்பட்டது. இப்பள்ளியில் 1818ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற 67 மருத்துவர்களில் 43 மருத்துவர்கள் போர்ச்சுக்கீசியர் காலனி உள்ள நாடுகளுக்குப் பணிக்குச் சென்றனர்.

போர்ச்சுக்கீசியர், கோவாவைப் போலவே மதராசிலும் ஒரு மருத்துவமனையை நடத்தியுள்ளனர். போர்ச்சுக்கீசியர் தங்களுடைய வாணிபத்தைப் பெருக்க இயலாத நிலையில், வாணிபம் செய்ய வந்த டச்சுக்காரர்களும் சென்னைக்கு வடக்கே தங்களின் முக்கிய இடமான பழவந்தாங்கலில் ஒரு மருத்துவமனையை நடத்தினர்.


போர்ச்சுக்கீசியர்கள் 1498ஆம் ஆண்டிலேயே இந்தியாவிற்கு வந்திருந்தார்கள். டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் 17ஆம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் வணிகம் செய்ய முனைந்தனர்.

ஆங்கிலேயர்கள் தங்கள் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் 1600களில் தன்னந்தனியாக, வாணிபம் செய்ய மொகலாயப் பேரரசிடம் அனுமதி பெற்றதால், மற்ற ஐரோப்பியர்களைப் புறந்தள்ளி, நிமிர்ந்து நின்றனர்.

ஔரங்கசீப்பிற்குப் பிறகு, மொகலாயப் பேரரசு, வீழ்ச்சியுற்ற கால கட்டத்தில், 17ஆவது நூற்றாண்டு கடைசியில் ஆங்கிலேயர்கள் வங்கத்தில் நிலை கொண்டனர்.

### ஆங்கிலேயர் வணிகம் செய்ய அடித்தளம்

இந்தியாவிற்கு வந்த முதல் ஆங்கிலேயத் தூதுவர் சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe). இவரே மொகலாயப் பேரரசர் ஜஹாங்கீரைச் சந்தித்து, 1615 வணிகத்திற்காக இசைவைப் பெற்றவர். பெரும்பாலான ஆங்கிலேய வணிகர்கள், சூரத், கோவா வழியாகவே, இந்தியாவிற்கு வந்து இறங்கினார்கள். இவர்கள் குறைந்த அளவே மருத்துவம் செய்ய அறிந்திருந்தனர். என்றாலும், இம்மருத்துவம்கூட அன்றைய சுதேசி மருத்துவர்களான ஆயுர்வேத, யூனானி மருத்துவர்களின் புருவங்களை உயர்த்தி, வியப்புடன் பார்க்கும் அளவுக்கு இருந்தது. எடுத்துக் காட்டாகச் சக்கரவர்த்தி ஷாஜஹானின் அன்புக்குரிய மகள் ஜகந்நரா (Jehanare) தீக்காயங்களால் 1644 ஏப்ரல் 6ஆம் தேதி பாதிக்கப்பட்டு, ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவர்களால் பல வாரங்கள் சிகிச்சை பெற்றும் குணப்படுத்தப்படாத நிலையில், கல்கத்தாவில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கிழக்கிந்தியக் கம்பெனி கப்பலில் டாக்டர் காபிரியல் பிரொடன் இருப்பதை அறிந்த ஷாஜஹான், அவரை அங்கிருந்து டெல்லிக்கு வரவழைத்து மருத்துவம் அளித்ததன் காரணமாக, மன்னரின் மகள் குணமடைந்தாள். அப்போது ஷாஜஹான், மருத்துவம் பார்த்ததற்கான கட்டணம் எவ்வளவு என்று வினவியபோது, அதற்கு அந்த மருத்துவர், தனக்குப் பணம் எதுவும் தேவையில்லை என்றும், அதற்குப் பதிலாக வங்காளத்தில் தாராளமாக வாணிபம் செய்ய உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஷாஜஹான், ஆங்கிலேயர் மட்டும் வங்கத்தில் வணிகம் புரிய இசைவளித்தார்.



அதன்பின்னர் மருத்துவர் பிரொடன், வங்காளத்தில் வைசிராயாக இருந்த ஷாஜஹானின் இரண்டாவது மகன் சுஜாவிற்கும் வெற்றிகரமாக சிகிச்சை புரிந்தார். இந்த இரண்டு வெற்றிகரமான மருத்துவ சிகிச்சைகள்தான் ஆங்கிலேயர் வங்கத்தில் சிறப்புடன் காலூன்ற உதவின என்றால் அது மிகையில்லை.

இதற்குப்பிறகு, 1690இல் ஜாப் சர்நாக் (Job Charnok) என்பவர் தரிசாகத் தன்னிடம் இருந்த நிலத்தில் ஒரு புதிய நகரை உருவாக்கினார். இதுவே பிறகு, கல்கத்தா எனப் பெயர் பெற்றது. இந்த இடத்தில் கொள்ளை நோய்களான காலரா, பெரிய அம்மை நோய்கள் பரவியதால் 1707இல் ஒரு மருத்துவமனையை உருவாக்க வேண்டிய கட்டாயத்திற்கு பிரிட்டிஷார் உள்ளானார்கள் (History of Medicine in Kerala, p.3).

ஆங்கிலேயர் வங்கத்தில் கால் பதிக்க (1725-1774), இராபர்ட் கிளைவ் பிளாசி யுத்தத்தில் (1757) கல்கத்தா நவாபை வென்று, அவரை அதிகாரமற்றவராக்கி, பிறகு கிழக்கு இந்தியக் கம்பெனி என்ற பெயரில் வங்கத்தில் நிலைத்த பிறகு, தங்கள் ஆட்சியை மற்ற மாநிலங்களுக்கும் பரவச் செய்தார்.

ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் சண்டை நடைபெற்றது. கிளைவ் - நவாப் இடையே வங்காளத்தில் நடைபெற்ற சண்டைக்குப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகே (1766) அவர்கள் இராணுவத்திற்காகத் தனிப்பட்ட மருத்துவர்களை நியமித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் மற்றைய ஐரோப்பிய கம்பெனிகளுடன் சண்டையிட்டு, வென்று இந்தியாவில் வணிகம் செய்யும் ஏகபோக கம்பெனி என்ற நிலைக்குத் தங்களை உயர்த்திக் கொண்டனர். இக்காலத்தில், அரசாங்க நடவடிக்கைகளுடன் மருத்துவ சேவையையும் தொடங்கி இராணுவத்தையும் நிலைநாட்டினர்.

இதன்படி கிழக்கிந்தியக் கம்பெனி தங்கள் தொழிற்சாலை மற்றும் இராணுவ வீரர்களுக்கு முதன்முதலில் மருத்துவம் புரியும் பணியில் 1614இல் இலண்டனில் புகழ்பெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவர் டாக்டர் ஜான் வுடால் (John Woodall) சர்ஜன் ஜெனரலாக அமர்த்தப்பட்டார்.

**பிரெஞ்சு ஊர் சுற்றி மூலம் இந்திய மருத்துவம் கேலி செய்யப்படுகிறது**

1652இல் பிரெஞ்சு மாண்டி பில்லியரில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர் பர்னியர் (Bernier), கான்ஸ்டாண்டிநோபில் வழியாகச் சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்தபின், 1658ஆம் ஆண்டு மொகலாய சக்ரவர்த்தியான ஷாஜஹானின் மூத்த மகன் தாரா ஜிகோ (Dara Shikoh)-விற்குத் தனிப்பட்ட மருத்துவராகப் பணிபுரிந்தார். அப்போது தாராவின் மனைவிக்குக் காலில் ஏற்பட்ட சிகப்பு நிற தோல் புண்ணைக் (Erysipelas) குணமடையச் செய்தார். இந்தியாவில் இம்மருத்துவர் 12 ஆண்டுகள் இருந்துள்ளார். இவரால் மனிதனின் இரத்த ஓட்டத்தை அறிந்த வில்லியம் ஹார்வியின் கண்டுபிடிப்பு மற்றும் பிரான்ஸ் ஜீன் பீகூட் (Jean Peoquet) உடல்கூறு நூல் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு அவை இந்திய மருத்துவர்களால் அறியப்பட்டன.

இந்திய மருத்துவர்களைப் பற்றிக் கூறும்போது இம்மருத்துவர், ''இந்திய மருத்துவர்கள் உடற்கூறு பற்றி அறியாதவர்கள்,'' என்று கூறி அதற்குக் காரணம், மனித உடலையோ அல்லது மிருக உடலையோ இவர்கள் கூறுபோட்டு அறிந்ததில்லை என்று கூறுவதோடு, இந்துக்கள் ஏதோ எண்ணிப்பார்த்ததுபோல, மனித உடலில் 5000 சிரை இரத்த நாளங்கள் உள்ளன என்று கூறுகிறார்கள் என்று எள்ளி நகையாடியுள்ளார்.

மேலும் இவர்கள், இறந்த உடலை ஆற்றின் அருகில் எரித்து, அதை ஆற்றில் கலக்குவதையும் மற்றும் இறந்த சடலத்தை ஆற்றில் தூக்கி எறிவதையும் கண்டித்து, அதற்கான காரணங்களாகச் சொல்லப்படும் சில மூடப் பழக்கவழக்கங்களையும் மறுத்து எழுதியுள்ளார். மேலும் உடற்கூறு பற்றி அறியாதிருப்பதற்கான காரணத்தைக் கூறு கையில், பிணத்தைத் தொடுவது கூடாது என்ற மூட நம்பிக்கையினால்தான் மருத்துவர்கள் உடல்கூறு பற்றி அறியாது இருக்கின்றனர் என்றும் குறைபட்டுக்கொள்கிறார்.

இவர் மொகலாய அரசருக்கும், ஹார்வியின் கண்டுபிடிப்பான இரத்த சுழற்சியை விளக்க பிரெஞ்சு ஜீன் பீ கூட்டின் உடல்கூறு விளக்கத்தைக் கூறி விளக்கியது சரித்திரச் சான்றாகும்.



கட்டுரை

# அரசியலுக்கு வேண்டாமா புதுத்திசை?

 க.பழனித்துரை

சமீபத்தில் (ஜனவரி 23 ஆம் தேதி) முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இந்திய தேர்தல் ஆணையத்தின் முதல் ஆணையர் சுகுமார்சென் என்பவரின் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றினார். அவர் எப்பொழுதுமே இப்படிப்பட்ட சொற்பொழிவுகளை திறம்பட ஆய்வு அறிக்கைகள் போல் தயாரித்து அதில் தன் கருத்துக்களை ஆணித்தரமாக ஒரு வல்லுனராக எடுத்து வைக்கும் திறன் படைத்தவர். அந்த வகையில் இந்த அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவாற்றும்போது ஒரு கருத்தை முன் வைத்துள்ளார். அந்தக் கருத்தை ஊடகங்கள் அனைத்தும் விவாதப் பொருளாக்கி செய்திகள் வெளியிட்டன. “இன்று பொதுவெளியில் பொதுமக்களும், மாணவர்களும், இளைஞர்களும் அமைதியான வழியில் போராடுவது என்பது நம் மக்களாட்சியில் வரவேற்கத்தக்கது. இந்தப் போராட்டங்கள் நம் மக்களாட்சியை வலுப்படுத்தும் என்பதுதான் அவர் கூறிய கருத்து. இந்தக் கருத்து எந்தச் சூழலில் முக்கியத்துவம் பெறுகிறது

என்றால், "மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் தங்கள் கல்வி பயிலச் சென்றார்களே தவிர அரசியல் செய்வதற்கு அல்ல, எனவே, அவர்கள் பொதுப்பிரச்சினைகளுக்கு அரசியல் கட்சிகளுடன் இணைந்து போராடக்கூடாது" என்று ஒரு விளக்கத்தை மற்றொரு அரசியல் பிரிவு கூறும் நிலையில்தான், பிரணாப் முகர்ஜியின் கருத்து பொது வெளியில் விவாதத்திற்கான இடத்தைப் பிடித்துள்ளது.

உலக வரலாறு நமக்கு உணர்த்திய பாடம் மக்களாட்சி என்ற முறை நீண்ட நெடிய போராட்டங்களுக்குப்பின் வந்தது என்பதைத்தான். மக்களாட்சி சிதிலமடைகின்றபோதெல்லாம் போராட்டங்கள் மூலம்தான் மக்களாட்சியை உலகத்தில் சரி செய்திருக்கின்றனர். மக்கள் எப்படி ஒரு சமூகத்தை ஆதிக்கப்பிடியிலிருந்து விடுவிக்கப் போராடுகின்றார்களோ, அதே நிலையில் சமூகத்தை மக்களாட்சிப்படுத்துவதற்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மக்களாட்சிக் கட்டமைப்புக்குள்ளும், மக்களாட்சி விழுமியங்களுக்குள்ளும் செயல்பட வைக்க மக்கள் போராடுவது தேவையாக இருக்கின்றது. அமைதியான வழியில் நடக்கின்ற போராட்டங்கள் அனைத்தும் மக்களாட்சிக்கான பாதுகாப்புச் செயல்பாடுகளே. இப்படிப்பட்ட போராட்டங்கள் மக்களுக்கு தொடர்ந்து ஜனநாயகக் கல்வியையும் வழங்கிக் கொண்டேயிருக்கின்றன. மக்களாட்சியில் வாழ விரும்புவோர் பொது நிகழ்வுகள், அது போராட்டமாக இருந்தாலும், ஆர்ப்பாட்டமாக இருந்தாலும், அரசியல் மாநாடாக இருந்தாலும், தேர்தலாக இருந்தாலும், அதில் பங்கேற்பதன் மூலம்தான் தனக்குத் தேவையான மக்களாட்சிக் கல்வியை கற்றுக்கொள்கின்றனர். எனவே போராட்டங்கள் என்பதும் ஒருவித மக்களாட்சி நிகழ்வு என்பது பலருக்குப் புரிவதில்லை. பலர் புரிந்தாலும் அதை அரசாங்கத்திற்கு எதிராக நடக்கும் கலவரம் அல்லது கலகங்கள்போல் சித்தரித்து அமைதிக்கும் வளர்ச்சிக்கும் எதிரான நடவடிக்கையாக விமர்சனங்களை வைக்கின்றனர்.

இன்று இந்தியாவில் நடைபெறும் போராட்டங்கள் பெரும்பாலானவை மாணவர்கள் நடத்துவது, ஆதிவாசிகள் நடத்துவது, இளைஞர்கள் நடத்துவது, விவசாயிகள் நடத்துவது. இவர்களுக்குப் பின்தான் அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. நம் அரசியல் கட்சிகள் பின்னணியில் நின்று செயல்படுவது என்பது மக்களாட்சியில் வரவேற்கத் தகுந்த ஒன்றல்ல. அடிப்படையில் மக்கள் பிரச்சினைகளுக்குப் போராட வேண்டிய முக்கியப் பொறுப்பு ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் கட்சிகளுக்குத்தான். அப்படி அரசியல் கட்சிகள் மக்கள் பிரச்சினைகளுக்காக நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவாக செயல்படுபவர்களாகத்தான் மக்கள் இருக்க வேண்டும். மக்கள் போராட்டங்களை அரசியல் கட்சிகள் தூக்கிப் பிடித்து நடத்துவதில்தான் வெற்றி இருக்கிறது. ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லை. மக்கள் போராடுகின்றனர். அரசியல் கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்து விட்டு மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு தந்து விட்டு நகர்ந்து விடுகின்றனர். ஆனால் அரசியல் நிகழ்வுகளை நடத்திக்கொண்டு இருக்கின்றன அரசியல் கட்சிகள். இதனால் மக்கள் போராட்டங்கள் தோல்வியைச் சந்திக்கும் சூழலில் உள்ளன. மக்களாட்சியில் இது ஒரு எதிர்மறை நிகழ்வு.

ஆனால் இன்று மையத்திலும் மாநிலங்களிலும் எதிர்கட்சிகளாக விளங்கும் பெரிய கட்சிகள் போராட்டங்களை முன்னெடுக்காமல், ஆர்ப்பாட்டங்களாக நடத்தி அரசியல் நிகழ்வாக முடித்துக்கொள்கின்றன. அத்துடன் பெரும்பலம் கொண்ட அரசியல் கட்சிகள் மக்கள் போராட்டங்களில் கலந்து அந்தப் போராட்டங்களை ஆர்ப்பாட்டங்களாக மாற்றியமைத்து விடுகின்றனவே தவிர அந்தப் போராட்டங்களை முன்னெடுக்க இயலாமல் தடைகளை உருவாக்கி விடுகின்றன என்பதுதான் இன்றைய சோக வரலாறு. கடந்த முப்பதாண்டு காலமாக சந்தைச் செயல்பாட்டால் மறக்கடிக்கப்பட்ட போராட்டங்கள் இன்று சந்தையின் தாக்கத்தால் தன்னெழுச்சியாக பாதிக்கப்பட்ட மக்கள் வீதிக்கு வந்து போராட ஆரம்பிக்கின்றனர். எனவேதான் இந்தப் போராட்டங்கள் என்பது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்று வர்ணித்து விளக்குகின்றனர் சந்தைக்குப்பின் நிற்கும் கருத்தாளர்கள். உலகில் கோட்பாட்டு ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை என்னவென்றால் மக்களாட்சி என்பதுதான் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உறுதுணையாக விளங்கும் காரணி. மக்களாட்சிதான் ஏழைகளுக்கு ஏழ்மை குறைப்பதற்காகவும் முன்னேற்றம் அடைவதற்காகவும் செயல்படும் காரணி என்பது உலகத்தில் ஆய்வுகள் மூலம் நிரூபணமான உண்மை. மக்களாட்சி அமைப்புக்கள் இல்லாததும், மக்களாட்சி அமைப்புக்கள் இருந்தும் அவை செயல்படாமல் இருப்பதும்தான் தீவிரவாதம் வளர்வதற்கும் பரவுவதற்கும் மிக முக்கியமான காரணியாக விளங்குகின்றன என்பதும் உலகில் கண்டறியப்பட்ட உண்மை. மக்களாட்சி மலர்வதற்கும் மற்றும் நீடித்து செயல்படுவதற்கும் பல அடிப்படையான காரணிகள் ஒரு சமுதாயத்தில் இருந்திட வேண்டும்

என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பொது அமைதி, மக்களுக்கு வேலைவாய்ப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை, ஆட்சியின் ஸ்திரத்தன்மை போன்ற காரணிகள்தான் மக்களாட்சி ஒரு சமுதாயத்தில் வேரூன்ற காரணமானவை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மக்களாட்சியில் மேலோங்கி நிற்கும் நாடுகள் தரும் செய்தி என்னவென்றால், ஏழ்மையை அகற்றாதவரையில் மக்களாட்சி முறையுடன் செயல்பட வாய்ப்புக்கள் குறைவு என்பதைத்தான். பொருளாதார வளர்ச்சி மேலோங்க மேலோங்க மக்களாட்சியை ஆழப்படுத்தும் அகலப்படுத்தும் செயல்பாடுகள் நடந்தேறிடும் என்பதையும் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. ஆனால் இன்னொரு நிலையில் மக்களாட்சிக்கு இடையூறு பொருளாதாரம் கொண்டு வந்து சேர்க்கும். அதாவது வளர்ந்த பொருளாதாரம் பிரிக்கப்படாமல் குவிக்கப்பட்டால், ஏற்றத்தாழ்வுகள் எல்லையில்லா அளவு மேலோங்குமேயானால், அந்த நாடுகளில் மக்களாட்சி அதன் விழுமியங்களை இழக்க ஆரம்பித்துவிடும். இதைச் சரிசெய்ய போராட்டம் என்பதும் உதவியாக இருக்கும். ஆனால் அது போராட்டமாகவே இருக்க வேண்டும். அதற்கு மக்கள் சிறு சிறு தியாகங்களைச் செய்ய வேண்டும். உலகெங்கும் வளரும் ஜனநாயகத்துக்கு எதிர்ப்பு அலையை உருவாக்குவது யாரென்றால் சந்தைக்குத் தரகு வேலை பார்க்கும் அரசியல் தலைவர்கள்தான் என்பதும் நிரூபணம் ஆகியுள்ளது.

மக்களாட்சியைப் பாதுகாக்க போராட வாருங்கள் என்று மக்களை அழைக்கின்றனர் அரசியல் கட்சிகள். காங்கிரஸ் கட்சி அரசியல்சாசனச் சட்டத்தைப் பாதுகாக்க வாருங்கள் என்று அழைக்கிறது. மாநிலக் கட்சிகள் உங்கள் குடியுரிமையைப் பாதுகாத்திட போராட வாருங்கள் என்று அழைக்கின்றன. அனைவரும் மக்களை போராட அழைக்கின்றனர். உலகத்திலேயே மிகப்பெரிய அரசியல் கட்சி என்று கூறும் பாரதிய ஜனதா கட்சி நாட்டைப் பாதுகாக்க அரசுடன் போராட வாருங்கள் என்று அழைக்கின்றது. ஆக, மக்கள் போராட்டத்திற்குத் தயாராகிப் போராட ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் போராட்டங்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும்; மக்களிடம் செய்திகள் போய்ச்சேரும். உண்மையின் அடிப்படையில் மக்கள் தெளிவு பெறுவார்கள். அந்தத் தெளிவினைப் பெற்று மக்கள் செயல்பட இன்று இந்தியாவில் மாற்றுத் தலைமையும், மாற்று முன்னேற்றப் பொருளாதாரப் பாதையும், மாற்று அரசியல் திட்டங்களும் கொண்ட புது அமைப்புக்கள் உருவாக வேண்டும். அதுதான் இன்றைய தேவையாகும்.


போராட்டங்களைத் தடுப்பவர்கள் மக்களாட்சி பற்றிய புரிதல் குறைவாக இருப்பவர்கள். அது மட்டுமல்ல தேர்தல்மட்டும்தான் மக்களாட்சி என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள், தேர்தலைத் தாண்டி நடைபெறும் மக்களாட்சிச் செயல்பாடுகளை நாட்டு நலனுக்கு எதிரானது, மேம்பாட்டுக்கு எதிரானது என்று சிந்திப்பார்கள். எனவே மக்களாட்சியைப் பற்றிய ஒரு பொதுப்புரிதலை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டால் போராட்டங்கள் என்பது மக்களாட்சியில் கற்றுத்தரும் ஒரு பாடமாகக் கருதிவிடுவார்கள். அடுத்து அரசியல்சாசனத்தை முறையாக மக்களிடம் எடுத்துச் சென்றுவிட்டால், பொதுமக்கள் என்பவர்கள் நல்ல குடிமக்களாக மாறிவிடுவார்கள். நல்ல குடிமக்களாக மக்கள் மாறிவிட்டால் அரசோ அரசியல் கட்சிகளோ மக்களை ஏமாற்ற முடியாது.

இன்றைய நிலையில் நம் அரசியல் கட்சிகள் மக்கள் மத்தியில் நன் மதிப்பை இழந்த நிலையில் செயல்பட்டுக் கொண்டுள்ளன. ஊழலில்லாமல் அரசியல் செய்ய முடியாது என்ற சூழலுக்கு கட்சிகளைக் கொண்டு வந்து விட்டனர். பணமற்ற கட்சிகள் திகைத்து நிற்கின்றன. வேறு வழியில்லாமல் தங்களுக்கு ஒரு மக்களாட்சி அரசு வேண்டும் என்ற காரணத்தால் மக்கள் வாக்களிக்கின்றார்களே தவிர, இப்படிப்பட்ட கட்சிகள் வேண்டும் என்று வாக்களிப்பதில்லை. அரசியல் கட்சிகளால் இதற்குமேல் வளர முடியவில்லை. மக்களுக்குப் புதுத்திசையைக் காட்ட முடியாமல் பணமூட்டையை வைத்து அரசியல் நடத்தி அலுத்து நிற்கின்றன. இன்றைய சூழலில் அரசாங்கம் என்ற அமைப்பு மக்களின் தேவைகளையும், அபிலாஷைகளையும் தீர்க்க முடியாமல், அதன் தோல்வியை ஒப்புக்கொண்டு மாற்றத்திற்காகக் காத்து நிற்கிறது. பொருளாதார வளர்ச்சியை முன்னிருத்திய மக்கள் செயல்பாடு மற்றும் அரசின் செயல்பாடு என்பது மக்களை பொருள்களின் மோகம் கொள்ள வைத்து பிரச்சினைகளில் சிக்க வைத்துவிட்டனவேயன்றி, சமூகத்தில் நிலைத்த மேம்பாட்டைக் கொண்டு வர இயலவில்லை. எனவேதான் கட்சி அரசியலைத் தாண்டி எதாவது புதிய முறை அரசியல் உள்ளதா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. பொருளாதார வளர்ச்சி என்பதைத் தாண்டி வேறு வளர்ச்சி முறை உள்ளதா எனக் கேட்க வேண்டி உள்ளது.


இந்தச் சந்தைச் செயல்பாட்டில் உள்ள வளர்ச்சி, நுகர்வு என்பதைத் தாண்டி மக்களுக்கு ஏதாவது புதுத்திசையைக் காட்ட முடியாதா என்பதுதான் இன்றைய கேள்வி. அரசியல் கட்சிகளைத் தவிர்த்து புதிய அரசியலை உருவாக்க முடியாதா என்பதுதான் இன்று நம்மிடம் எழும் கேள்வி.

●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




₹ 315/-





₹ 120/-





₹ 100/-





₹ 350/-




₹ 120/-





₹ 195/-




₹ 20/-




₹ 45/-




₹ 80/-




₹ 70/-





₹ 85/-




₹ 50/-

நூல் மதிப்புரை




# காலம் கருதி வரும் ஒரு கவிக்குரல் - கபீர் சொல்கிறான்...

முனைவர் கிருங்கை சொ. சேதுபதி

பள்ளிக்குப் போகுமுன்பே, எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்த என் தந்தையாரின் நூலகத்தில் ஏராளமான புத்தகங்கள் உண்டு. அன்றாடம் எடுத்துப் படிக்கச் சொல்லும் புத்தகங்களில், கபீர்தாசர் சரித்திரமும் இருக்கும். ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர், அன்னை சாரதாதேவி, சுவாமிவிவேகானந்தர், அருட்பிரகாச வள்ளலார் என்று தொடரும் வரிசையில் கபீர்தாசரும் வருவார். துணி அட்டை போட்ட க்ரௌன் அளவிலான புத்தகம், நீல வண்ணத்தில். பலமுறை படித்த அதன் பக்கங்களை எனக்கும் முன்னதாக எப்படித்தான் அவ்வளவு விரைவில் கரைத்துக் குடிக்கமுடிந்ததோ, கரையானால்! தனியாக அன்றிக் கூட்டாகக் கூடிக் கரையான் வகையறா, அட்டையை மட்டும் விட்டுவிட்டு உள்ளே அரித்துக் கரைத்து விழுங்கிவிட்டது. அவற்றுக்கு அடுத்த பிறவி மனிதப்பிறவியாய் அமையின் கபீர்தாசர் சரித்திரத்தை என்னைவிடவும் அதிகமாய் அவை உள்வாங்கிவைத்திருக்கும் என்று நினைக்கிறேன். ‘ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து’ அல்லவா? அது ஒருவற்கு மட்டும்தானா என்ன?

அதற்குப் பின்னர், சூழல் வாய்க்கிறபோதெல்லாம் வாசிக்கக் கிடைக்கும் கபீரின் வாசகங்களை, மீளவும் உள்வாங்கிக் கொள்ள, எழில்முதல்வன் மொழிபெயர்த்த ‘கபீரின் நூறு பாடல்கள்’ கைவசமானது. எந்த இடத்தில் இருந்து கபீரைப் படித்தாலும் என் சொந்த ஊரில் இருக்கிற நினைவை, அவர் கொண்டுவந்துவிடுவார். மறைந்து ஒரு மாமாங்கத்துக்கும் மேலான என் தந்தையாரும், அவர் ‘மாமா’ என்று அழைக்கும் ‘முகம்மது அலி மச்சானின்’ அத்தாவும், அப்பாவின் சீடர்களுள் ஒருவரான, சுலைமான் அண்ணனும் என் மனதுக்குள் நிறைவார்கள். அவர்கள் நிறைந்த, பாரதியின் ‘தராசுக் கடை’ ஒத்த எங்கள் பலசரக்குக் கடையில், கபீரையும், பரமஹம்ஸதாசரையும் நான் வாசிக்கக்கேட்டவர்கள் அவர்கள். அது ஒரு சத்சங்கம்.

அது மட்டுமா? எங்கள் ஊரில் ராமர் பஜனைமடமும் உண்டு. பள்ளிவாசலும்

உண்டு. வாரந்தவறாமல் சனிக்கிழமைதோறும் பஜனைமடத்தில் அழைத்துச் சென்று பாடிப் பயில்விப்பது என் தந்தையின் வழக்கம். அதில் தவறாமல் இடம்பெறுகிற பாடல்களில் ஒன்று, 'ரகுபதி ராகவ ராஜாராம்'. அந்தப் பாடலில் இடம்பெறும், 'ஈஸ்வர அல்லா தேரே நாம்' என்ற தொடரைப் பாடுகிறபோது, 'ராமநாமத்தையும்' இணைத்து எண்ணிக் கொள்வேன்.

உறங்கிவிழிக்கிற சில நாட்களில் எதேச்சமாக நினைவுக்கு வரும் முகங்களில் ஒன்று கபீரின் திருமுகம். கூடவே, அவர்தம் இந்தக் கவிதையும்.

**'கனவில் முனகும்போது மறந்தும் (அந்தப்)**
**பெயர் சொல்பவனுடைய காலுக்கு என்**
**தோல் செருப்பு'**

உடனே, மனதில் கனல் அனல, 'அந்தப் பெயர்' யாருடையது என்று தேடுவதற்கு வேலையேயின்றி, அவர் இன்னொரு கவிதையில் சொல்லுவார்.

**'ராம் ரஹீம் கேசவன் கரீம்–**
இவர்களுக்கு இடையே ஒரு மாறுபாடு இல்லையே,

**உனக்கு இருவரும் ஒன்றுதானே**
**'ஏக மேநத்விதீயம்'– ஒன்றே உண்டு.**
**இரண்டாவது கிடையாது.**
**நம்முடைய ராமன் ரஹீமே.**
**கரீம் கேவசன்.**
**அல்லாவும் அதே ராமனே.**
**ஐயத்தை ஒழி.**
**விசும்பரர்– உலகத்தைத் தாங்குபவர் ஒருவரே.**
**இரண்டாமவர் வேறு ஒருவரும் கிடையாது.**

இப்படியான நல்ல உள்ளத்துடன் உலகத்து எழுந்தருளுங்கள்...'

அந்த விடியல் அதிக உற்சாகம் நிரம்பியதாகவே இருக்கும். கூடவே, இன்னொரு ஏக்கமும் எழும். மொழிபெயர்ப்பில் இந்த வாசகத்தைப் படிக்கிறமாதிரியே மூலமொழியில் அவர்தம் பாடல்களைக் கேட்டால்...?

அதையும் சாத்தியமாக்கியது, ஆரோவில். வடக்கிலிருந்து வந்த கபீர்தாசரின் அருள்தொண்டர்கள், இருநாட்களோ என்னவோ, 'கபீர் சங்கீதத்தை, ஆங்கில விளக்கத்தோடு, 'பாரத்நிவாஸில்' வழங்கியது கேட்கப் பரவசம்...

அந்தக் கணத்தில் என் கிருங்காக்கோட்டை ராமர் பஜனைமடத்தில் இருக்கிற பக்தியுணர்வும் தானாக எழுந்தது. அதுவும் இதுவும் மாறிமாறி ஒன்றிய அந்தப் பொழுதில், 'கபீர் தரிசனம்', குபீரென நிகழ்ந்தது.

விழிமூடித் தியானித்த நிலையில் உபதேசம் செய்யும் பாவனையில், அவர் திருமுகத்தோற்றமே, அலாதி...

இப்படியான உணர்வுகளை என்னுள் மீளவும் எழுப்பியது, அண்மையில் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்ட, 'கபீர் சொல்கிறான்... (கபீர்தாசரின் நூறு கவிதைகள்) என்னும் நூல். கவீந்திரராகிய இரவீந்திரர் (இரவீந்தரநாத் தாகூர்) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததில் இருந்து தமிழாக்கித் தந்தவர், டாக்டர் வெ.ஜீவானந்தம். சன்னக்குரலில் மந்திரம்போல் அவர் சொல்லும் வாசகங்களைக் கேட்கிறபோது அவர்தம் கண்களைப் பார்ப்பேன். அதில், சாந்தமாய்க் கனலும் அகல்ஒளிச்சுடர். புத்தகத்தைத் திறக்கிறபோது, அதனோடு தொடர்புடைய மக்களையும் நினைக்காமல் எப்படி முடியும்?

அப்போதுதான் ஆரோவில்லில் இருந்து, அக்கா (கவிஞர் இரா.மீனாட்சி) கைபேசி வாயிலாக அழைத்தார். இந்த விவரத்தைச் சொன்னபோது, தாகூர் மொழிபெயர்த்த ஆங்கிலக் கவிதைகளின் நகல்பிரதிகள் நம் கைவசம் இருந்ததையும், அவர் காட்டியதையும் நினைவுகூர்ந்தார். இப்படியான நல்லுணர்வுகளுடான நல்லோரையில் இந்த நூலின் உள்ளே கண்ணடி பதித்தேன்.

சொல்லருவியாய் அப்துல் காதரின் வாழ்த்துரை, 'எமதர்மனும் உயிர் கொடுத்துப் படிக்க விரும்பும் சமதர்ம சாத்திரம்' இப்படிச் சொல்ல, கவியருவியான காதருக்குத்தான் வரும்.

வசனநடையில் கோட்டையூர் ஏ.கே. செட்டியார், தாகூரின் 'கீதாஞ்சலியைத்' தந்ததுபோல், ஈரோடு மருத்துவர் வெ.ஜீவானந்தம், தாகூர் வழியில் தமிழாக்கித் தந்த கபீர், விழிகளில் ஒளிபாய்ச்சுகிறார்.

கண்கள் பரவசத்தோடு எழுத்துகளின்மீதூர, காதுகளில், மௌனம் கபீரின் ஞானத்தை முணுமுணுக்கிறது. அமுதூறும் உணர்வின் பிரவாகத்தில், இந்தப் பூமி, மண் பானையாகிறது. வனைபவனும் உள்ளே இருக்க, அவனை வணங்குபவனும் வனங்களும், எழுகடல்களும், எண்ணற்ற விண்மீன்களும் மாயக்கல்லும், மதிப்பிடுபவனும் ஒன்றாக, ஏகாந்த நாதம் இதனுள்

*எழுகிறது. வற்றாச்சுனைகளும் சுரக்கின்றன. கபீர் சொல்கிறார்:*

**கபீர் சொல்கிறேன்...**
**‘கேள்... என் சகோதரனே**
**என்அன்பு இறைவனும்**
**இதனுள் தான்...’** (பா-6, ப.13)

*பரிபூரண தரிசனம். பக்கத்தில் என் பாலபருவத்தோழன் துங்கப்துல் ரகுமானும், ஜெயபாரதியும், கோபிநாத்தும், கூடவே, ஜோசப் சார் மகள் இளவரசியும்... ‘இந்தக் கபீர், முஸ்லீமா? இந்துவா? என்ன சாதி?’ எங்கள் ஊரைச் சார்ந்த யாரோ ஒருவர் கேட்பது மட்டும் கேட்கிறது. முகம் தெரியவில்லை. இது ஒருவேளை எங்கள் ‘தராசுக் கடை’யில் கேட்ட குரலாகவும் இருக்கும். தேடிப் பார்க்கலாம் என்று சற்றே மூடியிருந்த புத்தகத்தைத் திறந்தால், முதற்பாடலில் கபீர் கேட்கிறார்:*

**‘என் சேவகனே,**
**அங்கே யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய்?**
**இதோ... நான்.**
**உன்னருகில் உள்ளேன்.**
**நான் அந்த ஆலயத்திலில்லை.**
**நான் அந்த மசூதியிலுமில்லை.**
**நான் காபாவிலுமில்லை.**
**கைலாயத்திலுமில்லை.**
**நான் சம்பிரதாய சடங்குகளில்**
**யோகாவில் துறவில்**
**எதிலும் அடங்கியவனல்ல**
**நீ எனது உண்மை சேவகனானால்**
**என்னை நீ இங்கே**
**இப்பொழுதே காணலாம்.”**(பா.1,ப.11)

*எப்படி? எங்கே? என்ற கேள்வி என் மனதுள் எழுகிற அதே கணத்தில் மீளவும் கபீர் என் முன்.*

**கபீர் சொல்கிறேன்...**
**‘ஓ... யோகியே**
**கடவுள் எல்லா மூச்சிலும்**
**மூச்சுக்காற்றாய் உள்ளான்...’**(பா-1,ப.11)

*‘எல்லார் மூச்சிலுமா? எல்லா மூச்சிலுமா?’ சந்தேகம் எழும்ப மீளவும் கண் பதிக்கிறேன். ‘எல்லா மூச்சிலும். சரிதான். தாவரங்களும் சுவாசிக்கின்றன. நானும். கபீர் வாசனை, குபீரென எழுகிறது. கவியருவி அப்துல் காதர் எழுதியதுபோல,* ***‘ஆன்மாவில் அத்தர்வாசல் திறக்கும் மகிழ்ச்சி சுரக்கிறது.’****துங்குவுக்கு, அத்தர் வாசனையாக இருக்கலாம். இளவரசிக்கு மெழுகின் மணமோ, வேறு சென்ட்டின் மணமோ எழுந்திருக்கலாம். எனக்குள் சாம்பிராணி வாசனை... இவையெல்லாம் கலந்தும் கடந்தும் எழும் இறைவாசனை...*

*மகாகவி பாரதி மேற்கோளிட்ட தாயுமான வாசகமும் கூடவே நினைவுக்குள் மலர்கிறது.*

*வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த*

*பூசல் என்று போமோ புகலாய் பராபரமே*

*பூசல் போய், ஏசலும் போய், ஈசனாய், அல்லாவாய், இயேசுவாய், இராமனாய், எல்லாமுமாய் நிறைகிற காற்றாய் வலம் வருகிறான், இறைவன். கவியருவி காதர் மேல் விளக்கம் அளிக்கிறார்.*

*“காற்றிற்கு வடிவமில்லை; வண்ணமில்லை; சுவையில்லை; காற்றை யாராலும் அடக்கி, அடைத்துவிட முடியாது. காற்றுக்கு யாரும் தனியுரிமை கொண்டாட முடியாது. குறிப்பாக, எல்லோரையும் தோஷமின்றித் தொட்டுத் தழுவுகிறது. தீண்டாமைக்குக் காற்றிடத்தில் வேலையே இல்லை. வேறுபாடில்லாமல் எல்லா உயிர்களையும் இயக்குவது காற்றுத்தான்...” (ப.6)*

*இந்தக் காற்றில்தான் அன்று கபீர் நேரிடையாகச் சொன்ன வாசகமும் கலந்திருக்கிறது; இந்தப் புத்தகத்தைத் திறக்கிறபோது, அதுவும் உயிர்க்கிறது; உலகத்தையும் உயிர்ப்பிக்கிறது.*

***கடவுளிடம் கேட்டுவிட்டுக் கபீர் சொல்கிறார்:***

**“படைப்பின் கடவுளே**
**உனக்குச் சேவகம் செய்வது யார்?**
**ஒவ்வொரு பக்தனும்**
**தான் படைத்த கடவுளையே வணங்குகிறான்.**
**ஒவ்வொரு நாளும் அவனுக்கு ஆராதனை**
**ஆனால், அவனைத் தேடுவோரில்லை.**
**பிரிவினையற்ற தேவன் பிரம்மன்**
**அவனே முழுமை.**
**பத்து அவதாரங்களை நம்புகின்றனர்**
**எந்த அவதாரமும் முழுமையல்ல**
**அவனவன் செயலின் விளைவை**
**அவனவன் அனுபவிக்கிறான்**
**உன்னதமானவன் இல்லாதவனே**
**யோகிகள், சன்னியாசிகள், ஞானிகள்**
**ஒருவரோடொருவர் மோதிக் கொள்கிறார்.”**
**கபீர் சொல்கிறான்...**
**“அன்பின் கருணையைக் கண்டவன் எவனோ**
**அவனே காக்கப்படுபவன்”.** (பா.13, பக்.16-17)

*காக்கப்படுவோர் பட்டியலில் கட்டாயம் இடம் பெற என்ன செய்ய வேண்டும்?*

*படுக்கையில் அமர்ந்த பக்கங்களைப் புரட்டுகையில், தூக்கம் கண்களைத் தழுவிக்கொள்ள, விழிமூடித் துயில் கொள்கிறது மனதும். அகக்குரலாய் ஒலிக்கிறது கபீரின் கவிக்குரல்.*

"விழித்தெழு விழித்தெழு
என் இதயமே விழித்தெழு
என் உணர்வுகளே விழித்தெழுவீர்
உன்னதத் தலைவன் உன்னருகே
உள்ளான் உள்ளான் விழித்தெழு
அவன் மலர்ப்பாதம் நாடி ஓடு
தலைவன் உன் தலைமாட்டில்
எத்தனை காலம் உறங்கிவிட்டாய்
போதும், இக்காலை விழித்து எழு.
(பா-20, பக்.21-22)

*கபீரின் இந்தப் பள்ளி எழுச்சிப் பாடல் காலையில் எழுப்ப, தலைமாட்டில் பார்த்தால், தலையணைதான் இருக்கிறது. அதற்கடியில் பாதியாய்த் திறந்த புத்தகம். அதில் கபீர் சொல்கிறார்.*

"சகோதரனே... என் இதயம் ஞானகுருவைத் தேடுகிறது.
அவன் என் கோப்பையை அன்பால் நிறைப்பான்
அவன் அதனை முதலில் பருகிப்
பின் அதனை எனக்களிப்பான்.
என் கண்ணின் திரைவிலக்கி
சத்திய பிரம்மனைக் காட்டிடுவான்
தன்னில் மறைந்திருக்கும்
பல உலகைக் காட்டிடுவான்
ஓயாத இசைவெள்ளம்
கேட்கச் செய்திடுவான்
இன்பம்- துன்பம் எல்லாமே
ஒன்றெனவே உணர்ந்திடுவான்
பேசும் ஒவ்வொன்றும்
அன்பாய் நிறைந்திடுவான்"

கபீர் சொல்கிறான்...

"அத்தகைய குரு அமைந்தால் பயமேது?
ஆதரவாய் அணைத்துக் காத்திடுவான்என்னை?"
(பா.20, ப,22)

*பக்கத்தில் இருந்த திருவாசகம் என்னைப் பார்த்துச்சிரித்தது. குருந்த மரத்தடி குருவாய் எழுந்தருளி இறைவன் காத்ததனால் வந்த அருள்வாசகம் அல்லவா அது?*

கேட்டாரும் அறியாதான் கேடொன்(று)
இல்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டாதன வெல்லாம் காட்டிப் பின்னும்
கேளா தனவெல்லாம் கேட்பித்(து) என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்துஆட்
கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.
(திருவாசகம், சுட்டறுத்தல்-28)

*'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளை, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனை'த் தண்டமிழில், 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'யாகக் கண்டு காட்டியவர் மாணிக்கவாசகர். கவிஞர் சிற்பி எழுதிய மார்கழிப்பாவையும் கூட இருக்கிற இத்தருணத்தில், எங்கோ இருந்து குயில் கூவுகிற இசை கேட்கிறது. அது மீளவும் திருவாசகத்திடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.*

"கூவின பூங்குயில், கூவின கோழி
குருகுகள் இயம்பின..."
(திருப்பள்ளியெழுச்சி-3)

*என்ற பாடலுக்குக் கோவை வானொலி வாயிலாய் விளக்கம் அளித்த சிற்பி சொல்கிறார்:*

*''ஒளி, ஒலி இரண்டினாலும் ஆகியது உலகம். ஒளி முந்தியதா? ஒலி முந்தியதா? - நமக்குத் தெரியாது. ஆனால், உலகம் எப்படித் தோன்றியது என்று பேசும் விஞ்ஞானிகள் The Big Bang Theory என்று ஒன்றைச் சொல்லுகிறார்கள். முன்னொருநாள் பெருவெடிப்பால் அனைத்தும் வெடித்துச் சிதறியதாம். அதிலிருந்து கிரகங்களும், பிறவும் பிறந்தன என்பர். அன்றைய ஒலி இன்னும் கேட்கிறதாம். அதையே The music of the spheres, 'பெருவெளியின் இசை' என்கிறார்கள்.*

*''நம் பரிபாடல் இலக்கியத்தில்கூட, உலகின் ஆதித்தோற்றம்,'கருவளர் வானத்து இசையினில் தோன்றி' என ஒயில் பிறந்ததாகப் பேசப்பட்டுள்ளது. இதையே, 'ஓம்' என்கிறார்கள் நம் மூதாதையர்கள்.'' (சிற்பி பாலசுப்பிரமணியம், மார்கழிப்பாவை, ப.218)*

*அதையே ஆம் என்கிறார் கபீரும். அதற்கான உறுதிப்பாட்டோடு அவர் தந்த பாடலின் தமிழ் வடிவம் இது.*

'எல்லாம் 'ஓம்'இல் இருந்து பிறந்தன
அன்பே அவன் வடிவம்
அவன் வடிவற்றவன்
அவன் குணமேதுமற்றவன்
அவன் பிறப்பதுமில்லை
இறப்பதுமில்லை.
அவனுடன் கலக்க நினை.
வடிவற்ற அவனே.
ஆயிரமாயிரம் வடிவெடுக்கிறான்
அவன் தூய்மையானவன்.
அழிவற்றவன்
அவனது ஓயாத நடனத்தில் அலைகள்
எழுகின்றன.
உடலிலும் மனதிலும் அவன்
அடங்குவதில்லை.
அவன் உணர்வுகளில் மகிழ்ச்சியில்
துன்பத்தில் முழுகியவன்
அவன் ஆதி அந்தம் அற்றவன்
அவனுள் எல்லாம் அடங்கும்
(பா-25, பக்.24-25)

*அவனை எப்படி அடையாளம் காண்பது என்று காணாதவர்கள் கேட்கிறபோது கண்டவர்கள் காட்டுதற்குப் பட்ட பாட்டினைத்தான் உலகம் பக்திப் பாட்டெனப் போற்றிப் பரவுகின்றது. அது தமிழிலும் அம்பாரமாய்க் குவிந்து கிடக்கின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளாளர்களும், 'கண்டறியாதன கண்டு, கண்டுகொண்ட வண்ணம் காட்டவும் செய்திருக்கிறார்கள்.*

'அருவாய் உருவாய் ஆயபிரான்' அவனை,
'ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு
ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம்
கொட்டோமோ?
(திருவாசகம், திருத்தெள்ளேணம்-1)

*என்று இசைத்துக் காட்டுகிறார் மணிவாசகர். அவருக்கும் முன்னதாக,*

"ஒப்புடையன் அல்லன் ஒருவனும் அல்லன்
ஓரூரன் அல்லன் ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன்அருளே கண்ணாகக் காணின்
அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று
எழுதிக் காட்ட ஒண்ணாதே
(திருநாவுக்கரசர்,6-97-10)

*என்று பாடிக்காட்டுகிறார் அப்பர்பெருமான்.*

*நம்மாழ்வாரோ,*

"நாம், அவன், இவன் உவன்,அவள், இவள்,
உவள், எவள்
தாம் அவர், இவர், உவர், அது, இது, உது,
எது,
வீம் அவை, இவை, உவை, அவைநலம்,
தீங்கு, அவை
ஆமவையயாய் நின்ற அவரே''
(நம்மாழ்வார், முதற்பத்து, முதல்
திருவாய்மொழி-4)

*என்று அடையாளம் காட்டுகிறார். அடுத்து வந்த கம்பனோ,*

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சர ணாங்களே"

*என்று பாடி, 'சரண் நாங்களே' என்று சார்ந்தும், 'சரண் ஆங்களே' என்று சார்வித்தும் பாடுகிறான்.*

*தாகூர் மொழிபெயர்த்த ஆங்கிலக் கவியின் தமிழாக்கக் கபீர்பாடல் இப்படி நிறைவுறுகிறது.*

'அந்த ரகசிய வார்த்தையை எப்படிச்
சொல்வேன்?
அவன் இவ்விதமில்லை, அவ்விதமில்லை
என்பதையெல்லாம் எப்படிச் சொல்வேன்?
அவன் என்னுள் என்றால்
பிரபஞ்சம் நகைக்கும்
அவன் இல்லை என்பதும்
பொய்யே ஆகும்.
அகவுலகும், புறவுலகும் பிரிக்க
முடியாததாக்கியவன் அவன்.
உணர்வு, உணர்வின்மை என்பன அவனது
காலடியாகும்
அவன் உருவமும் அற்றவன், மறைவும்
அற்றவன்
அவன் வெளிப்பட்டவனில்லை.
வெளிப்படாதவனுமில்லை
அவன் யார்?
என்பதை உணர்த்தும் வார்த்தை உண்டோ?"
(பா-100, ப.55)

*இந்த வார்த்தையைத் தேடித்தான், மகாகவி பாரதி 'சொல் ஒன்று வேண்டும்' என்று தேடிப் பாடினாரோ?*

*இந்த வார்த்தையைத்தான் தன் கீதாஞ்சலியில், தாகூர் ஒலிக்க முயன்றாரோ?*

*இந்த வார்த்தையைத்தான் நானும் நீங்களும் தேடிக் கொண்டிருக்கிறோமா?''*

தேடிக் கண்டடைவோர் பாடியோ, படித்தோ, எழுதி வைக்கத்தான் இந்தப் புத்தகத்தில், எண்ணிடப்படாது ஒன்பது பக்கங்கள் ஒதுக்கிவைக்கப் பெற்றிருக்கின்றன போலும்.

> "சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
> சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண்டையிலே
> ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
> அலைந்தலைந்து வீணே'

என்று வள்ளற்பெருமான் சொல்லிக் காட்டியதுபோல் இன்னமும் அழிந்துகொண்டிருக்கிறது இந்த உலகம். இந்தக் காலத்தில், காலத்தின் தேவை கருதி, கால காலத்துக்கும் உரிய சூஃபி நெறிக்கு வலுச்சேர்க்கும் கவிக்குரலாக, கபீர் குரல் ஒலிக்கிறது. இந்நூலை, கபீரின் 500 ஆண்டை ஒட்டி, தாகூர் வழிநின்று, தமிழில் மொழிபெயர்த்தவர்க்கும், தரமாகப் பதிப்பித்தவர்க்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க வேண்டுமெனில், வாங்கிப் படித்துப் பயன் கொள்ளவேண்டும் என்று எழுதியா விளக்க வேண்டும்?

●●●

**மூல நூல்**

*கபீர் சொல்கிறான்... (கபீர்தாசரின் நூறு பாடல்கள்), டாக்டர் வெ.ஜீவானந்தம் (மொ.பெ.), இரவீந்தரநாத் தாகூர் (ஆங்கில மொ.பெ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. டிசம்பர், 2019.*

**துணைநின்றவை**

- *அறவியலும் பண்பாடும், பாகம்-3, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, 2003.*
- *கம்பராமாயணம், சிற்பி பாலசுப்பிரமணியம், மார்கழிப்பாவை, கபிலன் பதிப்பகம், புதுச்சேரி,2009.*
- *திருவருட்பா,*
- *திருவாசகம்*
- *திருநாவுக்கரசர் தேவாரம்*
- *திவ்வியப்பிரபந்தம்*

●



# நூல் வெளியீட்டு விழா


21-01-2020 அன்று நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், திருச்சியில் உள்ள தேசியக் கல்லூரி வளாகத்தில் புதிய ஏழு நூல்களை வெளியிட்டது. இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் முனைவர் ரெ.இளவரசு முன்னிலையில், கல்லூரி செயலர் கே.இரகுநாதன் தலைமையில் 1.மேடைப்பேச்சுக்கலை, 2.மொழிபெயர்ப்பு, 3.விளிம்புநிலை மாந்தர்கள், 4.அழகாக ஆங்கிலம் பேச அடிப்படை கருதுகோள், 5.நடைமாட்சி மொழியியல், 6.கிரிஷ் கர்னாட்டின் திப்பு சுல்தான், 7.வலியின் ஓசை ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

இந்த ஏழு நூல்களையும் முனைவர் ஸ்ரீதர் (கலைபுல முதன்மையர்), திரு.சுரேஷ்குமார் (கல்லூரி நூலகர்), திரு.சவுந்தரராஜன் (ஆங்கிலத்துறைப் பேராசிரியர்), திரு. அனந்தநாராயணன் (சமஸ்கிருதத்துறைத் தலைவர்), திரு ச.ஈஸ்வரன் (தமிழ்த்துறைத் தலைவர்), திரு.பி.முத்துக்குமார் (தாவரவியல்துறைத் தலைவர்) ஆகியோர்கள் பெற்றுக்கொண்டனர்.

கட்டுரை

# நிழல்போலத் தொடரும் மரணத்தின் வெளியும், புனைவுலகு சித்திரிக்கிற அவ்வுலகமும்:

## இறையன்புவின் அவ்வுலகம் நாவலை முன்வைத்து




ந.முருகேசபாண்டியன்

பூமியில் மனித இருப்பு, நினைவுகளின் வழியே கட்டமைக்கப்படுகிறது. கடந்த காலம் முடிவற்ற நினைவுகளின்மூலம் மீட்டுருவாக்கப்படும்போது ஒவ்வொருவரின் மனமும் உருவாக்கிடும் மனப்பதிவுகள், அளவற்றவை. தனிமனிதப் பிரக்ஞை இழப்பு ஏற்படும்போது, அனிச்சையாக உடலின் இயக்கம் நடைபெற்றாலும், இருந்தும் இல்லாதநிலை ஏற்படுகிறது. சுய விழிப்புணர்வின் ஆளுகையே மனிதச் செயல்பாடுகளுக்கு ஆதாரம். மனித இயக்கம் என்ற அறிதல், உடலில் உயிர் இருக்கும் வரைதான். மூக்கின் வழியே வெளியேறும் மூச்சு திடீரென நின்றுவிட்டால், உடலில் தன்மை மாறிச் சிதலமடையத் தொடங்குகிறது. அதுவரை 'தான்' என்ற முனைப்பினுக்கு ஆதாரமாக விளங்கிய உடலின் இயக்கமற்ற தன்மை காரணமாக, அந்நிகழ்வு சாவு அல்லது இறப்பு எனப்படுகிறது.

தமிழில் செத்தவரைக் காலமானார் என்ற குறிப்பிடும் வழக்கமுள்ளது. அகாலமானார் என்ற சொல், காலத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான நெருக்கத்தைக் குறிக்கிறது. இயற்கையின் அங்கமான மனிதன் மீண்டும் இயற்கைக்குள் ஐக்கியமாகிறான் என்பதுதான் மரணம் என்று சொல்ல முடியுமா? யோசிக்க வேண்டியுள்ளது. மனிதன், காலந்தோறும் பூமியில் நிறுவியவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் மரணம் பற்றிய இலக்கியப் பதிவுகள், சங்ககாலம் முதலாகவே தமிழில் காணப்படுகின்றன. தூங்குவது போலச் சாக்காடு என இறப்பினை முன்வைத்த வள்ளுவர், சக்ரவாளக் கோட்டம் எனத் தனியாகச் சுடுகாட்டை முன்வைத்து மணிமேகலைக் காப்பியத்தில் கதைத்திட்ட சீத்தலைச் சாத்தனார், செத்த பிணத்தைத் தூக்கும் இனிச் சாகும் பிணங்கள் என்ற பட்டினத்தார் எனத் தொடரும் தமிழர் மரபில் இறப்பைப்


பற்றிய பேச்சுகள் கணிசமாகப் பதிவாகியுள்ளன. நவீனப் புனைவிலக்கியத்தைப் பொருத்தவரையில் மரணத்தை முன்வைத்துப் புனையப்பட்டுள்ள சிறுகதைகளுடன் ஒப்பிடும்போது, நாவல்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. எழுபதுகளின் நடுவில் சம்பத் எழுதிய 'இடைவெளி' நாவல், மரணத்தைப் பேசுபொருளாகக் கொண்டிருந்தது. அதற்குப் பின்னர் மரணத்தின் பின்புலத்தில் மனிதர்களுக்கும் இறப்பினுக்கும் இடையிலான தொடர்பினைத் தத்துவார்த்த அடிப்படையில் புனைவாகக் கட்டமைத்து வெ. இறையன்பு எழுதியுள்ள 'சாகாவரம்', 'அவ்வுலகம்' ஆகிய இரு நாவல்களும் கவனத்திற்குரியன. நெடிய மனித வாழ்க்கையின் பகுதியாக அல்லது நிறைவாக மரணத்தின் இடத்தைக் கதையாடலின்மூலம் கண்டறிந்திட முயலும் இறையன்பு உருவாக்கியுள்ள பேச்சுகளும், புனைவுகளும் காத்திரமானவை.

உலகில் இருப்பு நிலையானது என்ற நம்பிக்கையின் அபத்தம் பற்றி அறியாமலே ஒவ்வொருவரும் தனக்குள் உருவாக்கிக்கொள்ளும் ஸ்திரத்தன்மை வலுவாக உள்ளது. எந்தவொரு கணமும் எதிர்கொள்வதற்கான சாத்தியப்பாட்டுடன் மரணத்துடனான கண்ணாமூச்சி தொடர்கிறது. சுருங்கக்கூறின், இருத்தல் என்பதே 'இடைவெளியில்தான். மரணத்தைவிட மரணபயம்தான் பிரச்சினை. எந்நேரத்தில் மரணம் நிகழுமோ, தன்னுடைய மூச்சு நின்றுவிடுமோ என்று பயப்படுகிறவர்கள் எதிர்கொள்கிற துயரம் கொடுமையானது. மரணபயத்தின் காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறவர்கள்கூட உண்டு. சமூக வாழ்க்கையின் மீது சலிப்பு, வெறுப்பு, கசப்படைகிற சுயநலவாதிகள், ஏதோ ஒருவழியில் மரணத்தைத் தழுவிட முயலுகின்றனர்.பிறப்பினுக்கு முன்னரும், மரணத்திற்குப் பின்னரும் நிலவும் இடைவெளியை எப்படிப் புரிந்துகொள்வது?இரு வேறு உலகங்கள் என்ற நிலைப்பாட்டில், புவியுலகு என்ற புரிதலுக்கு மாற்றாக அவ்வுலகம் என்ற கருத்தியல் முன்வைக்கப்பட்டதா? அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவரின் கூற்று, முக்கியமானது. திருக்குறள் உள்ளிட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், பிற்காலத்திய அறநூல்களும் மனிதர்களை நெறிப்படுத்த அவ்வுலகம் என்ற கோட்பாட்டை முன்வைத்துப் பேச்சுகளை உருவாக்கிட முயன்றுள்ளன. அவ்வுலகம் என்ற ஒற்றைச் சொல்லில் பொதிந்திருக்கும் கருத்தியலின் மீதான ஈடுபாட்டின் காரணமாக இறையன்பு, பல்வேறு கதைகளின்மூலம் அவ்வுலகம் நோக்கிப் பயணித்துள்ளார். இவ்வுலக வாழ்க்கையில் வாழ்ந்தபோது, அன்றாடம் எதிர்கொண்ட பிரச்சினைகள், அவ்வுலகம் என்ற புனைவிலும் தொடர்ந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனையின் பின்புலத்தில் இறையன்பு, அவ்வுலகம் கதையாடலை விவரித்துள்ளார். மரணம் நிச்சயம் என்ற நிலையில், இவ்வுலக வாழ்க்கையை எங்ஙனம் வாழ்ந்திடுவது என்ற கேள்விதான் அவ்வுலகம் நாவலின் மையம். த்ரிவிக்ரமன் என்ற கதைமாந்தரை முன்வைத்துக் கதை சொல்லப்பட்டாலும், பல்வேறுபட்ட மனிதர்களின் குண இயல்புகளும், பண்புகளும் நாவலில் பதிவாகியுள்ளன.

இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும் இயற்கையின் பேராற்றலுடன் இசைந்து இயங்குதல், எல்லா உயிரினங்களின் மரபணுவிலும் பொதிந்துள்ளது. இந்நிலைக்கு மனிதனும் விதிவிலக்கு அல்ல. இயற்கையின் மீது ஏதோவொரு நிலையில் ஆளுகை செலுத்தும் ஆற்றல்மிக்க மனிதன் ,தனது அடையாளம் அல்லது இருப்பு குறித்து மிகவும் அக்கறை கொள்கிறான். எந்தவொரு நொடியிலும் தன்மீது மரணத்தின் நிழல் பற்றிப் படர்வதற்கான சாத்தியமுண்டு என்பதை நன்கறிந்தும், காலந்தோறும் மரணத்தை வெல்வது பற்றியும், மரணத்திற்குப் பின்னர் மனிதநிலை குறித்தும் தீவிரமாக யோசித்துக்கொண்டேயிருக்கிறான்.

மரணமற்ற நிலை, இயற்கைக்கு முரணானது என்ற முடிவை ஏற்க மறுத்து, அல்லது மறந்து சக மனிதர்கள்மீது செலுத்துகிற வன்முறை, ரத்தக் கவிச்சியுடன் வரலாற்றின் பக்கங்களில் பதிவாகியுள்ளது. சரி, போகட்டும். மரணத்திற்குப் பின்னர் மனித உயிர் எங்கே போகிறது? இதுவரை பூமியில் இறந்துபோன கோடிக்கணக்கான மனித உயிர்கள் எங்கே உறைந்துள்ளன? 'ஒருக்கால் விண்ணுலகில்' என்ற புனைவு, பலருக்கு அமைதியைத் தருகிறது. இறப்பினுக்குப் பின்னர் மனித உயிர்கள் தங்கியிருக்கும் இடம் பற்றி எல்லா மதங்களும் தொடர்ந்து முடிவற்ற புனைவுகளைக் கட்டமைத்துக் கொண்டேயிருக்கின்றன. மரணத்திற்குப் பின்னர் செல்லவிருக்கிற சொர்க்கம் அல்லது நரகம் குறித்த கற்பனைச் சித்திரிப்புடன், உடல்களை வாட்டி, புலன்களை ஒடுக்கி, எப்பொழுதும் குற்ற மனதுடன் வதைக்குள்ளாக்கி, இவ்வுலக வாழ்க்கையின் கொண்டாட்டங்களை மறுக்கிற பணியை மதங்கள், கச்சிதமாக நிறைவேற்றுகின்றன. தொடர்ந்து மரணபீதியில் மனித உயிர்களை ஆழ்த்தி, இறைவன் பற்றிய கருத்தை வலியுறுத்துவதன்மூலம், மத நிறுவனங்கள் சமூக மேலாதிக்கம் பெறுகின்றன. அவ்வளவு எளிதில் மரணத்தை ஏற்றுக்கொள்ள இயலாத

மனித மனம் புனைந்த 'அவ்வுலகு' என்ற கருத்தியல் சுவாரசியமானது. அவ்வுலகம் என்று ஒரு உலகம் இருக்கிறதா? யோசிக்க வேண்டியுள்ளது. 'இறுதித் தீர்ப்பு நாளின்போது நீங்கள் செய்த பாவங்களுக்காக பதில் சொல்ல வேண்டியிருக்க வேண்டும்' என்று அச்சுறுத்துகிற தீர்க்கதரிசிகள், கடவுளை முன்னிறுத்தி, சொர்க்கம், நரகம் என்ற அவ்வுலகைப் புனைந்துள்ளனர். இறுதியில் ஒவ்வொருவரும் மரணம் என்ற வாயிலின் வழியாகப் பயணித்துச் செல்லவிருக்கிற அவ்வுலகம் என்ற கருதுகோளின் பின்புலத்தில் இறையன்பு, இவ்வுலக வாழ்க்கை குறித்து ஆழமான கேள்விகளை எழுப்பியுள்ளார். பொதுவாக மனிதர்கள், தான்தோன்றித்தனமாக எதை வேண்டுமானாலும் செய்து, அகங்காரத்துடனும், வீம்புடனும் தங்களுடைய இருப்பை வெளிப்படுத்துகின்றனர். இத்தகு சூழலில் இவ்வுலகில் வாழ்கிறபோதே சரியான நெறியைத் தேர்ந்தெடுத்து வாழ வேண்டியதன் அவசியத்தையும், மரணத்திற்குப் பின்னர் வருந்துவதால் ஒரு பயனும் இல்லை என்ற கருத்துதான் இறையன்பு கதைத்தலுக்கு ஆதாரமா? பார்க்கலாம்.



சராசரியான மனிதனுக்கு உணவு, உடை, தங்குமிடம் எனத் தேவைகள், ஒப்பீட்டளவில் குறைவு. சமூக வளர்ச்சியில், பொருளாதார ஏற்றத்தாழ்வில், நுகர்பொருள் பண்பாட்டில், எல்லாமே சந்தைக்கானதாக மாற்றப்பட்ட நிலையில், தேவைகள் அளவற்றுப் பெருகுகின்றன. விரக்தி, வறுமை, சலிப்பு, வெறுமை, பதற்றம், நாடோடித்தனம், விட்டேத்தியான நிலை, பகட்டு, மேனாமினுக்கு போன்ற அற்பமானவைகளுக்காக ஒவ்வொருவரும் துயரத்தில் உழல வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பூமியில் வாழ நேர்ந்திட்ட பலரின் வாழ்க்கையில் அசலான தேர்வு என்பது இல்லாத சூழலில் எங்ஙனம் குதூகலமடைய முடியும்? எவ்வாறாயினும் நிழல் போலத் தொடரும் மரணம், எல்லோருக்கும் காத்திருக்கிறது. ஆனால் மரணமற்ற வாழ்க்கை வாழ்வதாக நம்புகிறவர்களின் மனநிலை, சவால்களை இடைவிடாமல் உற்பத்தி செய்கிறது. மரணத்தை முன்வைத்து உலகே மாயம் என்ற மரபு வழிப்பட்ட கருத்தியலில் இறையன்புவிற்கு உடன்பாடு இல்லை; மரணத்தை முன்வைத்து மனித இருப்பின் பன்முகத் தன்மைகளை விளக்க முயன்றுள்ளார். எளிய வாழ்க்கையைச் சிக்கலாக்கிடும்வகையில் மனிதர்களின் சுயநலமும், பேராசையும் மேலோங்கியிருக்கிற காலகட்டத்தில், ஏதோவொரு ஆதாயத்துக்காகத் தங்களுடைய ஆன்மாவை இழந்திட்டவர்கள், மீண்டும் திரும்பிப் பார்க்கையில் இழந்தவை குறித்த குற்ற மனம், இடைவிடாமல் துரத்துகிறது. அவ்வுலகம் நாவலின் வழியாக இறையன்பு விவரிக்கிற சம்பவங்கள் ஒருபுறம் நம்பகத்தன்மையுடனும், இன்னொருபுறம் செயற்கையாகவும் விரிந்திருப்பது, வாசிப்பில் ஒன்றவிடாமல் செயகிறது. இவ்வுலகில் எப்படி வேண்டுமானாலும் வாழ்கிறவர்கள், அவ்வுலகில் மீண்டும் ஒரு முறை முன்னர் பழகியவர்களைச் சந்திக்க நேர்ந்தால் என்ன நடக்கும்? எப்படி அந்தச் சூழலைப் புரிந்துகொள்வார்கள்? நாவலின் விவரிப்பில் பொதிந்திருக்கிற நிறைய இடைவெளிகள், வாசிப்பில் புதிய பிரதிகளை உருவாக்குவது, கதையாடலின் தனித்துவம். மரணம் என்ற சொல் உருவாக்கும் பயபீதியைவிட நடப்பு வாழ்க்கையை எத்தகைய நெறிகளுடன் வாழ வேண்டும் என்பதுதான் இறையன்பு, நாவலில் சொல்ல விழைகிற சேதியா?

உலகம் சூன்யம் என்பது உண்மை என்றாலும், நடப்பில் அக்கருத்து வெறுமையாக இருப்பதுடன் சுவாரசியமற்றது. விண்ணுலகில் நிலைத்திருக்கும் அவ்வுலகில், இறுதியில் மனித உயிர்கள் தஞ்சமடையும் என்ற மதரீதியான சிந்தனை, மரணம் குறித்து அஞ்சும் மனித உயிர்களுக்கு ஆறுதலைத் தருகிறது. பூமியில் செய்கிற செயல்களில் பாவ புண்ணியத்திற்கேற்ப அவ்வுலகில் 'நியாயம் கிடைக்கும் என்ற பயமும் பொதுவாக நிலவுகிறது. தவறு செய்வது மனித இயல்பு; தான் செய்த தவறுக்காக வருந்தும்போது, பாவ விமோசனம் கிடைக்கும் என்பது மதம் அளிக்கும் நம்பிக்கை. எல்லாவற்றுக்கும் பரிகாரம் உண்டு என்ற மனநிலைதான் கடந்த காலம் என்ற துயரத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியாக உள்ளது. மரணமடைந்த பின்னர் மீண்டும் ஒருக்கால் அவ்வுலகில் சந்திக்க நேரும்போது,

ஏற்கெனவே பழகிய உறவினர்கள், நண்பர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்ற புனைவை இறையன்பு சுவாரசியமாகப் பதிவாக்கியுள்ளார். இப்படியெல்லாம் நடைபெறுவதற்கான சாத்தியமுண்டு என்ற நாவலின் புனைவுத்தளம், வாசகரைக் கதைக்குள் இழுக்கிறது. அரசுப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற உயர் அலுவலரான த்ரிவிக்ரமன், மனைவியை இழந்தவர்; பிறரிடமிருந்து ஒதுங்கி வாழும் இயல்புடையவர்; புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் மிக்கவர். தனிமையில் வாழும் விக்ரமனுக்குச் சஞ்சீவி என்ற இளைஞர் துணையாக உள்ளார். அவருடன் பணியாற்றிய சுக்ரன் அவ்வப்போது வந்து நலம் விசாரித்துப் போகிறார். தன்னளவில் சுருங்கி, தானுண்டு தனது அலுவலகம் என்று ஒதுங்கி, நேர்மையுடன் வாழ்வதாக நம்பிக்கொண்டிருக்கிற விக்ரமனின் மறு பக்கம், முரண்பாடானது.

நல்ல மனிதராகத் தன்னை நம்புகிற விக்ரமன், கல்லூரியில் பயிலும்போது, அவரை நேசித்த சக மாணவியான சாயாவின் நேசத்தைப் புரிந்துகொள்ளும் பக்குவமற்ற நிலையற்று, வறண்டிருக்கிறான். சாயா, படிக்கும்போதே அஜீத் தந்த நெருக்கடியும், குடும்பச் சூழலும் காரணமாகத் திருமணம் செய்துகொள்ள நேரிடுகிறது. கணவனின் வக்கிரமான போக்கினால், அவளுடைய குடும்ப வாழ்க்கை சிதலமடைந்தது. கணவனைப் பிரிந்து வாழ்கிற சாயா அனுப்பிய கடிதம்மூலம் தற்செயலாக ஏற்பட்ட தொடர்பு, விக்ரமனின் மனதில் காதலை உருவாக்குகிறது. வெளிப்படையாகப் பேசிடவோ, குதூகலத்துடன் இருந்திடவோ அறியாத விக்ரமன், எதையும் இயல்பாக அறிந்திடாமல், கெட்டிதட்டிப் போன மனநிலையுடையவன். மீண்டும் சாயாவுடன் தொடர்பு, அவனுடைய மனதில் மெல்லிய அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. சூழல் காரணமாகச் சாயாவுடனான தகவல்தொடர்பு துண்டிக்கப்பட்டபோது, விக்ரமனின் மனம், பிரிவு தந்த சோகத்தினால் தத்தளிக்கிறது. பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாகக் கங்காவை வேண்டா வெறுப்பாக மணந்துகொண்ட விக்ரமன், அவளைப் புறக்கணிக்கிறான். மனுஷி என்ற நிலையில் கங்காவின் விருப்பு வெறுப்புகளைப் புரிந்திடாமல், தன்னலத்துடன் வாழ்கிற விக்ரமனின் நடத்தை, ஒருவகையில் கொடூரமானது. மனைவியான கங்காவை முழுக்கப் புறக்கணித்தவன், பின்னர் காலப்போக்கில் அவளை ஏற்றுக்கொள்கிறான். மகன் சத்யகாமின் துர்மரணத்திற்குப் பின்னர் அவளை வெறுத்து ஒதுக்கும் விக்ரமனின் இன்னொரு முகம் வக்கிரமானது. அலுவலக வேலையில் உயர் பதவியில் நேர்மையுடன் பணியாற்றிய விக்ரமன், சக மனிதர்களைவிட்டு ஒதுங்கி இருந்ததுடன், தன்னைப் பற்றிய பெருமிதத்துடன் இருக்கிறார். கங்காவின் மரணத்திற்குப் பின்னர், தற்செயலாக வாசிக்கக் கிடைத்த அவளின் 'நாட்குறிப்புகள்,'அவரைக் காலமெல்லாம் வதைக்கின்றன. இதுவரை அவர் நம்பியிருந்த ஒழுங்கு, கண்ணியம், நேர்மை போன்றவை சிதிலமடைய, மனக்குமைச்சலுடன் எஞ்சிய வாழ்க்கையை வாழ வேண்டிய நெருக்கடிக்குள்ளாகிறார். அவர் பூமியிலேயே நரகத்தில் வாழ்ந்தார் என்பதுதான் உண்மை.

மரணப் படுக்கையில் இருக்கிற விக்ரமன், ஒருவகையில் மரணத்தை எதிர்நோக்கி, ஒருவகையில் ஆவலுடன் காத்திருந்தார். உறவினர்கள் யாருடனும் எவ்விதமான தொடர்பும் இல்லாமல், தனித்திருந்த விக்ரமன், தனது மரணத்திற்குப் பின்னர் செய்ய வேண்டிய செயல்கள் குறித்து, சுக்ரனிடம் விரிவாகப் பேசுகிற மனநிலை, அசாதாரணமானது. உடல்நலக் குறைவின் காரணமாக மரணத்தை எதிர்நோக்கி இருந்த விக்ரமனின் மனம், கடந்தகால நினைவுகளை அசை போடுகிறது. நினைவுகளின் வழியே விரியும் வாழ்க்கைப் பரப்பில் எது சரி? எது தவறு? போன்ற கேள்விகளின் வழியே மனம் குமைகிறது. ஒருநிலையில் மனம், போதம் இழந்தநிலையில், விக்ரமன் அவ்வுலகில் பயணிக்கிறார். அங்கு அவர், எதிர்கொண்ட அனுபவங்கள் விநோதமானவை. அவ்வுலகம் என்ற கற்பனைப் பிராந்தியத்தில் மரணத்திற்குப் பின்னர் விக்ரமன் சென்று உறைகிறபோது, இப்படியெல்லாம் சம்பவங்கள் நடக்கலாம் என்ற புனைவுப் பின்புலத்தில், வாழ்க்கை குறித்த அடிப்படையான கேள்விகள், நாவலில் முன்வைக்கப்பட்டுள்ளன. மரணப்படுக்கையில் நினைவுகள் கலங்கிடும் சூழலில், மனம் என்னவெல்லாம் கற்பிதங்களை உருவாக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டு விக்ரமனின் அவ்வுலகப் பயணம். பூமியில் அவருடைய வாழ்க்கையில் குறுக்கிட்டவர்களை மீண்டும் அவ்வுலகில் சந்திக்கிறார். அப்பொழுது அவருக்குப் பேசுவதற்கு நிரம்ப விஷயங்கள் இருக்கின்றன. ஒரு புள்ளியில் நிலைத்திருக்கும் நினைவுகளின் ஊடாகக் கடந்த காலத்தில் பயணிக்கிற விக்ரமனுக்குத் தன்னையே மறுபரிசீலனைக்குள்ளாக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. இவ்வுலகின் நீட்சியாக அவ்வுலகில் மனிதர்களுடன் உறவை நீட்டிக்க முயலுவது கனவாகக் கலைந்து போகிறது. அவருடைய ஆன்மத்தேடலும், சுய விமர்சனமும் ஓர் எல்லையில் தடைபடுகின்றன. அதுதான் அவ்வுலகின் வரையறை.

அவ்வுலகில் இருக்கும்போது விக்ரமன், சந்திக்கிற மனிதர்கள் பற்றிய இறையன்புவின்

விவரிப்புகள், வெறுமனே கதைகள் மட்டும் அல்ல. அதிகாரம், வீண்புகழ்ச்சி, தற்பெருமை, சுயநலம் போன்றவற்றை முக்கியமாகக் கருதி, சக மனிதர்கள் மீது வன்முறை செலுத்துகிறவர்கள் நிரம்பிய இவ்வுலகம் குறித்த விசாரணையை நாவல், இன்னொரு நிலையில் தொடங்கியுள்ளது. விக்ரமன் எதிர்கொண்ட மனிதர்கள் என்று இறையன்பு விவரித்துள்ள கதையாடல்கள், அழுத்தமானவை.

- விக்ரமுடன் கல்லூரியில் படித்த ஸ்ரீநாத், படிக்கிற காலத்தில் யாருடனும் பழகாமல், ஒதுங்கியிருந்து, சுயநலத்துடன் வாழ்ந்தவன், பெரிய வேலைக்குப் போய், நிறையச் சம்பாதிக்கிறான். அவனுடைய குடும்ப வாழ்க்கை, தோல்வியில் முடிந்தது. கல்லூரியில் படிக்கிறப்ப 108 பரிசுகள் வாங்கினேன் என்று அவ்வுலகிலும் தன்னைப் பற்றியே பீற்றிக்கொள்கிறவன், எப்பொழுதும் தற்பெருமையில் மூழ்கியிருக்கிறான். சுயமோகியான அவன், இவ்வுலகிலும் சொர்க்கத்தில் இல்லை, அவ்வுலகிலும் சொர்க்கத்தில் இல்லாமல் புழுங்கித் தவிக்கிறான் என்பதுதான் யதார்த்தம். சுவாரசியமில்லாத மனிதர்களின் வெற்றி, மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை ஒருபோதும் தருவதில்லை என்ற இறையன்புவின் கணிப்பு, ஸ்ரீநாத் கதை மூலம் வெளிப்பட்டுள்ளது.
- ஆன்மீகத்தைப் போதிக்கிற உபதேசியாரின் பேச்சில் பலரும் மயங்கினர். அவரது உபதேச உரை முழுக்கப் போலியானது; வெற்று அலங்காரச் சொற்களால் நிரம்பியுள்ளது அந்த உபதேசியாரை ஞானியாகச் சித்திரித்து வைக்கப்பட்டிருந்த கட்-அவுட்டுகளும், பதாகைகளும் ஆன்மீகத்தின் பெயரில் அவர் நடத்துகிற கொள்ளையையும், திருகுதாளங்களையும் மறைத்திட உதவுகின்றன. சொந்த சாதியினரின் ஆதிக்கத்தில் பிராண்டாக முன்னிறுத்தப்படுகிற கார்ப்பரேட் சாமியாரின் போலி அருளாசி, எங்கும் பரவுகிறது. ஏற்கனவே தனக்குத் திருமணமாகிக் குழந்தை இருப்பதை மறைத்து, துறவியாக வேடமிட்டு, ஆன்மீகத்தின் பேரில் மக்களை ஏமாற்றுகிற கபட வேடதாரி, அவ்வுலகிலும் அற்பத்தனத்துடன் நடக்கிறான். வெற்று அருளுரையினால் என்ன பயன் என்ற கேள்வி தோன்றுகிறது.
- விக்ரமனின் மேலதிகாரியாகப் பணியாற்றிய ஒருவர் பதவியின் கித்தாப்பிலேயே இருந்து, தன்னுடைய நாற்காலியைச் சிம்மாசனம் என்று கருதி, பணியாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தார். எப்போதும் மேலதிகாரி என்ற நினைப்புடன், எல்லோரின் மீதும் வெட்டி அதிகாரம் செலுத்திடும் இயல்புடையவர். பிறரைத் துச்சமாகக் கருதி, இம்சித்து வேடிக்கை பார்க்கிற அதிகாரத்தை ருசிக்கிறவர், அவ்வுலகிலும் பொய்மையுடன் கற்பிதங்களுடன் வாழ்கிறார். போலியானவர்கள், அவ்வுலகிலும் தங்களைச் சுற்றி ஒளிவட்டம் இருப்பதாகக் கற்பிதம் செய்துகொள்வது வேடிக்கைதான்.
- விக்ரமன், தனது அலுவலகத்தில் கீழ்நிலைப் பணியாளரான சேகர், வறுமையில் வாடிய குடும்பப் பின்புலமுடையவன் என்பதை அறிந்து, அவனுக்குப் பணம் அளித்ததுடன், தன்னுடைய அறையில் உடன் தங்கிட அனுமதிக்கிறார். அவர் இல்லாதபோது அவருடைய அறைக்குப் பெண்ணை அழைத்து வந்து உறவுகொள்கிறான், சேகர். ஒட்டுண்ணியாக இருந்த சேகர், வெளியே போனதும் விக்ரமனுக்கு எதிராகப் பொய்யான குற்றங்களைச் சுமத்துவதுடன், தரக்குறைவான வேலைகளிலும் ஈடுபடுகிறான். எப்பொழுதும் துரோக மனநிலையுடன், வஞ்சனையுடன் வாழ்கிற இயல்புடைய சேகரை அவ்வுலகில் சந்திக்காமல், விக்ரமன் ஒதுங்கிப் போனார். அளவுக்கதிகமான சுயநலம் காரணமாக இவ்வுலகில் நன்றியற்று, பிறர்க்கு எப்போதும் தொல்லை தருகிற இயல்புடையவன், அவ்வுலகில் தன்னையே வெறுக்கிறவனாக மாறுவது, விநோதமானது.
- விக்ரமன் தான் முன்னர் விரும்பிய சாயாவை அவ்வுலகில் தற்செயலாகச் சந்தித்தபோது நிகழ்ந்த உரையாடல், நிறைவேறாத விருப்பங்களின் தொகுப்பாகியுள்ளது. என்னதான் சமாதானம் சொன்னாலும், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யத் தவறியதால், விக்ரமன் அனுபவிக்கிற வதைகள், எந்த உலகிலும் ஒருபோதும் தீராதது என்பதுதான் உலக வாழ்க்கை கற்றுத் தருகிற பாடம்.
- நட்பு வட்டாரத்தில் பெருந்தன்மையுடனும், சமூக விஷயங்களில் அக்கறையுடனும், படிப்பில் கெட்டிக்காரனாகவும் விளங்கிய சுதீரின் நட்பு, விக்ரமனுக்கு முக்கியமானது. கல்லூரிப் பருவத்தில் போராட்டக் குணத்துடன் திகழ்ந்த சுதீர், பணியாற்றிய இடத்தில் நடைபெற்ற அநியாயங்களுக்கு எதிராகப் போராடியதால், இளம் வயதிலே கொல்லப்பட்டு, அவ்வுலகம் வந்துள்ளவனைச் சந்தித்து விக்ரமன் உரையாடுகிறார். அன்றையக் கல்லூரி மாணவர் வாழ்க்கைக்கும், இன்றைய மின்னணு உலகில் சஞ்சரிக்கிற இளைய தலைமுறையினருக்கும் இடையிலான வேறுபாடுகளை முன்வைத்த பேச்சுகள், அவ்வுலகில் காற்றில் மிதக்கின்றன.

- விக்ரமனுடன் படித்த ஜெயராமன் என்ற மாணவன், கல்பனா என்ற மாணவி மீது காதல்வயப்பட்டு, அது நிறைவேறாத காரணத்தினால், தூக்கில் தொங்கி, தற்கொலை செய்துகொண்டான். அவ்வுலகில் விக்ரமன், அவனைச் சந்தித்தபோது, தற்கொலை, காதல், குடும்பம் பற்றிய பேச்சுகள், கண நேரத்தில் எடுத்த முடிவின் வலியைச் சொல்கின்றன. ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றன என்ற கேள்வியின் மூலம் இவ்வுலகில் நிகழ்ந்திடும் வதைகளின் மறுபக்கத்தைக் கண்டறியலாம்.
- விக்ரமன், தனது மனைவியான கங்காவை அவ்வுலகில் சந்தித்து, இவ்வுலகில் அவர் நடந்துகொண்ட முறையற்ற செயல்களுக்கு வருத்தம் தெரிவிக்கிறார். வாழும் காலத்தில் தன்னுடன் வாழ்கிற பெண்ணைப் புரிந்துகொள்ளாமல், தட்டையாக இருந்து, சித்திரவதை செய்துவிட்டு, அவளுடைய மரணத்திற்குப் பின்னர் வருந்துவதால் என்ன பயன்? காலங்கடந்த பின்னர் எதுவும் செய்ய இயலாது என்பதுதான் உண்மை. “வாழ்வில் இழந்த ஒரு நொடியைக்கூட திரும்பப்பெற முடியாதுன்னு நாம உணராமல்தான் வாழ்க்கையைக் கழிச்சிடறோம்” என்று கங்கா சொல்வது எல்லா உலகிற்கும் பொருந்தும்.

பூமியில் ஒவ்வொருவரும் செய்கிற செயல்களின் நல்லதும் கெட்டதும் குறித்த விசாரணையை, ஒவ்வொருவரும் தன்னுடைய மனஅளவில் இவ்வுலகில் தொடங்கலாம் என்று நாவல் மூலம் இறையன்பு சொல்ல முயன்றுள்ளார். நடப்பு வாழ்க்கையில் அவரவர் விருப்பு வெறுப்பு அடிப்படையில் சக உயிர்கள் மீது செலுத்தும் அன்பு, வன்முறை அளவற்றுப் பெருகுகின்றன. மனசாட்சி குறித்து அக்கறையற்று, ‘குற்றமனம்’ பற்றி அறியாமல், இடைவிடாமல் வன்முறை நிகழ்த்துகிறவன்கூட, ஒருநிலையில் தளர்ச்சியடைகின்றான். பிணி, மூப்பு குறித்துப் பொருட்படுத்தாதவன்கூட சாக்காடு வரும்வேளையில் பயத்துடன் மண்டியிடுகிறான். மரணபயத்தை வெளிப்படும் விழிகள், எப்பொழுதும் துயரத்தில் சலனமற்று உறைந்துள்ளன. தான் வாழும் காலத்தில், பிறரைக் கொடுமைப்படுத்தி வாழ்கிறவன் இறுதிக்காலத்தில் - மரணப் படுக்கை - எதிர்கொள்ள நேரிடுகிற கேள்விகள், அவ்வுலகிலும் அவனை நோக்கிக் கேட்கப்படலாம்

இறையன்புவிற்கு மரணம் பற்றிய துல்லியமான புரிதல்கள் உள்ளன. புத்தரின் ‘சூன்யம்’ பற்றிய புரிதலுடன் மரணத்தை முன்வைத்து இறையன்பு எழுதியுள்ள அவ்வுலகம் நாவல், மரணம் பற்றிய மறுபேச்சுக்களை உருவாக்குகிறது. ‘பிறப்பு’ களைக் கொண்டாடும் மனித மனம், ‘இறப்பு’ பற்றி எண்ணிப் பார்க்கவே பீதியடைகிறது. எல்லாம் சரியாக இருப்பதாக மனித மனம் நம்புகிற வேளையில், திடீரென எதிர்கொள்ள நேரிடும் மரண அவஸ்தை, மனதை நொறுக்குகிறது. மரணபயம் தொற்றிக்கொள்ளும்போது, வெறுமையும், துயரமும் ஆளை உலுக்குகின்றன. மரணம் என்பது மனித வாழ்க்கையின் ஒரு கட்டம் என்ற புரிதலை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை இறையன்பு நாவல்களின் வழியே உருவாக்கிட முயன்றுள்ளார். இதுவரை பேசாப்பொருளாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மரணத்தை முன்வைத்துப் புனைவைக் கட்டமைத்துள்ள இறையன்புவின் நோக்கம் நேர்மறையானது. அன்றாட வாழ்க்கையில் மரணத்தின் குரலைக் கேட்க முடிந்தவர்கள் பாக்கியவான்கள். ‘அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை’ என்ற திருவள்ளுவரின் வாக்கினுக்குப் பின்னர் பொதிந்துள்ள கதையாடலை உற்றுக் கேட்க, பார்க்க வேண்டிய நேரமிது.

உலகம் என்பது பண்டைத் தமிழர்களைப் பொருத்தவரையில், பல்வேறு உலகங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவரவர் உருவாக்கிய உலகில் பாதுகாப்பாக வாழ்வதாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். பூமிப் பந்தில் மகத்தான மனித வாழ்க்கையைப் புரிந்திடாமல், அற்பக் காரணங்களுக்காகச் சக மனிதர்கள் மீது வெறுப்பையும், கசப்பையும் உமிழ்ந்து, தங்களையே சீரழித்துக்கொள்கிற மனிதர்கள், ஒருவகையில் தங்களையே ஏமாற்றிக்கொள்கின்றனர். ஒவ்வொருவரும் ஒரு நாள், கடந்த காலத்தில் செய்த செயல்களைக் குறித்து நினைக்கையில், மனதில் தோன்றும் எண்ணங்கள், அவ்வுலகம் குறித்த பேச்சுகளின் தொடக்கம். பூமியிலே ‘அவ்வுலகம்’ இருக்கிறது என்பது நாவல் தருகிற முக்கியமான சேதி. பூமியில் மனித இருப்பு, மரணம், மரணபயம் குறித்து கருத்தியல்ரீதியாக எழுதப்பட்டுள்ள இறையன்புவின் அவ்வுலகம் நாவல், வாசிப்பின் வழியாக ஒவ்வொருவருக்குள்ளும் இடைவிடாத கேள்விகளை எழுப்புகிறது; நுட்பமாகச் செயலாற்றுகிறது; முடிவற்ற விவாதங்களுக்கு இட்டுச் செல்கிறது. சம கால வாழ்க்கையில் மரணத்தை எப்படி நேர்மறையாக அணுக வேண்டும் என்ற புரிதலை வாசிப்பில் ஏற்படுத்துவதுகூட அவ்வுலகம் நாவல் எழுதப்பட்டதன் நோக்கம் என்று சொல்ல முடியும்.

●

கட்டுரை



# யார் மனிதன்?

**பாவண்ணன்**

புதுமைப்பித்தன் காலத்திலிருந்து ஒவ்வொரு தலைமுறையிலும் பல எழுத்தாளர்களாலும் மொழிபெயர்ப்பாளர்களாலும் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ரஷ்ய எழுத்தாளர் ஆன்டன் செக்காவ். இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினாறு நாடகங்களையும் எழுதியவர் அவர். நூற்றைம்பது ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் பழமை படியாத எழுத்துகளாக அவருடைய படைப்புகள் உள்ளன. மனிதர்களின் விசித்திரப்பண்புகளை கலைநயத்துடன் முன்வைத்திருக்கும் தன்மையினால் செக்காவின் படைப்புகள் ஆலமரங்களென விழுதுவிட்டு உறுதியாக நின்றிருக்கின்றன. இறுதியாக மனிதன் என்பவன் யார் என்னும் கேள்வியைத் தொட்டு நிற்கும் கணம் ஒவ்வொரு வாசகனையும் கலைத்துப்போடும் அற்புதக்கணம்.

தொடக்கத்தில் செவ்வியல் தன்மை கொண்ட பிரெஞ்சுக் கதைகளைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்து வெளியிட்டதன் வழியாக குறுகிய காலத்திலேயே சிறப்பான மொழிபெயர்ப்பாளரென்னும் இடத்தைத் தொட்டவர் வெங்கட சுப்பராய நாயகர். அவர் இப்போது பிரெஞ்சு வழியாக ஆன்டன் செக்காவின் பன்னிரண்டு சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தொகுத்திருக்கிறார். ஒவ்வொரு சிறுகதையும் வாசகர்களுக்கு மிகச் சிறந்த வாசிப்பனுபவத்தை வழங்கும் வகையில் கதைத்தேர்வில் கவனத்தோடு நாயகர் இயங்கியிருக்கிறார் என்பதை உணரமுடிகிறது. அவருடைய அக்கறைக்கும் தேடலுக்கும் தடாகம் வெளியிட்டிருக்கும் ஆன்டன் செக்காவ் - ஆகச் சிறந்த கதைகள் தொகுப்பு, மிகச்சிறந்த்தொரு எடுத்துக்காட்டு...

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் கிராமத்து நூலகத்திலிருந்து ரஷ்யச் சிறுகதைகள் என்றொரு தொகுப்பை எடுத்துப் படித்தேன். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்தத் தொகுப்பிலேயே மிகச்சிறந்த சிறுகதை பந்தயம் என்னும் கதை. அதை எழுதியவர் ஆன்டன் செக்காவ். ஒரு பந்தயத்தின் நிமித்தமாக பத்தாண்டுகளுக்கும் மேலாக இருட்டறையில் வாழ்ந்தவன் கழித்த கடைசி இரவில்தான் அந்தக் கதை நிகழ்கிறது. இருட்டறை வாழ்க்கை ஒருவிதத்தில் பொருளாசை, புகழாசை, படிப்பாசை, தன் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் ஆசை என லௌகிக ஆசைகளென்னும் இருட்டிலிருந்து விடுவித்து வெளிச்சத்தை நோக்கிய பார்வையை ஊட்டிவிடுகிறது. பந்தயம் முடிந்து காலையில் வெளிவருபவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையால் அழிந்துபோக இருக்கிற செல்வத்தை நினைத்தும் பிறர் பார்வையில் தனக்கு நிகழப்போகும் தகுதியிறக்கத்தை நினைத்தும் கவலைப்படும் மற்றொரு நண்பனின் மனத்தில் இருட்டைநோக்கிய பார்வை படியத் தொடங்குகிறது. இப்படி இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும் வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கும் அலைபாயும் மானுடமன ஓட்டத்தை வெகுநுட்பமாகச் சித்தரிப்பதாலேயே அந்தக் கதையை நான் ஒருபோதும் மறந்ததில்லை. உலகச் சிறுகதை வரலாற்றில் மிகச் சிறந்த தொடக்கத்தை உருவாக்கிக் கொடுத்த ஆளுமைகளில் ஒருவர் செக்காவ். செகாவிய பாணி என்றொரு எழுத்துமுறையே அவருக்குப் பின் உருவானது.


பந்தயத்துக்கு நிகரான சில சிறுகதைகளை நாயகர் இத்தொகுதியில் மொழிபெயர்த்துள்ளார். முக்கியமான கதை கலைப்பொருள். ஒரு மருத்துவர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு இலவசமாக மருத்துவம் செய்து ஆபத்தான ஒரு நோயிலிருந்து காப்பாற்றுகிறார். மருத்துவருக்குக் கட்டணமாகக் கொடுக்க அவன் தாயிடம் பணமில்லை. அவள் விற்பனைக்கு வரும் பழைய கலைப்பொருட்களை வாங்கி விற்பவள். ஒருமுறை அவளிடம் அபூர்வமானதொரு கலைப்பொருள் வந்து சேர்கிறது. அதைத் தம் பரிசாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மருத்துவரைச் சந்தித்து கொடுக்கிறான் அவள் மகன். உண்மையில் இது ஜோடியாக வைக்கப்படவேண்டிய தாங்கிகள் என்றும் ஒன்றை மட்டுமே கொடுப்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கிறான். மெழுகுவர்த்திகள் வைப்பதற்கென உருவாக்கப்பட்ட வெண்கலக் கொத்துவிளக்குத் தண்டு அது. அதன் அழகில் மருத்துவர் மனம் பறிகொடுத்துவிடுகிறார். ஆனால் அதன் பீடத்தில் செதுக்கப்பட்டிருந்த இரு பெண்கள் பிறந்தமேனியாகக் காட்சியளிக்கிறார்கள். அது அவரைச் சங்கடத்துக்குள் ஆழ்த்துகிறது. பல பேர் வந்துபோகிற மருத்துவமனைக்குள் அதைத் தன் மேசையின் மீது வைத்துக்கொள்ள முடியாது என்று அவர் நினைக்கிறார். அதனால் சிறுவன் வெளியேறும் வரைக்கும் காத்திருந்து அவருடைய நண்பரொருவருக்கு அன்பளிப்பாக அதைக் கொடுத்துவிட்டு வருகிறார். அவருக்கும் அதே சங்கடம். அவர் அதை மீண்டும் ஒரு தாளில் சுற்றி எடுத்துக்கொண்டுபோய் இன்னொரு நண்பரிடம் கொடுத்துவிட்டு வந்து நிம்மதியாக மூச்சு விடுகிறார். பிறகு அது எப்படியோ பழைய பொருட்களை வாங்கும் கடைக்குப் போய்விடுகிறது. இரு நாட்கள் கழித்து சிறுவன் மூச்சிறைக்க ஓடிவந்து "அந்த விளக்குத்தண்டுக்கு ஜோடி கிடைத்துவிட்டது" என்றபடி மருத்துவரின் மேசையின் மீது அந்தக் கலைப்பொருளை வைக்கிறான். மருத்துவர் எதையோ சொல்ல முயன்று, பிறகு வாயடைத்து அமர்ந்துவிடுகிறார். பிறந்தமேனிக் கோலம் தொடர்பாக விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் ஊசலாடித் தவிக்கும் மனத்தின் நடிப்பை உணர்த்தும் மிகச் சிறந்த சிறுகதை இது.

'மெலிந்தவனும் பருத்தவனும்' என்ற மற்றொரு முக்கியமான சிறுகதை. பள்ளிக்காலத்து நண்பர்கள் இருவர் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புகைவண்டி நிலையத்தின் வாசலில் சந்தித்துக் கைகுலுக்கிக்கொள்கிறார்கள். சிறிது நேரம் பழைய கதைகளை நினைவுபடுத்திப் பேசி மகிழ்கிறார்கள்.

இறுதியாக இருவரும் தத்தம் பதவி நிலைகளையும் கௌரவங்களையும் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள். ஒருவர் அரசுத்துறையில் வேலை செய்பவர்; மாற்றல் காரணமாக அந்தப் புதிய ஊருக்கு வந்தவர். மற்றொருவர் அவரைவிட பல படிகள் மேலான பதவியில் பல விருதுகள் பெற்று பெருமையோடு வாழ்பவர். அந்நியமான ஒரு ஊரில் தற்செயலாக நிகழ்ந்த சந்திப்பில் அனிச்சையாக இருவருக்குமிடையில் உருவான அன்பும் நெருக்கமும் தகுதிநிலைகளைத் தெரிந்துகொண்டதும் சட்டென்று புகையென கரைந்து மறைகிறது. தகுதி சார்ந்து மனத்திலெழும் மதிப்புணர்வு ஒருவரை நிமிர்ந்து நிற்கவைக்கிறது. இன்னொருவரை குனிந்து வணங்கச் செய்கிறது. மீண்டும் அதே பழைய கேள்வி வாசகர்கள் முன்னால் எழுந்து வந்து நிற்கிறது. மனிதன் யார்? அன்பால் நினைக்கப்படவேண்டியவனா? அல்லது பதவியால் மதிப்பிடப்பட வேண்டியவனா?

ரஷ்யாவின் மீது அளவற்ற நேசம் கொண்டவராக இருந்தார் செகாவ். உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் கிராமங்களையும் நகரங்களையும் வாழ்நாள் முழுதும் சுற்றிவந்தார். தன்னை அறியாத மக்களிடையே புழங்குவதும் அவர்களைக் கவனிப்பதும் அவருக்கு மிகவும் பிடித்த செயல்கள். அவர் கவனித்த பல நூறு மனிதர்களைப்பற்றி அவர் எழுதிவைத்திருக்கும் சிறுசிறு குறிப்புகள் ஏராளம். அவருடைய மறைவுக்குப் பிறகு அவை தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளிவந்தது. ஒற்றை வரி மட்டுமே உள்ள குறிப்பும் அதில் உண்டு. ஒரே ஒரு வாக்கியம் மட்டுமே உள்ள குறிப்பும் உண்டு. ஆனால் ஒரு மானுடச் சித்திரமே அந்தக் குறிப்பில் கோட்டோவியமாகக் காட்சியளிக்கிறது. 'கங்காருபோல கழுத்து நீண்ட, கைகள் மெலிந்த ஒரு கர்ப்பிணிப்பெண் நடந்து போகிறாள்' என்பது ஒரு குறிப்பு. 'வாடகை வாகனத்தில் செல்லும் ஒருவர் ஜன்னல் கண்ணாடியை இறக்கி எதிரில் தெரியும் பல்கலைக்கழகக் கட்டடத்தைப் பார்த்து காறித் துப்புகிறார்' என்பது இன்னொரு குறிப்பு. செக்காவ் எழுதாத கதைகளை இந்த வரிகளிலிருந்து ஒரு வாசகன் பல கதைகளை எழுதிச் செல்லமுடியும். அன்றாடச் சித்திரங்களின் சாயலில் உள்ள அழிவற்ற சிற்பங்களே செக்காவ் தீட்டிய சிறுகதைகள்.

*ராஜதந்திரி* என்றொரு வித்தியாசமான சிறுகதை இத்தொகுப்பில் உள்ளது. தனித்து வாழ்ந்த ஒரு பெண் எதிர்பாராத விதமாக




ஒருநாள் இறந்துவிடுகிறாள். செய்தியறிந்ததும் அக்கம்பக்கத்தில் வாழ்ந்த அவள் உறவினர்கள் அனைவரும் மரணவீட்டுக்கு வந்து சேர்கிறார்கள். இறுதிச் சடங்குக்கு முன்பு யாரோ வயதில் மூத்த பெண்மணி பிரிந்து வாழும் அவளுடைய கணவனுக்குத் தகவல் அனுப்பிவைப்பது நல்லது என்னும் எண்ணத்தை முன்வைக்கிறாள். அவன் அதே ஊரில் ரயில்வே அலுவலகத்தில் வேலை செய்பவன். அவன் உடனுக்குடன் உணர்ச்சிவசப்படும் இயல்புடையவன். அவனைச் சந்தித்துப் பக்குவமாகத் தகவலைச் சொல்லிவிட்டு வருமாறு ஒருவரை அனுப்பிவைக்கின்றனர். அவர்தான் ராஜதந்திரி. அலுவலகத்துக்குச் சென்று இறந்துபோன பெண்ணின் கணவனைச் சந்திக்கிறார் அவர். ஏதேதோ பழைய நினைவுகளையும் தொடர்பில்லாத பல விஷயங்களையும் சுற்றி வளைத்துப் பேசுகிறார். கணவன் திகைத்து அதிர்ச்சியுறாதபடி மரணத் தகவலை எடுத்துரைக்க வேண்டும் என அவர் நினைக்கிறார். ஆனால் அவன் மனைவியைப் பற்றிய பேச்சைத் தொடங்கும்போதெல்லாம் மரணம் பற்றிய தகவலை பதற்றத்தில் அரைகுறையாக உளறுகிறார். திகைத்து அவன் என்ன என்ன என்று வினவியதும் நிதானத்துக்கு வந்து இல்லை இல்லை என தான் சொன்னதையெல்லாம் தானே மறுக்கிறார். ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்பதை மட்டும் உள்ளுணர்வால் உணர்ந்துகொள்ளும் கணவன் உணர்ச்சிவசப்பட்டு அவரிடம் உண்மையைச் சொல்லும்படி சத்தமிடுகிறான். அவரோ பலவிதமாக பொய்சொல்ல முயற்சி செய்து, இறுதியில்

உண்மையையே உளறுகிறார். அவன் திகைத்து கீழே சாய்ந்துவிடுகிறான். அதை எதிர்பார்க்காத அவர் கசப்புடன் மரண வீட்டுக்கே திரும்பி வந்து மரணத்தகவலை தன்னால் பக்குவமாக எடுத்துரைக்க முடியவில்லை என்றும் வேறு யாரையாவது அனுப்பி கீழே விழுந்துகிடப்பவனிடம் தகவலைச் சேர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறார்.

ஒரே நாளில் இரு மரணங்கள். அபத்தமாக நிகழ்ந்த இருவருடைய மரணங்களைச் சித்தரிக்கும் கதையைப்போல ஒரு வாசிப்பில் தோன்றினாலும், அடுத்தடுத்த வாசிப்பில் காதலற்ற வாழ்க்கையில் பிரிந்து வாழத் தொடங்கியதுமே இறந்துவிட்ட இரு மனங்களின் மரணங்களை நோக்கி நம் கவனம் திரும்புவதை உணரலாம். மீண்டும் பழைய கேள்வியே மேலெழுந்து வருகிறது. யார் மனிதன்? சங்கடங்களையும் மோதல்களையும் விலக்கி காதலுள்ள வாழ்க்கையை வாழத் தெரிந்தவன் மனிதனா? ஆணவத்தால் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகி உதட்டளவில் என் நெஞ்சில் அன்பு இன்னும் குறையவில்லை என்று சொல்லிக்கொண்டே தனிமையில் வாழ்பவன் மனிதனா?


துறவு பதினைந்தாம் நூற்றாண்டில் நடைபெற்ற ஒரு வேடிக்கைக் கதையைப்போலச் சித்தரிக்கப்பட்டாலும் மனத்தின் மாயத்தை முன்வைக்கும் கதை. ஊரிலிருந்து நூறு மைல் தள்ளி ஒரு பாலைவனத்தில் ஒரு மடம் இருக்கிறது. அது துறவிகள் வாழும் மடம். ஒவ்வொரு நாளும் வயது முதிர்ந்த மூத்த துறவி மற்றவர்களுக்கு இறைவனின் கருணையைப்பற்றியும் வருகையைப்பற்றியும் உபதேசம் செய்வார். பாடல்களைப் பாடுவார். தன்னிடமிருக்கும் ஆர்கன் கருவியை மீட்டி உருக்கமாக இசைப்பார். நேரத்துக்கு உணவு வழங்கப்படும். அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஒருநாள் இரவில் ஒரு புதிய மனிதன் அந்த மடத்தின் கதவைத் தட்டி பசிக்கு உணவு கேட்டான். வழிதவறி வந்துவிட்டதாகச் சொன்னான். துறவிகள் அவனுக்கு உணவு கொடுத்து உபசரித்தார்கள். உணவுண்ட பிறகு அவன் துறவிகளை எரிச்சலாகப் பார்த்து வசைபாடினான். ஆன்மாவைக் காப்பாற்ற தனிமையில் மடம் கட்டி உணவுண்ணுவதுதான் வழியா என்று கேட்டான். மேலும் எதையும் செய்யாமல் இருப்பதற்கா கடவுள் உங்களுக்கு நம்பிக்கையையும் கருணை உள்ளத்தையும் கொடுத்தார்? என்றெல்லாம் கேட்டு சங்கடத்தில் ஆழ்த்திவிட்டு வெளியேறினான்.


அவன் சொற்கள் மூத்த துறவியை அசைத்தன. மறுநாளே அவர் மற்றவர்களிடமிருந்து விடைபெற்று நகரை நோக்கிச் சென்றார். மூன்றாவது மாத இறுதியில் அவர் திரும்பிவந்தார். ஆனால் புண்பட்ட மனிதரைப்போல துயரமே உருவாகக் காணப்பட்டார் அவர். யாரிடமும் ஒரு சொல்லும் பேசாமல் அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டார். இரு தினங்களுக்குப் பிறகு வெளியே வந்து தன் நகர அனுபவங்களைப்பற்றிய செய்திகளை விவரித்தார். எங்கெங்கும் சாத்தானின் ஆட்சியே நிலவுகிறது என உரைக்கும்போது அவர் குரல் உடைந்தது. குடித்து கொண்டாடும் மனிதர்கள் வாழும் வீடுகளைப்பற்றிச் சொல்லும்போது அவர் முகம் சீற்றத்தில் சிவந்தது. பிறகு ஒரு வீட்டில் அரைகுறை ஆடையுடன் ஒரு பெண் ஆடியதையும் ஆண்கள் சுற்றிநின்று களித்ததைப்பற்றியும் பிறந்தமேனிக் கோலத்தில் பெண்களின் வடிவங்களைக் களிமண்ணால் செய்து நிறுத்தியிருக்கும் பயிற்சிக்கூடங்களைப்பற்றியும் எரிச்சலுடன் சொல்லிவிட்டு அறைக்குள் சென்று பூட்டிக்கொண்டார் அவர். மறுநாள் காலையில் வெளியே அவர் வந்தபோது மடத்தில் ஒருவரைக் கூட பார்க்கமுடியவில்லை. எல்லோரும் நகரத்தைநோக்கிச் சென்றுவிட்டிருந்தார்கள். மீண்டும் அதே கேள்வி. யார் துறவி? யார் மனிதன்? உலக இன்பத்தில் மூழ்கி இறை இன்பத்தை மறந்தவனா? இறை இன்பத்தில் திளைத்து உலக இன்பத்தைத் துறந்தவனா? இரு இன்பங்களையும் சமநிலையில் உணர்பவனா?

தல்ஸ்தோய், தஸ்தோவெஸ்கி, கார்க்கி என பல ஆளுமைகள் எழுதிக்கொண்டிருந்த காலகட்டத்திலேயே இளம்வயதிலேயே எழுதத் தொடங்கி 44 வயதில் மறைந்துபோனார் செக்காவ். நுரையீரல் பிரச்சினை இளமையிலிருந்தே அவரை ஆட்டிப் படைத்தது. அவரே ஒரு மருத்துவராக இருந்தபோதும், அப்பிரச்சினையிலிருந்து அவரால் மீளவே முடியவில்லை. உடல் துன்பங்களைப் பொருட்படுத்தாமல் எழுத்து, சேவை என தனக்கேயான உலகத்தை அவர் கட்டியெழுப்பிக்கொண்டார். ரஷ்யா முழுதும் காலராவால் பாதிப்படைந்தபோது, ஓர் உதவியாளர் கூட இல்லாமல் நாடெங்கும் பயணம் செய்து மருத்துவம் பார்த்து பலரைக் காப்பாற்றினார் அவர். தன் மரணம் நெருங்கிவிட்டதை உணர்ந்ததும் மருத்துவரின் அனுமதியோடு ஒரு வாய் ஷாம்பெயின் அருந்தி மகிழ்ந்து, அந்த இனிய நினைவுகளிலேயே திளைத்து இறந்துபோனார். அந்த மேதையின் கதையுலகம் விரிவும் ஆழமும் கொண்டது. அதன் ஒரு கோணத்தைப் புரிந்துகொள்ள நாயகரின் மொழிபெயர்த்திருக்கும் கதைகள் உதவுகின்றன. அவருக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது.

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் வெளியீடாக வெ.இறையன்பு அவர்களின் புதிய நூல்கள்

**ஒவ்வொரு புத்தகமும் விலை ரூ. 50/-**


























காவ்யாவின்
சிறப்பு வெளியீடுகள்
ரூ.400/-
சங்கமி
ரூ.270/-
வைகைச் செல்வி கவிதைகள்
ரூ.140/-
சுப்ரபாரதிமணியன் சிறுகதைகள் 2
ரூ.300/-
சுரதா என் ஆசான்
ரூ.300/-
மாவீரன் மருதநாயகம்
ரூ.300/-
மதுரை நாட்டுப்புற ஆண் தெய்வங்கள்
ரூ.450/-
அவரவர் உலகம்
ரூ.100/-
நக்கீரர் உரை பன்முக வாசிப்பு
ரூ.130/-
தோற்றப் பிழை
ரூ.1000/-
ரூ.300/-
கள்ள மௌனம்
ரூ.300/-
காவல்துறையில் நான் கடந்து வந்த பாதை
ரூ.90/-
தமிழில் சிறுபத்திரிக்கைகள் வல்லிக்கண்ணன் கட்டுரைகள் -1
ரூ.110/-
புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் வல்லிக்கண்ணன் கட்டுரைகள்-2
ரூ.110/-
கல்யாணி வல்லிக்கண்ணன் சிறுகதைகள் - 1
ரூ.100/-
சுதந்திரப் பறவைகள் வல்லிக்கண்ணன் சிறுகதைகள் - 2
ரூ.300/-
செவ்வானம் வல்லிக்கண்ணன் நாவல்கள் - 1
ரூ.300/-
நினைவுச்சரம் வல்லிக்கண்ணன் நாவல்கள் - 2
ரூ.300/-
டால்ஸ்டாய் கதைகள் வல்லிக்கண்ணன் மொழிபெயர்ப்புகள் -1
ரூ.300/-
கார்க்கி கதைகள் வல்லிக்கண்ணன் மொழிபெயர்ப்புகள் -2
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com



# திருஞானசம்பந்தரின் திருக்கானூர்ப்பதிகத்தில் அகப்பொருளமைவு

முனைவர் க.புஷ்பலதா

தமிழ் இலக்கியத்தில் பக்தி இலக்கியத்தின் பாடுபொருள் என்பது காணும் பொருள்கள் அனைத்திலும் இறைவனைக் காணுவதாக அமைகிறது.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதற்கொண்டு பாரதியார் வரை இறைவனைத் தலைவனாகவும், தங்களைத் தலைவியாகவும் பாவித்து எழுதிய பாடல்களை நோக்கினால் புறப்பொருள் கூறுகளோடு அகப்பொருளமைதி கொண்டு பாடும் மரபு தமிழ் பக்தி இலக்கியத்திற்கு உண்டு என்பதை அறிய இயலுகிறது.

திருஞான சம்பந்தர் பாடிய முதலாம் திருமுறை திருக்கானூர்ப் பதிகத்தில் ‘அறத்தொடு நிற்றல்’ என்னும் அகப்பொருள் துறையில் பாடியமையை ஆய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திருக்கானூர்த் திருத்தலம்:**

தற்போது மணல்மேடு என்று அழைக்கப்படும் திருக்கானூர் காவிரியின் வடகரைத் தலமாக அமைகிறது. அம்பிகை சிவயோகத்தில் இருந்த போது ஈசன் தீ வண்ணராகத் திருவுருவம் காட்டிய தலமாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் செம்மேனி நாதர் எனவும் இறைவி சிவலோகநாயகி எனவும் வணங்கப்படுகின்றனர். தக்கேசிப் பண்ணில் நாயக-நாயகி பாவனையில் அமைந்த பதிகமாகும்.

**நாயகநாயகி பாவனை:**

ஆன்மாவைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடுவது நாயக-நாயகி பாவனை என அழைக்கப்படுகிறது.

இறைவனோடு எண்ணங்களில் ஒன்ற நினைத்த ஏக்கமே அகப்பொருளமைதி கொண்ட

பக்தியாக மாறுகிறது. பக்தி இலக்கியம் இத்தகு பொருண்மையில், அமைப்பினில் பாடுவதை நாயக-நாயகி பாவனை என அழைக்கப்படுகிறது.

இறைவனோடு எண்ணங்களில் ஒன்ற நினைத்த ஏக்கமே அகப்பொருளமைதி கொண்ட பக்தியாக மாறுகிறது. பக்தி இலக்கியம் இத்தகு பொருண்மையில், அமைப்பினில் பாடுவதை நாயக-நாயகி பாவனை என அழைக்கிறது.

**“காமப் பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்”**

**(தொல்.பொருள்.81)**

என கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்படும் என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.

**அறத்தொடு நிற்றல்:**

‘அறத்தொடு நிற்றல்’ என்பதற்கு தமிழ்-தமிழ் அகராதி களவினைத் தமர்க்கு (சுற்றத்தார்க்கு) வெளிப்படுத்தல் என விளக்கம் தருகிறது.

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை-தன்னையர்க்கும் முறையாக வெளிப்படுத்தி நிற்பது அறத்தொடு நிற்றல் எனப்படும்.

இதனை,

**“தலைவி பாங்கிக் கறத்தோடு நிற்கும்**
**பாங்கி செவிலிக் கறத்தோடு நிற்கும்**
**செவிலி நற்றாய்க் கறத்தோடு நிற்கும்**
**நற்றாய் தன்னை தன்னையர்க் கறத்தோடு**
**நிற்ப என்ப நெறியுணர்ந் தோரே”**
**(நம்பி அகத்.48)**

என்று நம்பியகப் பொருள் குறிப்பிடுகிறது.

அறத்தொடு நிற்றலுக்கு விளக்கம் தருமிடத்து,

முறையுடையதாகப் பேசும் பேச்சை
‘அறத்தொடு நிற்றல்’

என்று கூறக் காரணம் என்ன? தலைவி அறத்தொடு பொருந்தவே நடந்திருக்கின்றாள் என்பதை ஒருவருக்கொருவர் காட்டி நிற்றல்தான் அறத்தொடு நிற்றல் என்பது. அறம் என்பதை இங்கு முறை, தக்கது என்று பொருள்படுத்த வேண்டும் என்பார்.

ந.சுப்புரெட்டியார் (தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ப.144)

**அறத்தொடு நிற்றல் நடைபெறும் முறை:**

அறத்தொடு நிலையானது முன்னிலைமொழி, முன்னிலைப் புறமொழி என இரு வகைப்படும் என்பார் நாற்கவிராச நம்பி.

தொல்காப்பியர்,

**“எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**
**கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியோடு தொகை இ**
**அவ்வெழு வகைய என்மனார் புலவர்”**
**(தொல்.பொருளியல்.நூ.12)**

என தலைவனை எளியவனாகக் கூறுதல், தலைவனை உயர்த்திக் கூறுதல், தலைவனது வேட்கையை மிகுத்துரைத்தல், தாமும் பிறருடனே உசாவுதல், காரணங்கூறி உணர்த்துதல், எதிர்ப்பட்டமை கூறுதல், உண்மையுரைத்தல் என்னும் ஏழு வகைகளில் தோழி அறத்தொடு நிற்றல் அமையும் என்பர்.

**தலைவி அறத்தொடு நிற்றல்:**

பாங்கியிற் கூட்டம் ஒன்று நீங்கலாக மற்ற மூன்று புணர்ச்சிக் கண் தலைவன் ஒரு வழித்தளத்திலும், வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்தாலும் தலைவனைச் செவிலி குறிவயிற் கண்டாலும், மனைவயிற் செறிக்கப்பட்டாலும், தலைவிக்கு வருத்தம் மிகுமாயின் தோழி தன்னை வினவினாலும், வினவாவிட்டாலும் அத்தோழியிடத்து அனநடைக்கிழத்தி அறத்தோடு நிற்கும். இதனை,

**“...வருத்தங்கூறின்**
**வினவியக் கண்ணும் வினவாக்கண்ணும்**
**அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்”**
**(நம்பி.அகத்.49)**

அறத்தொடு நிற்றல் தோழிக்கே சிறப்புடையதாக இருப்பதைத் தொல்காப்பியம், நம்பியகப் பொருள் போன்ற இலக்கண நூல்களும், குறிஞ்சிப்பாட்டு முதலான சங்க இலக்கிய நூல்களும் எடுத்துரைக்கின்றன. இருப்பினும் பக்தி இலக்கியத்தைப் பொறுத்த வரையில் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த நாயக-நாயகி பாவனை அவசியமாகிறது. திருக்கானூர்ப் பதிகத்தில் ஞான சம்பந்தர் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து சிவனை ஆண்மகனாக அன்பு கொண்டு தன் பக்தியை வெளிப்படுத்துவதால் தலைவியின் கூற்றாகவே இப்பதிகம் அமைகிறது. திருஞான சம்பந்தர் அறத்தொடு நிற்றலைத் தலைவிக்குச்

சிறப்புரிமையாக்கிப் பாடியதைத் திருக்கானூர்ப் பதிகத்தில் காண முடிகிறது.

**திருக்கானூர்ப் பதிகத்தில் அறத்தொடு நிற்றல்:**

தக்கனால் நேரப்பெற்ற சாபம் நிவர்த்தியடையும் பொருட்டு ஈசன் சந்திரனைத் திருமுடியில் சூடி அருள் புரிந்த இடம் திருக்கானூர் ஆகும். பெருமை மிகுந்த இடம் வாகனத்தில் வரும் இறைவனாகிய தலைவன் தன் இல்லம் புகுந்து உள்ளத்தைக் கவர்ந்து கொண்டதாக தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பதாகப் பாடியுள்ளார் திருஞான சம்பந்தர்

இதனை

"இறையார் வந்தென் இல்புகுந்தென்
னெழில் நலமுங் கொண்டார்"
(சம்பந்தர் தேவாரம் 1-73.3)

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது.

தேகத்தை 'இல்லம்' எனவும் அத்தேகத்தில் புகுந்த இறைவன் மனத்தினில் நுழைந்து, எழில் பெறச்செய்து தன்னைத்தானே ஆட்கொண்டான் என்ற மிகு அன்பு நெறி உணர்த்தப்படுகிறது.

"எண்ணா வந்தென் இல்புகுந்து அங்கு
எவ்வ நோய் செய்தான்"
(சம்பந்தர் தேவாரம் 1: 73.4)

"ஊர்கொள் தோறும் ஐயம் ஏற்றுஎன்
னுள்வெந் நோய் செய்தார்"
(சம்பந்தர் தேவாரம் 1: 73.5)

என்று பிற பொருட்கள் மீது வெறுப்படையுமாறு செய்து, ஊர்கள்தோறும் பிச்சை ஏற்கும் செயல் புரிந்து உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் என்று அறத்தொடு நிற்கிறாள் தலைவி.

ஈசன் உள்ளம் புகுந்து ஆட்கொண்டதால் உலகப்பொருள் மீது பற்று நீங்கி தலைவனாகிய ஈசனை மட்டுமே நினைந்து இன்புறும் தகைமையை 'எவ்வ நோய் செய்தான்' என்று அறத்தொடு நிற்கிறாள் தலைவி.

"..............ஐயம் என்றென்
இல்லே புகுந்து உள்ளத்
தெளிவு நானும் கொண்ட கள்வர்"
(சம்பந்தர் தேவாரம் 1:73:6)

"............ பொக்கம் பல பேசிப்
போவார் போல் மால் செய்து உள்ளம்
புக்க புரி நூலர்"
(சம்பந்தர் தேவாரம் 1:73:7)

என்று இல்லம் புகுந்து தன்னுடைய உள்ளத்தையும், தெளிவினையும், தன்மானத்தையும் கவர்ந்து கொண்டார் ஈசனாகிய தலைவன். தலைவனை நினைத்து மகிழும் தலைவியின் மனம் களிக்குமாறு பேசிச் செல்லும் தலைவனின் செயலை 'பொக்கம் பல பேசிப் போவார் போல' என்று அறத்தொடு நிற்கிறாள் தலைவி. இவ்வாறு தலைவனாகிய ஈசனை களவில் கண்டு மகிழ்ந்து, கற்பனையில் தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்து களவொழுக்கத்தைத் தலைவி வெளிப்படுத்துவதாகப் பாடியுள்ளார் சம்பந்தர்.

தமிழ் போன்று இனிமையாகப் பேசியும், தாளம், வீணை, முழவம், மொந்தை ஆகிய இசைக்கருவிகளுடன் பாடல்களைப் பாடியும், பாடல்களுக்கு ஏற்ப அசைவுகளைப் புரிந்தும், தன்னுள்ளத்தில் மகிழ்ச்சியைத் தந்து, எந்நேரமும் தலைவனையே நினைக்கச் செய்து குமிழும் பூ நிறத்தைத் தந்தவன் திருக்கானூர் ஈசன் என்று அறத்தொடு நிற்கிறாள் தலைவி.

"........ என்னுள்ளம் புகுந்து மாலை காலை
ஆடுவான்"
(சம்பந்தர் தேவாரம் 1.70.9)

என்றும்,

".......... கள்வர் வெள்ளர் போல உள்
வெந்நோய் செய்தார்"
(சம்பந்தர் தேவாரம் 1.70.10)

என்றும், திருமாலும், பிரமனும் காண இயலாத ஈசனாகிய தலைவன் தன் சிந்தையில் புகுந்தும், நாவின் உறைந்தும் சென்னியிலும் விளங்குகின்றான். தலைவியை முழுமையாக ஆட்கொண்டதை உணர்த்துகிறது. தன் உள்ளத்தில் புகுந்து காலை, மாலை இரு வேளையிலும் ஆடுதலைத் தலைவி தோழிக்கு உணர்த்துவதாக அறத்தொடு நிற்றல் அமைகிறது. கள்வராகிய ஈசன் தூய்மையாக உள்ளவர் போல் தன் உள்ளத்தில் புகுந்து நோய் உறுமாறு செய்தார் என தலைவி அறத்தொடு நிற்கும் நிலையை திருக்கானூர்ப் பதிகத்தில் காணமுடிகிறது.

***பார்வை நூல்கள்***


- *திருஞானசம்பந்தர் தேவாரம் - முதலாம் திருமுறை*
- *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*
- *நம்பியகப்பொருள்*
- *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - ந.சுப்புரெட்டியார்*

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbKublisher.in | email: info@ncbh.in


## முன் வெளியீட்டுத் திட்டம்

# தமிழில் மார்க்சிய செவ்வியல் நூல்கள் மொழிபெயர்ப்புத் திட்டம்

முதன்மைப் பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**



**பொதுவுடைமை - குழந்தைகளுக்காக**
பீனி அடம்ஸாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்: ஜேக்கப் புளூமென்ஃபெல்ட், சோஃபி லூவிஸ் | தமிழில் - எம். பாண்டியராஜன்





**இடதுசார் வெகுமக்களியத்தை நோக்கி**
சந்தால் மோஃபே | தமிழில்: பொன். சின்னதம்பி முருகேசன்




**சர்வாதிகாரம் குறித்து: இருபதாம் நூற்றாண்டிலிருந்து இருபது பாடங்கள்**
டிமோத்தி ஸ்னைடெர் | தமிழில்: ரமேஷ்





**அரசியலாகிற பண்பாடு**
கிறிஸ்டோபர் காட்வெல் பதிப்பாசிரியர்: டேவிட் மார்கோலியெஸ் தமிழில்: கமலாலயன்




**சொத்தின் வரலாறு - ஆதிகாலத்திலிருந்து நாகரிக காலம் வரை**
பால் லஃபார்க் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்





**லெனின் சந்தித்த நெருக்கடிகள்** (பயங்கரவாதம், போர், பேரரசு, காதல், புரட்சி)
தாரிக் அலி | தமிழில்: க.பூர்ணச்சந்திரன்




**கார்ல் மார்க்ஸ் - ஓர் ஆய்வு**
எர்னெஸ்ட் பிளாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: ஜான் மேக்ஸ்வெல் தமிழில்: பொன்.சின்னதம்பி முருகேசன்





**தொடக்கக் காலக் கிளர்ச்சியாளர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் தமிழில்: ரகு அந்தோணி




**மார்க்ஸ் : முதலாளியத்துக்கு மாற்று**
கியரென் ஆலென் | தமிழில்: சா.தேவதாஸ்




**ரோசா லக்சம்பர்கும் ஜனநாயக மீட்டுருவாக்கத்துக்கான போராட்டமும்**
ஜான் நிக்ஸன் | தமிழில்: சா.தேவதாஸ்





**சமூகம்சார் கொள்ளையர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் | தமிழில்: ரகு அந்தோணி



**கிராம்ஷியைப் பயன்படுத்துதல் - ஒரு புதிய அணுகுமுறை**
மைக்கேல் ஃபிலிப்பினி இத்தாலிய மொழி-யிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பேட்ரிக் ஜே.பார் | தமிழில்: சே.கோச்சடை



**பாலியல் முதிர்ச்சிமிக்க கம்யூனிசப் பெண்ணின் தன்வரலாறு**
அலெக்சாண்டிரா கொலந்தாய் | ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: சல்வேதார் அத்தன்சியோ | தமிழில்: அ.மங்கை




**மார்க்சின் தத்துவம்**
எட்டியேன் பாலிபர் | பிரெஞ்சு மொழி-யிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: கிறிஸ் டர்னர் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்



**மார்க்சுக்கு ஆதரவாக**
லூயி அல்தூசர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பென் புரூஸ்டெர் | தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

**15 நூல்கள்**
**சுமார் 4000 பக்கங்கள்**
**விலை இ.ரூ.5000/-**
**முன் வெளியீட்டுத் திட்டத்தில்**
**இ.ரூ.3000/-**
**மட்டுமே!**

**A5 அளவு, தரமான தாள், அழகிய வடிவமைப்புடன்**

**2020 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரை கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.**

இலங்கையிலுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள், வரலாற்றுத்துறை, தத்துவத் துறை, சமூகவியல் துறை மற்றும் மானுடவியல் துறைப் பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பெரிதும் பயன்படும் வகையில் தமிழில் 15 மார்க்சிய செவ்வியல் நூல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இந்நூல்களை முன்வெளியீட்டுத் திட்டத்தில் பெற, இலங்கை கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>முகவரி</u>

**பூபாலசிங்கம் புத்தக சாலை,**
**202, செட்டியார் வீதி, கொழும்பு - 011, இலங்கை.**
**E.mail: poobalasingham202@gmail.com |**
**Ph: 011-2422321, 2435713**




கட்டுரை

# காந்தி நேரு பட்டேல்

## உதயை மு. வீரையன்

இந்தியாவை காந்தியின் தேசம் என்றே உலகம் நினைக்கிறது; அடையாளம் காண்கிறது. அவர் ‘மகாத்மா’ என்றே அழைக்கப்பட்டார். ஏழை எளிய மக்களின் ஆடைகளை அணிந்து கொண்டு செல்வந்தர்களும் தேடிவரும்படியான ஆசிரம வாழ்க்கை. உலகமே கூர்ந்து கவனிக்கும்படியாக மெல்லிய குரலில் பேச்சு.

‘மனித வர்க்கத்திடமிருக்கும் வேற்றுமையில்லா அன்பிலிருந்துதான் என் செயல்கள் எல்லாம் பிறக்கின்றன’ என்றார் காந்தியடிகள். சத்தியத்தை நாடும் ஆர்வத்தை முக்கியமாகக் கொண்டதாகவும், உயிர்களிடத்து அளவு கடந்த பற்றும், ஆன்மிகத் தேடுதலும் கொண்டதாகவும் அவரது வாழ்க்கை அமைந்தது.

பெரிய மகான் எப்போதோ ஒருமுறை அவதரிக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் அவதரிக்காமல் பல நூற்றாண்டுகள்

கழிவதும் உண்டு. அவரது செயல்பாடுகளைக் கொண்டே அவர்தம் வாழ்வில் அறியப்படுகிறார். முதலில் அவர் வாழ்ந்து காட்டுகிறார்; மற்றவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கூறுகிறார். அங்கே சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருப்பதில்லை.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அகிம்சை, தம்மைத் தாமே வருத்திக் கொள்வது என்னும் நாகரிகமான புதிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இந்தியாவின் விடுதலை தொடர்பாக அவர் மேற்கொண்ட நிலை ஆங்கிலேயர் மீது எவ்விதமான வெறுப்பையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல.

“உயிர்களிடத்து அன்பு கொள்வது போன்றதுதான் நாட்டின் மீது அன்பு கொள்வதும். மனிதனாகவும், மனிதநேயம் கொண்டவனாகவும் இருப்பதால்தான் தேசப்பற்று கொண்டவனாகவும் நான் இருக்கிறேன். இந்தியாவுக்குச் சேவை செய்வதற்காக இங்கிலாந்திற்கோ, ஜெர்மனிக்கோ தீங்கிழைக்க மாட்டேன்” என்றார் அண்ணல் காந்தியார்.

மனித வரலாற்றில் அகிம்சைக் கொள்கையை தனிப்பட்டவரிடமிருந்து சமூக, அரசியல் மட்டத்திற்கு முதன் முதல் பரப்பியவர் காந்தியார். அகிம்சையை சோதிப்பதற்கும் அதன் தகுதியை நிலை நாட்டுவதற்குமே அரசியலில் இறங்கினார்.

“சத்தியத்திற்கும் அகிம்சைக்கும் அரசியலிலும், உலகச் செயல்பாடுகளிலும் இடமில்லை என்று சில நண்பர்கள் என்னிடம் கூறியுள்ளனர். அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அன்றாட வாழ்க்கையில் அவற்றைப் புகுத்தி அனுசரிப்பதே நெடுகவும் எனது சோதனையாக இருந்து வருகிறது,” என்கிறார் அவர்.

அணு ஆயுதங்கள் மிகுந்திருக்கும் இந்தக் காலத்தில் உலகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் அகிம்சைக் கொள்கையையே நாம் கடைப்பிடித்தாக வேண்டும். “அணுகுண்டு ஹிரோஷிமாவை நிர்மூலமாக்கி விட்டது என்பதை முதலில் நான் அறிந்தபோது சலனமின்றியே இருந்தேன். இப்பொழுது உலகம் அகிம்சையை அனுசரித்தால் அன்றி மனிதவர்க்கத்தின் கதி தற்கொலையிலேயே போய் முடியும்” என்று வேதனையுடன் கூறினார்.

அறிவியல் உண்டாக்கியிருக்கும் புதிய நிலைமைக்கு ஏற்ற வகையில் நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளமுடியாமல் இருக்கும் இந்தச் சிக்கலான நிலையில் அகிம்சை, சத்தியம், நிலைமையை உணர்ந்து கொள்ளும் கொள்கை ஆகியவற்றைக் கடைப்பிடித்து வருவது எளிதானது அல்ல. ஆனால் அதற்காக நாம் நம் முயற்சியை விட்டுவிடக் கூடாது.

ஒரு புத்தர் அல்லது ஒரு காந்தி, ஒரு நீரோ அல்லது ஒரு ஹிட்லர் போன்ற மாறுபட்ட படைப்புகளையும் உலகம் கண்டு கொண்டிருக்கிறது. என்றாலும், வரலாற்றில் தோன்றிய ஒரு மகாத்மா நம் தலைமுறையில் வாழ்ந்தார். நம்முடன் வாழ்ந்தார், நம்முடன் பேசினார், நாட்டின் விடுதலைக்கு நம்மை அணி திரட்டினார் என்பது பெருமையாக இல்லையா?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியாரின் வழிகாட்டுதல் முக்கிய இடம்பெற்றது. நேரு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். காந்திஜியும், நேருவும் கொண்டிருந்த உறவு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. இவ்வளவுக்கும் காந்திஜியின் அரசியல், ஆன்மீகக் கருத்துகளோடு முற்றிலும் மாறுபட்டவர் நேரு.

நேரு பகுத்தறிவு வாதி. சாதி, சமயங்களை வெறுத்தவர். மூடநம்பிக்கைகளை எதிர்த்தவர். இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருப்பதற்கு அவரே காரணம். நேருவுக்கும், காந்திஜிக்கும் எவ்வளவு முரண்பாடுகள் உண்டோ, அவற்றைவிட அதிகமாக நேருவுக்கும், வல்லபாய் பட்டேலுக்கும் உண்டு. இவர்களே இந்தியாவின் முதல் பிரதமராகவும், முதல் துணைப் பிரதமராகவும் பதவி ஏற்று சிறப்பாகப் பணிபுரிந்தார்கள். ‘இரும்பு மனிதர்’ என்று பாராட்டப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் குட்டி சமஸ்தானங்களை இணைத்து புதிய இந்தியாவை உருவாக்கினார்.

இந்தியா விடுதலை பெற்றபோது இரண்டு நாடுகளாகப் பிளவுபட்டதை யாராலும் தடுக்க முடியவில்லை. ‘இந்தியா ஒரு நாடோ அல்லது தேசமோ அன்று; பல நாடுகளின் சேர்க்கையே’ என்று ஜின்னா வாதிட்டார்.

‘பிரிவினையை காங்கிரஸ் ஏற்றால் அது தமது சடலத்தின் மீதுதான் நடைபெற முடியும்’ என்று ஒருமுறை ஆசாத்திடம் கூறிய காந்திஜியும், பிரிவினை இல்லையென்றால் இந்தியாவில் இரத்த ஆறு ஓடும் என்பதை உணர்ந்து பிரிவினைக்காகப் பரிந்து பேச முன்வந்தார்.

இந்திய விடுதலை நாள் நெருங்க நெருங்க, வகுப்புக் கலவரங்கள் நடந்தன. அவற்றைத் தொடர்ந்து அகதிகளாக மக்கள் ஒரு பக்கமிருந்து மறுபக்கம் செல்லத் தொடங்கினர். கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழியெங்கும். சுமார் 2 இலட்சம் பேர் மடிந்தனர் என்று மதிப்பிடப்படுகிறது. வீடிழந்தும், வாழ்விழந்தும் அநாதையானவர் தொகை ஏராளம். இந்திய வரலாற்றில் கறை படிந்த பக்கங்கள் இவை.


ஆகஸ்ட் 13 அன்று கராச்சி சென்று பாகிஸ்தான் விடுதலை குறித்து உரையாற்றிய மவுண்ட்பேட்டன், ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றுக் கொண்டார். நேருவின் தலைமையில் அமைச்சரவை உறுதி எடுத்துக் கொண்டது.

1947 ஆகஸ்ட் 14ஆம் நாள் நள்ளிரவில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார்: “வரலாற்றிலேயே மிகமிக அரிதாக வரும் ஒரு தினம் இப்போது வருகிறது. பழமையிலிருந்து வெளியேறிப் புதுமையில் கால்வைக்கின்ற ஒரு கணம், யுகம் முடிவுறுகின்ற ஒரு கணம், நீண்ட காலமாக அடக்கப்பட்டுக் கிடந்த ஒரு நாட்டின் ஆத்மா கட்டறுத்துக் குரலெழுப்பும் ஒரு கணம் இது. இத்தகைய ஒரு கணத்தில் இந்திய நாட்டுக்கும், அதன் மக்களுக்கும், மனிதகுலம் முழுவதற்குமே தொண்டாற்றுவதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வதென்று உறுதிமொழி மேற்கொள்வது பொருத்தமாகும்” என்று நேரு குறிப்பிட்டார்.

இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நாடு முழுவதும் நடைபெற்ற நேரத்தில் நவகாளியில் இந்து முஸ்லிம் கலவரம் பற்றி எரிந்தது. பல்வேறு பகுதிகளுக்கும் வகுப்புக் கலவரம் பரவியது. தமது பணி அங்கேதான் தொடர்கிறது என்று கூறி காந்தியடிகள் நவகாளியை நோக்கித் தம் பயணத்தைத் தொடங்கினார்.

நாடெங்கும் இந்து முஸ்லிம் வகுப்புக் கலவரம் இன்னும் ஓயவில்லை. 1948 ஜனவரி 12 அன்று உண்ணாவிரதம் இருக்கப் போவதாக காந்திஜி அறிவித்தார். அவருடைய வாழ்க்கையில் இது 16ஆவது உண்ணாவிரதம். தில்லியில் அமைதியும், ஒழுங்கும் ஏற்படும் வரை உண்ணாவிரதத்தைத் தொடர்வதென்று உறுதியுடன் இருந்தார்.

அன்றைய தினமே நேரு, ஆசாத், பட்டேல் ஆகிய மூவரும் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என்று காந்திஜியைக் கேட்டுக் கொண்டனர். எல்லாவிதமான மதச் சண்டைகளும் நிறுத்தப்பட வேண்டும்; முஸ்லிம்களின் மசூதிகளும், நினைவுச் சின்னங்களும் அழித்ததற்கு இந்துக்கள் ஈடு செய்ய வேண்டும் என்று காந்திஜி நிபந்தனைகளைக் கூறினார்.



நாட்டில் மறுபடியும் அமைதி ஏற்பட்டது. காந்திஜியும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். ஆனால் இந்த முடிவு எல்லோருக்கும் திருப்தியைக் கொடுக்கவில்லை. காந்தி புனிதமான இந்து மதத்துக்குத் துரோகம் செய்துவிட்டார் என்று இந்து மகா சபைத் தலைவர்கள் குற்றம் சுமத்தினர். காந்தியின் பிரார்த்தனைக் கூட்டங்களில் குரான் மற்றும் பைபிளிலிருந்து சில பகுதிகள் வாசிப்பதை அனுமதிக்க மாட்டோம் என்று அச்சுறுத்தினர்.

1948 ஜனவரி 30இல் காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டார். நாடே கொந்தளித்தது. இந்தப் படுகொலையைச் செய்தவன் முஸ்லிமாகவே இருப்பான் என்று நினைத்தது தவறாகப் போய்விட்டது. இந்தப் படுகொலையைச் செய்தவன் இந்து மதவெறி அமைப்பான இந்து மகா சபையைச் சேர்ந்தவன் என்பதை அறிந்தபோது, இந்து மதவெறிக்கு அவர் பலியானார் என்பது உலகத்துக்குத் தெரிந்தது.

“நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டிய விளக்கு அணைந்துவிட்டது. இருள் நம்மைச் சூழ்ந்து விட்டது” என்று நேரு பதறியபடி கதறினார்.

“உங்களிடம் எதைச் சொல்வது, அதை எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. நாம் அன்போடு நேசித்த தலைவர் - பாபு என்றுதான் நாம் அவரை அழைத்தோம். நாட்டின் தந்தை மறைந்துவிட்டார். அறிவுரை அல்லது ஆறுதல் வார்த்தைகளைக் கேட்பதற்காக நாம் இனிமேல் அவரிடம் போக முடியாது...”

காந்திஜி மரணமடைவதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய அரசியல் வாரிசு என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு முறைப்படி அறிவித்தார். அவரும் நேருவும் வெவ்வேறு அரசியல் மொழிகளைப் பேசுபவர்களாயிற்றே என்று காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில் ஐயப்பாடு ஏற்பட்டபோது, இதயங்கள் ஒன்று சேருவதற்கு மொழி ஒரு தடையல்ல; நான் மறைந்த பிறகு, நேரு என்னுடைய மொழியைப் பேசுவார் என்று காந்தி உறுதியாகப் பதிலளித்தார்.

ஆயினும், காங்கிரஸ் கட்சியிலிருந்த வலதுசாரிகள் வல்லபாய் பட்டேலை இரண்டாவது இடத்தில் வைத்திருந்தனர். பட்டேல் பிரதமர் நேருவைப் பலமுறை எதிர்த்தார். அண்மைக் காலமாக காந்திஜியின் கருத்துக்களை அவர் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால் ஜனவரி 30இல் வெடித்த துப்பாக்கிக் குண்டுகள் பட்டேலுக்கு எதிராகத் திரும்பின. அன்று நடந்த நிகழ்வுகளுக்கு உள்துறையமைச்சர்தான் பொறுப்பு என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. காந்திஜிக்கு எதிராக ஜனவரி 20 அன்றே வெடிகுண்டு வீசப்பட்டது. அதன் பின்னும் அவருக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை. காந்திஜியின்



உயிரைக் காப்பதற்கு அவர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது.

பட்டேல் கோபம் கொண்டார். எனக்கு எதிராக இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லி காங்கிரசில் பிளவு ஏற்படுத்த காங்கிரஸ் விரோதிகள் முயல்கிறார்கள் என்று அவர் கூறினார். பட்டேலின் பல குணங்களை நேரு வெறுத்தார். அறிவுஜீவிகளைத் தவிர்ப்பது, சமதரும நம்பிக்கைகளைக் கேலி செய்வது, கம்யூனிஸ்டுகளிடம் கடுமையாக நடந்து கொள்வது என்னும் குறைகள் பட்டேலிடம் இருந்தன.

ஒருவரைத் தனிப்பட்ட முறையில் பிடிக்காவிட்டாலும், அரசியல் என்று வரும்போது அவரோடு ஒத்துழைக்கும் பரந்த மனம் நேருவுக்கு உண்டு. கட்சியமைப்புகளில் பட்டேலுக்கு இருந்த திறமையை அவர் மதித்தார். சுதந்திரமான, பலம் பொருந்திய இந்தியாவை உருவாக்கிய அவரது தேசபக்தியை நேரு சந்தேகிக்கவில்லை.

காந்திஜி மரணமடைந்து சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர் நேருவிடம் ஒரு கேள்வி கேட்டார். "நீங்களும் பட்டேலும் அரசியல் எதிரிகள், உங்கள் இருவரில் வெற்றி பெறப்போவது யார் என்பதைப் பொருத்தே நாட்டின் எதிர்காலம் அமையும் என்று கூறுவது சரியாகுமா?..."

"நாங்கள் அடிக்கடி வேறுபடுவதுண்டு. ஆனால், காந்திஜியின் நினைவு எப்படியோ எங்களை ஒன்று சேர்த்து விடுகிறது..." என்றார் நேரு.

காந்திஜி மறைந்து விட்டார். இதுவரையில் வெற்றிகரமாக நடைபெற்ற பட்டேலின் அரசியல் வாழ்க்கையில் ஏதோ குறைகள் ஏற்பட்டன. அரசியல் மற்றும் தனிப்பட்ட தோல்விகள் பட்டேலின் அசாதாரணமான ஆற்றலைப் பலவீனப்படுத்தி விட்டன. கடைசியில் அவர் உடல்நலம் கெட்டது. 1948 மார்ச்சில் பட்டேலுக்கு ஆபத்தான இதயவலி ஏற்பட்டது.

குஜராத் மாநிலம் சூரத் மாவட்டத்தில், பர்தோலி வட்டம் உள்ளது. அங்குள்ள மக்களுக்கு பயிர்த்தொழிலே உயிர்த்தொழில். ஆங்கில ஆட்சியாளர் அங்கு நிலவரியை 27 விழுக்காடு உயர்த்திவிட்டனர். பர்தோலி மக்கள் அதிர்ச்சியும், ஆத்திரமும் கொண்டனர்.

அவர்களுக்காக வல்லபாய் பட்டேல் காந்திஜியின் வழிகாட்டுதலின்படி அகிம்சை அறப்போர் நடத்தினர். 80 ஆயிரம் விவசாயிகள் அதில் பங்கேற்றனர். உறுதி குலையாத விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆங்கில அரசு பணிந்தது. காந்திஜி பெருமிதம் அடைந்தார். இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய வல்லபாய் பட்டேலை 'பர்தோலியின் சர்தார்' என்று சிறப்பித்தார். சர்தார் என்றால் தலைவர் என்று பொருள்.

கடுமையான வயிற்று வலிக்குப் பிறகு சர்தார் ஓய்வெடுக்க மும்பை சென்றார்: "நான் வாழ்வில் முதுமைப் பருவத்தை அடைந்து விட்டேன். இந்த வயதில் நான் ஓய்வு எடுத்துக் கொள்வது எனது உரிமைதான். ஆனால் எனது தாய்நாடு நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறது. எஞ்சியுள்ள நாட்களை நாட்டுப் பணிக்கு அர்ப்பணிக்க என் மனம் விரும்புகிறது" என்று அங்குப் பேசினார்.

பல மாதங்கள் சிகிச்சைக்குப் பிறகு அவர் ஓரளவு குணமடைந்தார். ஒரு கூட்டத்தில் நேரு மேடையில் தோன்றியதும் ஏராளமான விவசாயிகள் அவரை உற்சாகமாக வரவேற்றதையும், தன்னைப் பற்றி அவர்கள் சிறிதும் அக்கறை எடுத்துக் கொள்ளாததையும் பட்டேல் கவனித்தார்.

"இவர்களை என் பக்கத்துக்குத் திருப்ப என்னால் ஒருபோதும் முடியாது. அவர்கள் ஜவஹர்லாலைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்று பட்டேல் அங்கிருந்த காங்கிரஸ்காரரிடம் கூறினார்.

காந்தியின் மரணம் இந்தியா முழுமைக்கும் ஈடு செய்யப்பட முடியாத இழப்பாக இருந்தது. பிரதமர் நேருவுக்கும், துணைப் பிரதமர் பட்டேலுக்கும் கேட்க வேண்டுமா?

நூல்அறிமுகம்



# உயிரோடிருப்பவர்கள்

ஜி.சரவணன்

இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு இந்தியா முழுவதும் அமலிதுமளிப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழகத்தில் குடியேறியிருக்கும் இலங்கை அகதிகளுக்கான குடியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், முப்பதாண்டுகளுக்கும் மேலாக தமிழக அகதிகள் முகாமொன்றில் வசித்துவரும் தோழர் விஜிதரன் எழுதிய 'ஏதிலி' எனும் புனைவு குறித்து அறிமுகம் செய்வதன் வாயிலாக இலங்கை அகதிகளின் அவல வாழ்நிலையை ஓரளவாவது புரிந்துகொள்ளமுடியும் எனக் கருதுகிறேன்.

'வாழ்வு என்பதற்கும் வாழ்க்கை என்பதற்கும் ஓரெழுத்துதான் வித்தியாசம்' என்பார் புதுமைப்பித்தன். வாழ்தலுக்கும் உயிரோடிருத்தலுக்குமான வித்தியாசத்தை விரிவாக விளக்குகிறது இப்புனைவு. இவை இரண்டுக்குமான இடைவெளியை முன்வைக்கும் படைப்புகள் இதற்கு முன்னதாக எதுவும் தமிழில் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை.

இந்நூலை வாசித்தபோது எனக்கு மிகுந்த அதிர்ச்சியாகவும் ஆயாசமாகவும் இருந்தது. காரணம் 1984-இல் நான் பள்ளி மாணவனாக இருந்த காலத்திலிருந்தே ஈழத்தமிழர் தொடர்பான போராட்டங்களை அறிந்தவனாகவும் அதில் பங்கேற்றவனாகவும் இருந்திருக்கிறேன். கும்பகோணத்தில் ஈபிஆர்எல்எப் பயிற்சி முகாம் நடந்துகொண்டிருந்த காலத்தில் அம்முகாமிலிருந்த 'ஈழமணி' எனும் ஈழத்தோழரை எங்கள் கிராமத்திற்கு அழைத்து வந்து கூட்டம் நடத்தி அதில் நானும் பேசியிருக்கிறேன். அக்கூட்டம் நடத்துவதற்காகப் பேருந்துகளில் ஏறி துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து உண்டியல் வசூல் செய்து கூட்டச்செலவுபோக மீதத்தொகையை முகாமுக்குக் கொடுத்தோம்.

இந்நாவல் அதிர்ச்சியளித்தது எனக் குறிப்பிட்டதற்குக் காரணம் தூரத்துப் பச்சை

கருகுவது கண்டு கவலையோடும் கவனத்தோடும் கதறிக் கூவிக்கொண்டிருந்தவனுக்கு காலடியில் மனிதர்கள் கருகிக்கொண்டிருக்கும் நிலை இத்தனையாண்டு காலம் கண்ணுக்குத் தட்டுப்படாமல் இருந்திருக்கிறதே என்றெண்ணி என்மீதே எனக்கு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது. ஒருவேளை தமிழகம் தவிர்த்த வேறு பல நாடுகளில் பாதுகாப்பாக வாழும் ஈழ அகதிகளைப்போலவே தமிழக அகதிகளையும் உருவகப்படுத்திக்கொண்டேனே என்னவோ தெரியவில்லை. என்னையே நான் அருவருப்பாக உணரத் தொடங்கிய தருணமது. இப்போதும்கூட ஒருவித வெட்கமும் கழிவிரக்கமும் கூடிய உன்மத்த மனநிலையிலேயே இதனை எழுதுகிறேன்.

நாவலில் வெவ்வேறு மனிதர்கள் வருகிறார்கள். முதல் அத்தியாயத்திற்கும் கடைசி அத்தியாயத்திற்கும் எந்த முடிச்சும் கிடையாது. ஒருவருக்கொருவருடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஆனால் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஈழத்தமிழர்கள் என்ற அளவில் அவர்கள் தங்கள் இருப்பை வெளிப்படுத்தி நிற்கின்றனர். அதேவேளையில் நாவல் என்ற மரபான வடிவத்தில் இது கட்டமைக்கப்படவில்லை என்பதே இந்நாவலின் வெற்றி எனக் கருத இடமுண்டு. இதன் உள்ளடக்கத்திற்காகவும் உண்மைத் தன்மைக்காகவும் உரத்துப்பேசும் அரசியலுக்காகவும் உன்னதமானதொரு படைப்பாகத் தன்னை மேலுயர்த்திக்கொள்கிறது. மேலும் இழப்புகளுக்காகவும் தோல்விகளுக்காகவும் குமுறிக்கொண்டிருப்பதைவிடவும் அடுத்தகட்ட நகர்வாக என்ன செய்யவேண்டும் என்பதையும் தீர்க்கமாகப் பேசுகிறது நாவல்.

பெரும்பாலான ஈழ எழுத்தாளர்களின் படைப்புகள் ஈழத்தில் நிகழ்ந்தேறிய வன்கொடுமைகளையும் சகிக்கவியலா கொடூரங்களையும் பக்கம்பக்கமாக எழுதிக் குவித்துள்ளன. அவை ஏற்படுத்திய தாக்கமும் இறுக்கமும் அடர்த்தியானவை என்பதில் மாற்று இல்லை. அவற்றிலிருந்து மாறுபட்டும் விலகியும் இருக்கும் இப்புனைவு எதனையெல்லாம் பேசாமல் படைப்பாளர் பலரும் மௌனித்துக் கடந்தனரோ அதனை ஆரவாரமாகப் பேசுகிறது. தமிழக, இந்திய அரசுகள் மற்றும் தமிழகத் தலைவர்களின் அரசியல் அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் திரைமறைவு வேலைகளையும் எவ்விதத் தயக்கமுமின்றி வெளிச்சப்படுத்துகிறது.

இலங்கையிலிருந்து கையிலிருந்த பணம் அத்தனையும் கொடுத்து பயந்துபயந்து கள்ளத்தனமாகத் தப்பிவந்து தமிழகத்து அகதி முகாம்களில் குடியேறிய மக்களைப் பற்றி மட்டும் 'ஏதிலி' பேசவில்லை. போராட்டகால ஈழத்தில் நிலவிய சூழல் நெருக்கடிகளையும் தப்பித்து வெளியேறியே ஆகவேண்டிய அவசர அவசியத்தையும் ஆங்காங்கே வெவ்வேறு பாத்திரங்களின் வழியாக உணர்த்துகிறது.

சாவிலிருந்து தப்பி வாழவேண்டுமெனும் விருப்பில் தாயகம் வந்துசேர்ந்த மக்களின் வாழ்நிலையைப் பார்க்கிறபோது அங்கேயே அவர்கள் போரில் செத்தழிந்திருக்கலாமோ என்பதாக நம்மை எண்ணங்கொள்ள வைப்பது சாதலினும் பெருங்கொடுமையன்றி வேறென்ன?

அகதிவாழ்வு தரும் தீராத மனநெருக்கடிகளால் தினசரி குடிக்கு அடிமையாகி தன்னைத்தானே வசை பாடிக்கொண்டு செய்வதறியாது தத்தளிக்கும் நிலையில் 'இதையெல்லாம் நீ எழுதவேண்டும்' என்று கதைசொல்லியான அகதியிடம் இன்னொரு அகதி நண்பர் கோரிக்கை வைப்பதாகத் தொடங்குகிறது முதல் அத்தியாயம்.

இலங்கையிலிருந்து ஒரு குடும்பம் தப்பித்து அகதிகளாக வெளியேறும் பதட்டமான நிமிடங்களை விவரிக்கிறது நாவலின் அடுத்த பகுதி. அந்தக் குடும்பத்தில் ஒருவராக கதைசொல்லியை ஊகிக்கலாம். இவ்விடத்தில் 'அமுதாவின் மாமனார் வாழ்நாள் முழுக்க வீடுவீடாகப் போய் துணிகள் வாங்கித் துவைத்துச் சேர்த்த ஒரே சொத்தான அயன் பண்ணும் கடையை விற்ற காசில் நடந்தேறுகிறது இந்தப் பயணம் இருந்தாலும் என்ன செய்ய நிலத்தைவிட உயிர் பெரிதுதானே' என்றெழுதுகிறார் விஜிதரன்.

இதனை விரிவாகப் பார்ப்பதற்கு முன்னதாக அச்சமும் பதற்றமும் தவிப்புமாக இருள்வெளியில் நிகழும் இதேபோன்றதொரு அகதிகள் வெளியேற்றத்தைச் சுட்டுவது பொருத்தமானதாயிருக்கும் எனத் தோன்றுகிறது.

த.அகிலன் எழுதிய 'மரணத்தின் வாசனை' எனும் நூல் ஈழப்போர்க்காலத்தில் முடிவுக்கு வந்த வெவ்வேறு மனிதர்களின் மரணங்களை உணர்வெழுச்சியோடும் உருக்கத்தோடும் ஆவணப்படுத்தியுள்ளது.

இலங்கையிலிருந்து அவர்கள் புறப்படுகிற தருணத்தை இப்படி எழுதுகிறார் அகிலன்.

"அவர்கள் அந்த ஈரமணலில் நடக்கத் தொடங்கினார்கள். அவன்மீது ஒரு புதுக்காற்று படர்வதாய் உணர்ந்தான். புதுசு, எல்லாம்

புதுசு. அவன் இனி இந்த நிலத்திற்கு அன்னியன். அவன் ஒரு கள்ளத்தோணி. அவன் ஒரு அகதி. ஒரு நிலத்தின் எஜமானன். காலத்தால் தூக்கியெறியப்படக்கூடாத ஒரு பள்ளம் இது. இப்போது நான் ஒரு அகதி. அது அவனுக்குள் உறுத்தலாயிருக்கிறதா? இல்லையா? என அவன் சரியாக அறியாதிருந்தான். ஆனால் மனசுக்குள் ஓரமாய் ஒரு மகிழ்ச்சி இருந்தது.”

நீளும் அவ்வத்தியாயத்தின் நிறைவில் ஓட்டிக்காரன் இடைவழியில் எங்கோ இறக்கிவிட்டுப் போய்விட்டது தெரிந்த நிலையில், அக்குடும்பத்து ஆண்பிள்ளை நான் எப்படியாவது கரைக்குச் சென்று ஏதாகிலும் படகு ஏற்பாடு செய்துவருகிறேன் என்கிறவிடத்தில் அகிலன் எழுதுகிறார்.




**ஏதிலி**
**அ. சி. விஜிதரன்**
**வெளியீடு: சிந்தன் புக்ஸ்**
**பக்: 294 / விலை:ரூ.250/-**

“அம்மா, வேண்டாமையா, செத்தாலும் எல்லாரும் ஒரேயடியாய் சாவம். போகாதை எண்டாள். மேரியும் ஜெனிற்றாவும் அழுதார்கள். அவனுக்கும் கத்தி அழவேண்டும் போலிருந்தது.”

இறுதியில் அந்தக் குடும்பமே கடல்வழியில் தங்களைக் கைநழுவவிட்டதாக முடிவுறும். வெளியேறுவதற்கு முன்னதாக ஓரமாய்த் துளிர்த்த மகிழ்ச்சி சில கணங்களில் ஒட்டுமொத்தமாகக் கரைந்துபோய்விடும்.

இப்படியாக எத்தனையோ குடும்பங்கள் கடலையே தங்கள் புதைநிலமாக மாற்றிக்கொண்டமாதிரியான அவலம் நேராமல் இந்நாவலில் முப்பத்துநான்கு பேரையும் ஓட்டிக்காரன் பத்திரமாக தமிழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறான்.

வழக்கமான விசாரணைகள் இத்யாதிகள் எல்லாம் முடிந்து அவர்களின் பெயர்கள் மற்றும் விசாரணைகள் நடக்குமிடத்தைப் பற்றி தோழர் விஜிதரன் எழுதுகிறபோதுதான் முன்பே கூறியதுபோல மற்ற ஈழப்படைப்பாளிகளிடம் காணப்பெறாத ஒரு விடயத்தைக் காணமுடிகிறது.

அதாவது சாதி என்ற இடத்தில் அனைவரும் ‘வெளாளர்‘ என்றே பதிவு செய்திருந்தனர் என்று எழுதுகிறார். பெரும்பான்மை ஈழப் படைப்பாளர்கள் ஆவணப்படுத்த முனையாத அம்சமிது.

தமிழக அகதிகள் முகாம் குறித்த விவரணைகள் ஒருசில அத்தியாயங்களில் வருகின்றன. குறிப்பாக, முதல் அத்தியாயத்தில் கதைசொல்லி-யிடம் என் கதையை நீ எழுதவேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அகதித் தோழரின் உள்ளுணர்வோடு அமைந்த உரையாடல்.

“இல்ல மச்சான், இங்க பாரு, இங்க எல்லாரும் என்னை கெட்டவனாத்தான் பாக்குறாங்கடா, எனக்குன்னு ஒரு நிலையான வாழ்க்கை இல்லடா... ஏதோ நரகத்துல சிக்கின மாதிரி இருக்குது. என்னை நினைச்சாலே கேவலமா இருக்குடா...”

“முகாம் வீடுகள் பின்வீடு, முன்வீடு எல்லாம் இடையில் ஒற்றைச் செங்கல்லால் கட்டப்பட்டவை. அதனால் சிறிய சத்தங்களைக்கூட அடுத்த வீடுகளால் உணரமுடியும்.”

முகாம் வீடுகளை ஆய்வு செய்யும் கேரளப் பெண் தோழரின் பார்வையில் அக்குடியிருப்பின் அவலகரமான லட்சணங்களை வாசகர்கள் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

இவ்விடத்தில் கடந்த ஜூன் மாதம் 21ந்தேதி நாளிதழ் செய்தி ஒன்றை நினைவுகூரவேண்டும்.

“திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் தனி முகாமில் உள்ள ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரன் உள்ளிட்ட 65பேர் இந்தியக் குடியுரிமை கேட்டு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு அரசியல் அமைப்பு சட்டப்படி அகதிகளாக இருந்தாலும், தஞ்சம் அடைந்தவர்களாக இருந்தாலும் அவர்களது உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். மனுதாரர்களின் நிலை திரிசங்கு சொர்க்கமாக உள்ளது. இவர்கள் நிலையைப் பார்க்கும்போது என் இதயத்தில் ரத்தம் கசிகிறது. இருப்பினும் நீதித்துறையின் லட்சுமண ரேகையான எல்லையைத் தாண்ட முடியாது. எனவே, குடியுரிமை வழங்குவது

குறித்து மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது.''

"தமிழகத்திலுள்ள பல அகதிகள் முகாம் நரகத்தைப் போல உள்ளன. ஐபிஎஸ் அதிகாரிகள் அகதிகள் முகாமுக்கு மாற்றப்படுவதை தண்டனையாகக் கருதுகிறார்கள். 35 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தாலும், இன்றும் கண்காணிப்பில்தான் உள்ளனர். தொழில்நுட்பக் காரணங்களைக் கூறி நிராகரிக்க நினைக்கக் கூடாது. ஏனெனில், இவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் விசாவுக்காகக் காத்திருக்க முடியாது. இவற்றைக் கருத்தில் கொண்டு மனுதாரர்களின் விண்ணப்பத்தை ஏற்கும் வகையில், மத்திய அரசு முடிவெடுக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டுள்ளார்.

ஆக, தமிழகத்திலுள்ள 'அகதி முகாம்கள் நரகத்தை ஒத்திருக்கின்றன' என்று இந்திய அரசின் நீதிபதி ஒருவரே ஒப்புதல் வாக்குமூலம் தந்திருப்பது இந்நாவலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவை தவிரவும் இலங்கையிலும் தமிழகத்திலுமாக ஈழத்தமிழர்கள் என்பதாலேயே ஏதோவொரு வாதைக்கும் நோய்மைக்கும் ஆட்பட்டு அலைக்கழியும் ஷாமினி, சுரேன் அண்ணா, சுதாக்கா, சாந்தன் அண்ணா, ரமேஷ் அண்ணன், குமார் அண்ணன், சந்திராக்கா, மலரக்கா, கடிதங்களின் வாயிலாக ஆறுதலும் ஆசுவாசமுங் கொள்வதோடு அடிக்கடி தொலைந்துபோய்விடும் சுசி மற்றும் இந்திரா என விசித்திரமான குணாம்சங்களைக் கொண்ட பலரும் மனதில் பதிந்துபோய்விடுகின்றனர்.

இவர்களைப் பற்றி வாசகர்கள் வாசித்து அறிந்துகொள்வதே பொருத்தமாக இருக்கும். காரணம், இம்மனிதர்களை தங்கள் வாசிப்பனுபவத்தின் வாயிலாகவே முழுமையாகக் கண்டடையவேண்டும். என் வாசிப்புக்குப் பின்னால் என் தோளில் அமர்ந்து பாரமாய்க் கனக்கும் அவர்களை உங்கள் தோள்களுக்குக் கைமாற்றுவது நியாயமாக இராது. எந்த ரட்சகரிடமும் இறக்கி வைத்திரமுடியாத பாரம் அது. வாசித்தபின் சுமந்தலைந்தே தீரவேண்டிய பாரம்.

இவர்களைவிடவும் இந்நாவலில் வரும் குகன் எனும் மனிதரின் உயர்வான குணாம்சத்திற்கு ஈடாகச் சொல்வதற்கு ஏதுமில்லை. காதலித்த பெண் கண்ணிவெடியில் தன் இரண்டு கால்களையும் இழந்தநிலையிலும் அவரைத் திருமணம் செய்துகொள்கிறார். இந்தக் காதல் கதையிலும் முன்பே சொன்னதுமாதிரி தோழர் விஜி தன் நேர்மையான கதை சொல்லும் பாணியைக் கையாண்டுள்ளார். அதாவது, இந்தக் காதல் அத்தியாயம் இப்படித் தொடங்குகிறது.

"எளிய நாயே... உனக்கு வேற எங்கையும் பொட்டையள் கிடைக்கேலேயோ... போயும் போயும் நளம், பள்ளுதான் கிடைச்சுதோ... சொல்லடா?''

குடும்பத்தாரின் இந்தக் கேள்வியிலிருந்து குகனுடைய சாதியையும் அப்பெண்ணுடைய சாதியையும் ஊகித்திட முடியும். அதனால்தான் நூலாசிரியர் இந்த அத்தியாயத்தை 'சூப்பர் லவ் ஸ்டோரி' என வருணிக்கிறார் போலும்.

நாவலில் எனக்கு அணுக்கமாகப் பிடித்துப்போனவர் அறிவார்த்தமும் துடுக்குத்தனமும் நிரம்பிய சுவாரஸ்யமான நபரான சாரு எனும் பெண். இப்படியான சாருவின் வாயிலாகவே ஈழப்பிரச்சினையின் சிடுக்குகளையும் அதன் நுண்ணரசியலையும் வெளிப்படை அரசியலையும் வெளுத்து வாங்குகிறார். முன்பே சொன்னதுபோல ஈழப்படைப்பாளிகளிடமிருந்து முற்றிலும் விலகிநின்று சட்டையைப் பிடித்துக் கேட்பதுபோல தமிழக அரசியல்வாதிகளை விளாசுகிறார் நூலாசிரியர்.

2012-ஆம் ஆண்டு அகதிகள் முகாமில் நடைபெறும் ஒரு உண்ணாவிரதத்தில் தமிழக அரசியல்வாதி ஒருவர் பேசுவதுபோல வரும் காட்சி.

"தலைவர் சரியான நேரத்திற்காகத்தான் வெயிட் பண்றார். அவர் நிச்சயம் வருவார். அப்ப இருக்குது கடைசி அடி. வைகோவுக்கும் பழ நெடுமாறனுக்கும் சீமானுக்கும் அவரிண்ட இடம் தெரியும். சிங்களவனுக்கு இனி இருக்குது பூசை.''

இப்படியாகத் தொடரும் உண்ணாவிரத மேடையில் திடீரென ஏறும் சாரு இப்படிப் பேசுகிறார்.

"இன்றுவரை நாம் முகாம்களில் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். இங்கு இருக்கும் அரசிடம் பேசியோ போராடியோ ஒன்னும் செய்யமுடியாதவர்கள்தான் நாளைக்கு இங்க ஆட்சி புடுச்சி அங்க ஈழம் புடுங்குவாங்களா? அதனால அடுத்தவன் காலை நம்புறத விட்டுட்டு நம்ம புள்ளகுட்டிகளைப் படிக்க வைக்க சரியா யோசிக்க வைச்சி ஒரு அரசியல் செய்தாத்தான் நமக்கு விடிவே தவிர வேற யாரும் எதையும் புடுங்கமாட்டாங்கள்.''

இதுபோன்ற இடங்களைக் குறிப்பிட்டுதான் மற்ற ஈழப் படைப்பாளர்களிடமிருந்து இவர் வேறுபடுகிறார் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். பூடகங்கள் எதுவுமில்லாமல் நேரடியாகவே அரசியலைப் பேசுகிறார் விஜிதரன். எவ்வளவுதான் பாதகங்களை அனுபவித்தாலுமேகூட பலரும் குறிப்பிடத் தயங்கும் சாதியைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். ஆபத்தான அரசியல்வாதிகளின் பெயர்களைத் துணிச்சலோடு கோடிட்டுக் காட்டுகிறார். என்ன செய்யவேண்டும் என்ன செய்யக்கூடாது என்பதையும் அலசுகிறார். தமிழக முகாம்களில் தலைமை என்ற பெயரிலும் சாதியின் பெயரிலும் நடக்கின்ற அட்டூழியங்களையும் தோலுரிக்கத் தயங்கவில்லை இவர். எல்லாம் அரசியல் என்பதாகிவிட்ட ஈழத்தமிழர் விடயத்தில் தெளிவான அரசியல் நிலைப்பாடு தேவை என்பதையே அழுத்தமாக வலியுறுத்துகிறார் தோழர் விஜி.

நாவலின் சில முக்கியமான அம்சங்களைப் பட்டியலிடலாம் என நினைக்கிறேன்.

சொந்த நிலத்தையும் உறவுகளையும் உடைமைகளையும் நினைவுகளையும் ஒருசேரக் கழற்றியெறிந்துவிட்டு உயிரை மட்டும் கொண்டு வந்தவர்கள் ஈழ அகதிகள் என்று மட்டும் முடிவு கொண்டுவிடக்கூடாது. அதையும் தாண்டி அவர்களது இழப்பு பலவாறானதாக இருக்கிறது.

ஓரிடத்தில் கதைசொல்லியிடம் ‘ஓ... தம்பிக்கு எங்கட கதை வராதோ? இந்தியாக்காரங்கள் மாதிரி கதைக்கிறீயள்’ என்று கேட்கப்படுகிறது.

அதற்கு அவரது பதில்.

“எனக்கு ஒரே அவமானமாப் போச்சுது. இது இவர் மட்டுமல்ல, முதல்ல எங்க போய் நான் இலங்கை என்று சொன்னாலும் சரி, இல்லையென்றால், என்னை இலங்கை என்று யாராவது அறிமுகப்படுத்தினாலும் சரி, முதலில் வரும் கேள்வி இதுதான் அப்போதெல்லாம் இதே அவமானம்தான் வரும். ஏதோ அடையாளமற்றவனாய் உணருவது போலிருக்கும்”.

பல ஆண்டுகள் தமிழகத் தமிழே பழகிவிட்ட காரணத்தால் அதுவும் தமிழ் மொழிதான் என்றாலும் தங்கள் நிலத்திற்கே உரிய அழகிய மொழி உச்சரிப்புத்துவத்தை இழந்து நிற்பது உள்ளபடியே அவமானத்திற்குரியதுதான் இல்லையா?

அடுத்ததாக சாருவின் உணவுப் பழக்கத்தைப் பற்றி வரும் இடங்கள்.

“சாருவுக்கு இந்திய உணவு வகைகள் மீது அவ்வளவு பிடித்தம் இல்லை. அவளும் எவ்வளவோ முயன்று பார்த்தும் அவளால் அதிகபட்சம் காரக்குழம்பு வரைதான் பிடிக்கவைக்க முடிந்தது. சாம்பார், ரசம் என்றால் இன்னும் உவப்பின்மைதான்.”

“சாருவும் வெளிக்கிட்டுவிட்டு புட்டையும் சீனியையும் வாழைப்பழத்தையும் போட்டுப் பிசைந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.”

என்னதான் சுவையான அமிர்தமான உணவென்றாலும் தங்கள் பால்யத்திலிருந்து பழகிய உணவுக்கு ஈடாகாது என்பதை இவ்வரிகளில் உணரமுடிகிறதல்லவா?


முகாம் வாழ்க்கையில் கல்வி பயிலும் மாணவர்களைப் பற்றிய மிக முக்கியமானதொரு கணக்கீட்டை இந்நாவலில் வெளிப்படுத்துகிறார் தோழர் விஜி. அதாவது, முகாமிலிருந்து பத்தாம் வகுப்பு படித்தவர்களின் எண்ணிக்கை 90ஆக இருந்தது, பிளஸ் டூவில் 30 முதல் 40 ஆகவும் குறைந்து பட்ட மேற்படிப்பின்போது வெறும் இரண்டு பேராக சுருங்கிவிடுகிறது. படிப்பு தேவையில்லை, பொது அறிவு, சமூகம் எதுவும் தேவையில்லை என்பதல்ல அதற்கான வாய்ப்புக்குப் போராட வேண்டியிருக்கிறது. பலரின் குடும்பச் சூழல் அதற்கு அனுமதிக்காத பட்சத்தில் பிழைப்புக்காக பெயிண்ட் அடிக்கும் வேலைக்கு தங்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறவர்களாக மாறிவிடுகிறார்கள். இவர்களுக்கு நாட்களை நகர்த்தவேண்டும். வேறு என்னதான் செய்ய அனுமதித்திருக்கிறது இந்த அகதி முகாம்? அதிகாரிகளைப் பொறுத்த அளவில் இவர்கள் சட்டவிரோதக் குடியேறிகள் என்ற அடிப்படையில்தான் இவர்களுக்கு அடையாள எண்கள் கொடுக்கப்படுகின்றன. அதாவது இறைச்சித்தோல் உடம்பிலே இலக்கம் இடப்பட்டிருக்கிறது.

பெண்பிள்ளைகள் திருமணம் ஆகிக் குடும்பஸ்திரி ஆகிவிடுகிறார்கள். ஆண்கள் பெயிண்ட் அடிக்கும் வேலைக்குத் தயாராகிவிடுகிறார்கள். காலையில் வெளிக்கிளம்பி மாலைக்குள் வீடு திரும்பி அடங்கிவிடுவதே ஒவ்வொருநாளும் வாடிக்கையாகிவிடுகிறது இவர்களுக்கு. ஆக இதைத்தான் வெறுமனே உயிரோடிருப்பது என்று குறிப்பிடவேண்டியிருக்கிறது.


ஈழ அகதிகளை சிறிதுகூட மனிதர்களாகப் பொருட்படுத்தாமல் கீழினும் கீழ்மக்களாக நடத்தும் மத்திய, மாநில அரசுகளின் பொறுப்பற்ற தன்மையை வெளிச்சப்படுத்தும் இப்புனைவு இலங்கை அகதிகளுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டிருக்கும் இச்சூழலில் மிக முக்கியமானதாகப் படுகிறது. தம் சகோதர மக்களின் அவதியும் அவலமுமான வாழ்வை அசலாகப் பதிவு செய்திருக்கும் எழுத்தாளர் விஜிதரனும் இந்நூலைப் பதிப்பித்த சிந்தன் புக்ஸ் நிறுவனத்தாரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹ 270/-





₹ 95/-





₹ 125/-




₹ 235/-




₹ 180/-




₹ 270/-




₹ 125/-




₹ 200/-




₹ 190/-




₹ 35/-




₹ 125/-




₹ 135/-



கட்டுரை

# மொழி அல்ல தமிழ் - தமிழரின் அடையாளம்


## முனைவர் நா.சுலோசனா

இன்றைய சூழலில் தமிழ் மொழி பேசு பொருளாக உள்ளது, காலந்தோறும் பிற மொழி வல்லாண்மையிலிருந்து தமிழைக் காக்க பெரும் போராட்டமாக முன்னெடுத்து தமிழின் தொன்மையையும் தமிழ் மொழியின் வரலாற்றையும் சிறப்பையும் எதிர்கால தலைமுறையினருக்குக் கடத்தும் பொறுப்பு மாபெரும் தமிழ்ச் சமூகத்திற்கு உண்டு என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது நாட்டில் நடக்கின்ற சூழல்.

ஒரு மொழி வளம் மிக்கது, தொன்மை வாய்ந்தது என்பதற்கு அம்மொழியில் தோன்றிய இலக்கண, இலக்கிய வளங்களே சான்றாகும். இருப்பினும், இலக்கியத்தை வைத்து தமிழ்மொழியின் காலத்தை நிர்ணயித்த காலங்கள் கடந்து அவற்றிற்கு பல படி மேலாக தமிழின் தொன்மையைத் தொல்லியல் சான்றுகள் வரலாற்று அடிப்படையில் உறுதி செய்கின்றன.

தொல்காப்பிய காலத்தை வரலாற்று மற்றும் தமிழறிஞர்களான பி.டி சீனிவாச அய்யங்கார், இராமச்சந்திர தீட்சிதர், லட்சுமணசாமி முதலியார், சி.இலக்குவனார், இளங்குமரனார், மு.வரதராசனார் போன்றோர்களின் கூற்று அடிப்படையில் கி.மு 700 என்றும் சங்க இலக்கியங்களை கி.மு 500 என்றும் உறுதி செய்கின்றனர், எழுதப்பட்ட இலக்கியங்களுக்குப் பழமை 2500, 2700 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் போது, பேச்சு மொழி தோன்றிய காலம் இதை விட பல்லாயிரம் ஆண்டுகள் முந்தையது என்பதற்கு இந்த இலக்கியச் சான்றுகளை விட இப்போதைய தொல்லியல் சான்றுகள் அகழாய்வுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சுத்தி, கோடரி போன்ற இரும்புக் கருவிகளை வைத்தும் இரும்பு பயன்பாட்டுக் காலம் பத்தாயிரம் ஆண்டு பழமையானது என்பதை நிரூபிக்கிறது.

கே.கே பிள்ளை, நீலகண்டசாஸ்திரி, கா.சுப்பிரமணிய பிள்ளை போன்ற வரலாற்று அறிஞர்கள் குமரிக்கண்டத்தில் முதல் சங்கம் இருந்ததாகவும் அதன் காலம் கி.மு 8000 என்றும் மெய்ப்படுத்தி இருக்கிறார்கள். பழனி, கொடுமணல், ஆதிச்சநல்லூர், பூம்புகார் பொருந்தல், அரிக்கமேடு ஆகிய இடங்களில்



நடந்த ஆய்வுகள் பழந்தமிழரின் புதைவிடங்களாகக் கண்டெடுக்கப்பட்டன, இவற்றின் காலம் கி.மு 1000 ஆகும். சிந்துசமவெளி நாகரிகமே தமிழரின் பண்பாட்டுக்கு அடித்தளம் எனும்போது அதுவே நமக்குத் தொன்மையானது. ஆனால் அதைவிடத் தொன்மையான தூண்கள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள் கீழடி அகழாய்வுகளில் கிடைத்ததாகத் தொல்லியல் அகழாய்வுகள் சான்று பகர்கின்றன.

அசோகர், கனிஷ்கர், மௌரியர், புத்தர் கால பிராமி, பிராகிருதம், பாலி மொழியிலான வரிவடிவங்கள், தமிழ் பிராமி - அதாவது தமிழ் - வரிவடிவங்கள் இன்னும் அந்த வடிவங்களில் எழுதும் ஆற்றல் பெற்றவர்கள் இருக்கும்போது தமிழ்மொழி காலந்தோறும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் மொழியாகத் திகழ்வதைப் பார்க்கிறோம், தமிழி வரிவடிவத்தில் திருக்குறளை எழுதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக தமிழ்நாடு அரசு அதை வெளியிட்டுள்ளது.ஆக பேச்சிலும் எழுத்திலும் செழுமை பெற்றது நம் தமிழ் மொழி.

தமிழே, திரமிள, திராவிட என மருவியது. தமிழ் மொழியில்தான் முதல் எழுத்து வடிவம் தோன்றியது என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும். சிந்து சமவெளி நாகரிக காலம் கி.மு 12000 என (2009)இல் மேற்கொள்ளப்பட்ட பிரித்தானிய ஆய்வுக்குழு சொல்கிறது. சிந்து சமவெளி நாகரிகத்தை ஆய்வு செய்து வெளிப்படுத்திய அடையாளங்கள் மற்றும் மொழி தடயங்கள் தமிழ் மொழியின் வடிவங்களைக் கொண்டுள்ளன என இராசு பாதிரியார் விவரிக்கிறார்.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமே உலக மொழிக் குடும்பங்களில் பெரியது, அசோகர் கால பிரமிடுக்கு வெகுகாலம் முன்பே கி.மு 800 தமிழ் எழுத்து உருவாகி விட்டது என்கிறார் வரலாற்று அறிஞர் கார் (carr)

**தமிழே உலகின் முதன்மை மொழி, மூத்த மொழி**
**மாந்தன் தோன்றிய முதல் கண்டம்**
**குமரிக்கண்டம்**

**(லெமூரியா)**

**மாந்தன் பேசிய முதல் மொழி தமிழ்;**
**ஆரியத்திற்கு மூலம் தமிழ்**

எனத் தமிழ் முழக்கம் கொண்டவராக பாவாணர் திகழ்ந்தார்.

**“பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள”**

**(சிலம்பு11;19-20)**

**“மலிதிரை ஊர்ந்து தன்மண்கடல் வௌவலின்”**

**(கலி104;1)**

என கடல்கோளால் பெரும் நிலப்பரப்பு அழிந்ததை இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன.

ஆங்கிலப் புவியியலாளர் சீயர்லஸ் வுட் (Searles V.Wood) ஆல்பிரட் வேலாஸ் (Alfred Russell Wallace) ஃபிலிப்ஸ்க்லெட்டர் (Philip Scleter), ஹேக்கெல் (Haeckel) போன்ற மேலைநாட்டு அறிஞர்களின் கூற்றும் லெமூரியா கண்டம் இருந்ததை உறுதி செய்கின்றது. ஜெர்மனி,இலத்தீன்,கிரேக்கம்,ஹீப்ரு, சமஸ்கிருதம் என அத்தனை மொழிகளுக்கும் மூலம் தமிழ். இதைப் பாவாணர் தனது சொல்லாராய்ச்சி மொழியாராய்ச்சிக் கட்டுரைகளின் வழி மற்ற மொழிகளில் தமிழின் மூலம் இருப்பதை இது போன்ற சொற்களின் வழி. (coin-காசு, coir-கயிறு, paise - பைசா, cry- கரைதல், navy - நாவாய்) நிரூபிக்கின்றார்.

Coffin என்கிற லத்தீன் சொல்லிலிருந்து coffee என்கிற ஆங்கிலச் சொல் வந்திருக்கிறது, cafe என்றால் கன்று. கன்றின் குளம்படி போல காப்பியின் விதை இருப்பதால் காப்பிக்குக் “குளம்பி” என்று பெயர் வந்தது என வேர்ச்சொல் மூலம் விளக்குகிறார் பாவாணர்.

தமிழ்மொழி ஒவ்வொரு சொல்லுக்கும் வேர்ச்சொல்லைக் கொண்டுள்ளது. உந்துதலால் உலகம், ‘ஞால்’ என்றால் ‘தொங்குதல்’. தொங்குவதால் ‘ஞாலம்’ நிலைப்பதால் ‘நிலம்’ எனவும்,சுர் என்றால் ’சுடுதல்’. சுடுவதால் சுரம். நீரின் ஓட்டம் சலசல என இருப்பதால் சலம் எனத் தமிழ் மொழியின் சிறப்புக்கும் தொன்மைக்கும் சான்றுகள் இருக்கின்றன.

“வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்”

*தமிழில் இருந்துதான், கன்னடம், துளு, மலையாளம் எனத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தமிழ் மொழி பரவி 13 கோடி மக்கள் பேசும் மொழியாகவும் எழுத்து மொழியாகவும் சிறப்புப் பெற்றிருக்கிறது என்றால் இதைவிட வேறு என்ன சொல்வது.*

*தமிழ்மொழி மிகச்சிறந்த செவ்வியல்மொழி எனவும் தமிழ்ச்சொற்கள் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீனில் இடம்பெற்றுள்ளன எனவும், தமிழ் மொழியிலிருந்து பிரிந்தவையே தெலுங்கு,கன்னடம்,மலையாளம், துளு மொழிகள் எனவும் இவையாவும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை. திராவிடம் வடமொழி சார்பற்றது என்றும் வட சொல் என மயங்கும் பல சொற்கள் திசைச் சொற்களே என்றும் தமிழ்மொழி வடமொழியின் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது என்கிறார் ராபர்ட் கால்டுவெல்.*

தமிழ் என்பதன் திரிபே திராவிடமானது
(தமிழ் வரலாறு.ப33)

*எமனோ, பர்ரோ, கமில்சுவலபில், சுசமு, ஓனோ, குரோ, அலெக்சாண்டர் டுபியான்சசி, தக்காசி போன்றோர் தமிழை உலகத் தரத்திற்குக் கொண்டு சென்றனர்.*

*திராவிட மொழிக் குடும்பம் தனித்தது. அதற்கும் ஆரிய மொழிக் குடும்பத்திற்கும் சம்பந்தமில்லை என்ற கருத்தை முதலில் (1816) முன்வைத்தவர் பிரான்சிஸ் டபிள்யு எல்லிஸ் ஆவார்.*



*தமிழ் மொழி மீது காதலும் மதிப்பும் கொண்டவர்கள் தமிழர்கள் என்கிறார் ஜார்ஜ் எல் கார்ட்.*

*தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியங்களையும் கற்று ஆராய்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் என் வாழ்நாளைச் செலவிட்டேன் என்கிறார். (ஜி.யு போப்)*

“பொய் அகல நாளும் புகழ் விளைத்தல் என்
வியப்பாம் ?
வையகம் போர்த்த வயங்கு ஒலி நீர்–கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளோடு
முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்”

“திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல்
இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள்”

*-என்கிறார் பாவேந்தர்*

ஆதி மனிதன் தமிழன் தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ் தேன்

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்”(திருக்குறள், 969)

“நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி” (புறம்., 132)

*நரந்தை என்னும் புல்லைத் தின்னும் கவரி இமயமலைப் பகுதியில் வாழும் மாட்டு இனமாகும். சடை சடையாக முடியை உடைய கவரிலிருந்து சபரி வந்திருப்பதற்குச் சான்று பதிற்றுப்பத்து. (63;12) சவரி என்பது செயற்கை முடி. ‘மா’ என்பது விலங்கினப் பொதுப்பெயர், கவரியின் ஆண்பால் ஏறு என்பதைத் தொல்காப்பியம் மரபியல் சுட்டுகிறது. சீவகசிந்தாமணி ‘‘மானக்கவரி’’ என்றும், கம்பராமாயணம் ‘மானமா’, பெருங்கதை பெருந்தகை ‘கவரி’ என்றும் சுட்டுகிறது. இவையெல்லாம் குமரி முதல் இமயம் வரை தமிழ் பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாகிறது.*

*இயற்கையோடு தோன்றிய மொழி தமிழ் மொழி என்பதற்கு இலக்கண, இலக்கியங்களும் அதன் வரலாற்றுத் தொன்மத்தைத் தொல்லியல் ஆய்வுகளும் உறுதி செய்கின்றன. இருப்பினும் காலம் தோறும் தமிழ், வடமொழிக் கலப்பு, இந்தி திணிப்பு என மொழிக்கான குரல் எழுப்புவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மணிப்பிரவாள நடை முதல் தனித்தமிழ் இயக்கம் கண்டது தொடர்ந்து மொழிக்கான போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம்இருக்கின்றன. தெலுங்கு-ஆந்திரம்,*



மலையாளம்-கேரளம், கன்னடம்-கர்நாடகம் என்று அந்தஅந்த மாநில தாய்மொழிப் பெயர் மாநிலங்களுக்குச் சூட்டவில்லை. தமிழ் பேசும் தமிழ்நாட்டிற்கு மட்டுமே தமிழ் நாடு என்று இரு மாபெரும் பேறு உள்ளது. ஆகவே தமிழ் என்பது மொழி அல்ல, அது தமிழர்களின் அடையாளம். அடையாளத்தைத் தொலைத்து விட்டு தேடுவது என்பது முகவரியில்லாத வீட்டைத் தேடுவது போன்றது என்பதே காலத்தின் குரலாகவும் மக்களின் குரலாகவும் உள்ளது.

தொன்மைக் காலங்களில் அதாவது சங்க இலக்கியப் பாடல்களில் சமஸ்கிருதக் கலப்பு அதாவது மொழிக் கலப்பு என்பது நூற்றில் ஐந்து விழுக்காடு கலந்து இருக்கிறது. அதற்குக் காரணம் பாடிய புலவர்கள். பாடப் பெற்ற இடம், அரசாட்சி செய்யும் மன்னன் போன்ற புறச் சூழலால் மொழிக்கலப்பு ஏற்பட்டிருக்கிறது. திருக்குறளில் முதல் குறளில் உள்ள "ஆதி பகவன்" இதில் பகவன் என்ற சமற்கிருதச் சொல்லைத் திருவள்ளுவர் கையாளவில்லையா என்னும் கேள்வி எழும்போது திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடவில்லை, அது உரையாசிரியர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம் எனும் ஐயமே மேலோங்குகிறது, முதலில் மதம் சார்ந்த உரைகளும் அதற்குப் பிறகான காலங்களில் பகுத்தறிவு சார்ந்த உரைகளும் தோன்றின. உரைகளில் பகவன் என்பதைப் "பகலவன்" என்றே குறிப்பிடுகின்றனர். குறிப்பாகப் புலவர் குழந்தை எழுதிய திருக்குறள் உரையில் பகவன் என்பதில் வேர்ச்சொல் 'பகவு' என்பதாகும். பகவு என்பது பகுதியைக் குறிப்பதாகும். அன் என்னும் ஆண்பால் விகுதி சேர்ந்து பகவன் ஆயிற்று. பகவன் என்பதை முதன்மையான குணங்களை உடையவன் என்கிறார். இரவையும் பகலையும் பகுப்பது சூரியன் என்பதால் பகலவன் என்பதே பொருத்தம் ஆகிறது. உயிரினத் தோற்றத்திற்கு எல்லாம் முதன்மை சூரியனே ஆவான். மேலும் பகவன் என்ற சொல்லுக்கு தேவன், அருகன், சிவன், திருமால், சூரியன், கடவுள், இறைவன் எனப் பல பொருட்கள் இருக்கின்றன. திருக்குறள் உலகப் பொதுமறை நூல் என்பதாலும் திருக்குறள் மதநல்லிணக்க நூல் என்று குறிப்பிடப்படுவதாலும் திருவள்ளுவர் இறைவன், கடவுள் எனும் பொருளில் பகவன் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கமாட்டார் எனும் நிலையில் பகவானுக்கு பகலவன் என்பதே பொருத்தமாகிறது. தமிழ் இலக்கியங்களைச் சாடிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் ஏற்றுக்கொண்ட ஒரே நூல் திருக்குறள், திருக்குறளைப் பரவுதல் செய்வதில் பெரும் பங்கு கொண்டவர். சென்ற இடங்கள் எல்லாம் திருக்குறள் நூல்களை விற்றவர். திருக்குறள் மாநாடு நடத்தியவர்.

இப்படித் தமிழ் மொழியில் உள்ள இலக்கிய வளத்தை சொல்லிக்கொண்டே போகலாம். தமிழைப் பழிப்பது தாயைப் பழிப்பது போல..! எனும் உணர்வு மேம்பட்டால் தமிழ் மொழிக்கு சிறு தாழ்வு வந்தாலும் நாம் வெகுண்டு எழுவது இயல்பானது. ஆகவே தமிழால் இணைவோம்..! தமிழால் வெல்வோம்! தமிழால் வாழ்வோம்...!


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**

**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**



கட்டுரை

# சிலப்பதிகாரம்:
## வரலாற்றியல் பார்வை

கி.இரா.சங்கரன்

இலக்கியங்கள் அவை உருவாக்கப்பட்ட காலத்தின் சமூக, பொருளியல், பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும். அதேநேரத்தில் அவை அக்காலத்தின் உற்பத்திப்பொருள்கள் என்பதனையும் மறக்கலாகாது. காலத்தின் உற்பத்தித் தன்மைக்கேற்ப இலக்கியத்தின் வடிவம், கட்டமைப்பு, அளவு (prosody, metre and length) மாறிவரும். தொடக்கத்தில் ஓசைகள், வாய்பேச்சு, தொடர்கள், பாடல், பிறகு இசை ஒவ்விய பாடல்கள் என்று அமைந்த இலக்கிய வடிவங்கள் சில சில, சிறு சிறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கும். மனிதவாழ்வில் தொழில்நுட்பமும், உற்பத்தியும் வளரும்போது மொழிவீச்சு, வாய்பேச்சு அதிகமாகையில் அதனைத் திறம்படப் பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை கூடி அவர்கள் அதனை நயமாகப் பயன்படுத்தும் குழுவினராக மாறுவர். தமிழகம் பொறுத்து அவர்கள் **பாணர், புலவர்.** ஒரு தனித்த மொழியினைப் பின்பற்றும், தனித்த இனக்குழுவில் மொழியாளுமை மிக்க குழுவினர் எழும்போது வரையறுக்கப்பட்ட இலக்கியங்கள் தோன்றும்.

அவ்வாறு தோன்றும்போது பழம்நினைவுகள் புதுப்பொலிவுடன் கதையாக்கப்படும். **அதில் இசை, பாடல், ஊடுகதை, கிளைக்கதை, நம்பிக்கை** போன்றவையும் சேர்க்கப்படும். அதுபோன்ற கதைகள் தொடக்கத்தில் ஓரிரு வரிகளில் அல்லது நான்கைந்து வரிகளில் அடக்கப்படும். அவ்வாறு எழுந்த தமிழ் இலக்கியப்பாடல்கள் காலத்தால் முந்தியனவாக இருத்தல் வேண்டும். உற்பத்திமுறை வளர்ந்து உபரிஉற்பத்தி அதிகமாகும்போதும், ஓய்வுநேரமும் விவாதநேரமும் கூடும்போதும் நெடிய பாடல்கள், பெரிய இலக்கியங்கள் தோன்றும். இதனை இன்னொருவகையில் புரிந்துகொள்ளலாம்.

பழந்தமிழ்க் கல்வெட்டுகள் பெரும்பாலும் நான்கைந்து வரிகளில் பொறிக்கப்பட்டவை. இவற்றின் காலம் கி.மு 600 முதல் கி.பி.300 வரை என்று கணிக்கப்பட்டுள்ளது.[1] இக்காலக்கட்டத்தின் உற்பத்திமுறையின் விளைவாகவே இவற்றினைக் கணிக்கவேண்டியுள்ளது. கி.பி.300 தொடக்கம் தமிழகத்தில் சமூக, பொருளியல், அரசியல் மாற்றம் நிகழ்ந்தபோது உற்பத்தி உறவுகளும் மாறின. இக்காலக்கட்டத்திற்குப் பிறகு நெடிய பாடல்கள்/ இலக்கியங்கள் தோன்றின. இவ்வகைக்குள் **பத்துப்பாட்டு** இலக்கியங்களை அடக்கலாம். இதன் தொடர்ச்சியாகவே **சிலப்பதிகாரம்** என்ற இலக்கியம் உருவாக்கப்பட்டதாகக் கருதலாம். இதே காலகட்டத்தில்தான் முற்காலப் பல்லவரின் பிராகிருதமொழி செப்புப் பட்டயங்கள் வெளியிடப்பட்டன. சற்று பிந்திய காலத்தினதாக **பூலாங்குறிச்சி பாறைக்கல்வெட்டுகள்** அமைகின்றன.[2] தொடர்ந்து வந்த இதுபோன்ற சூழலில் எழுதப்பட்டதாக பொதுவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் எனும் தமிழ் இலக்கியம் ஒரேநாளில் அச்சாக்கப்பட்ட நூலன்று.

#### தொடர்ச்சி

சிலப்பதிகாரம் **சிறப்பதிகாரம்** என்றும் அறியப்பட்டது.[3] செம்மொழிப்பாத்தொகுப்பில் திருமாஉண்ணி பற்றிய பாடல்களும்,[4] கேரளத்தின் வடக்கில் கூத்து வடிவிலும், தமிழகத்தில் காப்பிய வடிவிலும், நாடக வடிவிலும், பாட்டுடைச் செய்யுள் வடிவிலும் இருக்க இலங்கையில் சடங்குநிலையில் உள்ளது.[5] சிலப்பதிகாரத்தின் அறுபடாத தொடர்ச்சியினை இவ்வாறு அறியலாம்

#### அச்சாக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் கூற்றில் மேலைநாட்டுக் கல்விமுறையில் பயிற்சிபெற்ற தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள் தமிழ் பழம்இலக்கியங்களை அச்சேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். 1812இல் திருக்குறளின் ஒருபகுதி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் போன்றோர் வருகை அச்சேற்றும் வேலையினை அறிவியல்பூர்வமாகத் துரிதப்படுத்தின. ராபர்ட் கால்ட்வெல்லின் வருகைக்குப் பிறகு ஆய்வுமுறை கருத்தியல்ரீதியாகப் புது உத்வேகம் பெற்றது. அதே காலக்கட்டத்தில் சமஸ்கிருதத்தினையும், ஆரியக் கோட்பாட்டினையும் உயர்த்திப்பிடித்த மாக்ஸ்முல்லர் என்ற ஜெர்மானியருக்கு இணையாக ராபர்ட் கால்ட்வெல் திராவிட/தென்னிந்திய மொழிகள் வழியே தமிழின் சிறப்பினை வெளிக்கொணர்ந்தார்.[6] இதன் தொடர்ச்சியினை பெ.சுந்தரம்பிள்ளை மேற்கொண்டார். இச்சூழலில் சிலப்பதிகாரம் என்ற காப்பியவகை நூல் அச்சேற்றப்பட்டது; தமிழ்ப்பண்பாட்டின் அழுத்தமான பண்பாட்டுக்கூறுகளை விளக்கும் காப்பியமாகப் போற்றப்பட்டது.

தொடக்கத்தில் **புகார்க் காண்டம்** மூலப்பாடம் மட்டும் வெளியிடப்பட்டது. அடுத்து, அதனுடன் உரையும் சேர்த்து வெளியிடப்பட்டது. தொடர்ந்து **வஞ்சிக்காண்டம்** உரையுடன் வெளியிடப்பட்டது. அடுத்து, உ.வே.சா. முழுப்பாடத்தினையும் உரையுடன் வெளியிட்டார். பிறகு, அதன் திருத்திய பதிப்பினையும் வெளியிட்டார். ஆராய்ச்சிக்குறிப்புடன் வெளியிடப்பட்ட இப்பிரதி நூல்பதிப்பிற்கான ஒரு **மாதிரி நூலாக** (model text) அமைகிறது.[7]

#### உள்ளடக்கம்

எட்டுவகைப் பாக்கள் 59 நூல்கள், 24 புலவர்கள், 22 கடவுளர்கள், 11 நதிகள், 19 மலைகள், 36 ஊர்கள், 23நாடுகள், 41 அரசர்கள் பற்றிய குறிப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. 3 காண்டங்களில் 30 உள்பகுதிகளைக் கொண்டு **கிளைக்கதைகள், மடல்கள், சாபங்கள், களவுகள், கனவுகள், பழம்பிறப்புக் கதைகள், பின்னோக்கிச்செல்லும் நிகழ்வு** போன்றவற்றால் கதைநகர்வுகள் நிகழ்த்தப்படுவதால் அகிலன் குறிப்பிட்டதுபோல் சிலப்பதிகாரம் தமிழின் முதல் நாவல் எனலாம்.

#### மொழிபெயர்ப்பு

தொடர்ந்து இந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உலக இலக்கியவாதிகளின் கவனத்தினை ஈர்த்தது. 1939 இல் இராமச்சந்திர தீக்ஷிதர் முழு இலக்கியத்தினையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கல்வெட்டுகள், நாட்டுப்புறக்கதைகள், மானிடவியல் செய்திகளின் அடிப்படையில் சில ஆய்வுக்குறிப்புகளையும் தந்திருந்தார். எழுத்தாளர் க.நா.சுப்ரமண்யம் ஒரு மொழிபெயர்ப்பினை வெளியிட்டார். Alain Danielou என்ற பிரஞ்ச் அறிஞர் ஒருவரும் இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார்.[8]

இதற்கு முன்பே சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் பற்றிய ஆராய்ச்சிக்கு பல அறிஞரும் முயன்றனர். அவர்களும் கல்வெட்டு அறிஞர்கள் கே.வி.சுப்பிரமணிய அய்யர், Keilhorn போன்றோரும் இதன் காலம் பற்றி கருத்துத் தெரிவித்தனர். திவான்பகதூர் சாமிக்கண்ணுபிள்ளை என்பவர் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட வானியல் குறிப்புகளின் அடிப்படையில் அதன் காலத்தினை வரையறுத்தார். இந்நூலின் காலத்தினை வரையறுப்பதில் வாதம் தொடர்ந்துகொண்டுள்ளது. இந்நூலின் காலத்தினை எஸ்.வையாபுரிப்பிள்ளை உலக, இந்திய இலக்கியங்கள் தோன்றிய சமூக-பொருளியல் காலப் பின்னணியில் நிர்ணயித்தார்.[9] இந்நூலினை ஆய்ந்தவர்கள் அதன் பெயரிலேயே சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம், சிலம்பொலி செல்லப்பன், சிலம்பு நா.செல்வராசு என்று அறியப்படுவது இந்நூலின் புகழினைக் காட்டும்.

**சிலப்பதிகாரமும் சினிமாவும்**

சிலப்பதிகாரத்தின் வரலாற்று வரைவியலில் அந்நூலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தமிழ் சினிமாக்களையும் சேர்க்கவேண்டும். 1944 இல் பி.யு.சின்னப்பா, கண்ணாம்பா, எம்.எஸ்.சரோஜா நடித்த **கண்ணகி** என்ற படம் பி.எஸ்.இளங்கோவன் எழுதிய வசனத்திற்காக மிகவும் புகழ்பெற்றது. 1966 இல் எஸ்.எஸ்.இராசேந்திரன், விஜயகுமாரி, ராஜ்யஸ்ரீ நடித்த பூம்புகார் என்ற திரைப்படத்திற்கு மு.கருணாநிதி வசனம் எழுதினார். 1968 இல் கே.ஆர். விஜயா, பிரேம்நசீர் இருவரும் சிலப்பதிகாரக் கதையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட **கொடுங்கலூர் அம்மா** என்ற திரைப்படத்தில் நடித்தனர். இதற்கிடையில் 1957 இல் வெளியிடப்பட்ட **ராஜா ராணி** என்ற படத்தில் **சேரன் செங்குட்டுவன்** என்ற ஓரங்கநாடகத்தில் சிலப்பதிகாரக் கதையினை மு.கருணாநிதி எழுதியிருப்பார். அண்மையில்(2016) இக்கதையினை மூலமாக வைத்து சுனில் ஆர்யரத்னா என்பவர் **பத்தினி** என்ற தலைப்பில் ஒரு திரைப்படத்தினை இயக்கியுள்ளார்.

**திறனாய்வு**

இது ஒருபுறமிருக்க, கல்வித்துறையில் தோய்ந்த புலமை பெற்ற அறிஞர்கள் திறனாய்வுமுறையில் இந்நூலினை ஆய்ந்தனர்; பல பின்னணிகளில் பார்த்தனர். இதனை **குடிமக்கள் காப்பியம்** என்றும் அது ஒரு சமணநூல் என்றும், முதல் தேசிய இலக்கியம் என்றும், முதல் நாடகக் காப்பியம் என்றும் வகைப்படுத்தினர். கல்விப்புலத்திற்கு வெளியே சிலர் சிலப்பதிகாரம் வர்க்கமுரண்பாட்டினை வெளிப்படுத்தும் இலக்கியம் என்றனர். இதற்கு மறுப்பும் வந்தது.[10]

இலக்கியத் திறனாய்வில் புதிய இஸங்கள் வந்தபின் அவற்றின் பின்னணியிலும் சிலம்பு ஆயப்பட்டது. **இரஸனை** என்ற கருத்தியலுடனும் ஆயப்பட்டது.[11] சிலம்பினை ஆய்ந்த க.கைலாசபதி போன்றோர் அந்நூல் முன்மொழிந்த **ஊழ்** என்ற கருத்தினை மறுத்து அதற்கான இயங்கியல் தத்துவத்தினை முன்வைத்துள்ளார்.[12]

**சிலப்பதிகாரமும் அரசுருவாக்கமும்**

தமிழகத்தில் அரசுருவாக்கம் கிறித்தவ சகாப்தத்தினை ஒட்டியே நிகழ்ந்தது. அரசுருவாக்கத்திற்கு நிலப்பரப்பு, மக்கள், இயற்கைவளம் மட்டும் போதாது. இவற்றை சேதாரம் இல்லாமல் கட்டியமைப்பதற்கு ஒரு கருத்தியல் தேவை. மேற்சொல்லப்பட்ட காலம்வரை தமிழகத்தின் ஒவ்வொரு வட்டாரமும் ஒவ்வொரு இனக்குழுவினரால் ஆளப்பட்டு வந்தது. இவற்றை முறியடித்து ஒன்றிணைந்த தமிழ்நாட்டினை உருவாக்க **வம்பவேந்தர்** என்ற புதிய மரபினர் தோன்றினர். இவர்கள் வெவ்வேறு இனக்குழுத்தலைவர்களையும் தம் அரசகட்டமைப்பிற்குள் இழுக்க முயன்றனர். அவர்களை வெல்வதற்கு போர்மட்டும் போதாது. கருத்தியலுடன் சேர்ந்த சடங்கும் தேவை. எனவே, வம்பவேந்தர் எனப்பட்ட சேர,சோழ, பாண்டியர்கள் யாகச்சடங்குகளை அறிமுகப்படுத்தினர். வேத இலக்கியங்களை உச்சாடனங்களாக முன்னிறுத்தினர். அவற்றை நடத்திக்கொடுக்க பிராமணர்களைப் போற்றினர். அவர்களுக்கு நிலங்களும், பொன்னும் கொடுத்துப் போற்றினர்.[13] இது ஒரு அரசு உருவாகத் தோதானது. எனவே, தமிழகத்தில் அரசு உருவாகப்போகும் சூழலை அறிந்த புலவர்கள் தம் தம் பங்கிற்கு எதுமாதிரியான அரசு உருவாக வேண்டும், உருவாகக்கூடாது என்பதனை இலக்கியங்கள் வாயிலாகப் பரிந்துரைத்தனர். திருக்குறளில் அரசு தொடர்பாக சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வரிசையில் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தினையும் காணலாம்.

இந்நூலில் சுட்டப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு ஒரு மாதிரி அரசினை (model state) கருதுகோளாக இளங்கோவடிகள் முன்வைத்தார் எனலாம்.

**கருதுகோள்**

**இளங்கோவடிகள் பரிந்துரைக்கும்**
**அரசு அதிகாரப்படிநிலை**

மன்னர்
king

மண்ணாள் வேந்து முடிகெழுவேந்தர்
மூவர்க்குரியது சீர்சால் வேந்தன்

இளவரசு
Co-ruler/prince

நாள்மகிழிருக்கை
Royal court

பெரும்படைத்தலைவன் தானைத்தலைவன்
Military chief

ஐம்பெருங்குழு,எண்பேராயம்
Advisory council

கரும வினைஞர்
Secretary/executive

கணக்கியல் வினைஞர்
Chief accountant

தரும வினைஞர்
Orbitrator/judicial officer

தந்திர வினைஞர்
statesman

வினைபரி குதிரையர்
Horse guards

வெண்கோட்டியானையாளர்
Elephant guards

பகைபுலத்தரசர்
Ruler of enemy state

**வரலாற்றுப் போக்குகள்**

வரலாற்றுப் போக்குகளுக்கு ஏற்ப இலக்கியங்கள் உருவாக்கப்படும். பக்தி இயக்க காலகட்டத்தில் பாடல்பெற்ற ஒவ்வொரு தலமும் அங்கு அமைந்திருந்த வேளாணூரும் தனித்தனி உற்பத்தி அலகுகளாக (productive unit) கணிக்கப்படவேண்டியன. எனவே, ஒவ்வொரு பக்தித் தலத்திற்கும் ஓரளவு சமமான எண்ணிக்கையில் பாடல்கள் இயற்றப்பட்டன எனலாம். கி.பி.600 முதல் கி.பி.1371/1400வரை தமிழகத்தில் நிலவுடைமை நன்கு வளர்ந்திருந்த காலகட்டம். கூட்டுடைமையுடன் தனியுடைமையும் வளர்ந்தது. 14 வழிபாட்டு நிறுவனங்கள் பெரும்பாலும் பெருமளவு நிலத்திற்கு உடைமையாளராய் இருந்தன. இச்சூழலில் பேரிலக்கியங்களான சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்றன தோன்றின. இவற்றுள் பெரியபுராணமும், கம்பராமாயணமும் பக்தியின் வாயிலாக தமிழ் இனக்குழுக்களின் ஒருங்கிணைப்பினையும் கடவுள் தன்மை பொருந்திய அரசனையும் முன்னிறுத்தியது எனலாம்.[15] இவை அரசு நன்கு வேரூன்றிய காலத்தில் இயற்றப்பட்டவையாகும்.

**இளங்கோவடிகளும் சமயமும்**

இங்கு சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. கோவலனும், கண்ணகியும் காடுகாண் காதையில் மதுரையினை அடையுமுன் மூன்று வழிபாட்டு இடங்களைக் காண்கின்றனர். அதில் சமணர் தலத்தினை மட்டும் விழுந்து வணங்கி நின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, அவர்களும் இளங்கோவடிகளும் சமணர் என்பார் ம.பொ.சிவஞானம்.[16] அப்படியென்றால் இளங்கோவடிகள் திகம்பரரா? ஸ்வேதம்பரரா? என்ற கேள்வி எழுகிறது. துறவியாக இருந்திருப்பின் இசை, நாடகம், நாட்டியம், பெண்கள் அணியும் நகைநட்டுகள் போன்றவற்றை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இல்லற அனுபவம் பெற்று உலகவாழ்வினை உணர்ந்து சிலப்பதிகாரத்தினை இயற்றியிருக்க வேண்டும். இன்னொன்று, தமிழகத்தில் தந்தைகள் தம் தம் மகள்களை தாய்வடிவில் கண்டு மகிழ்வர். இதன் தொடர்ச்சிதான் இங்கு இளங்கோவடிகள் தம் மகவினை மகள் மணிமேகலையாகப் படைத்தார் போலும். இங்கு இன்னொன்றினைக் குறிப்பிடவேண்டும். துறவுபூண்ட சுத்தானந்த பாரதி காதல் பாடல்களை இயற்றவில்லை.

**இளங்கோவடிகளும் இந்தியாவும்**

தமிழ்நாடு, தென் தமிழ்நன்னாடு, இமிழ்கடல்வேலியைத் தமிழ்நாடாக்கி, குடதிசையாளுங் கொற்றவேந்தன், குணதிசை போன்ற தொடர்கள் இளங்கோவடிகளுக்கு நிலப்பரப்பியல் பற்றிய புரிதல் இருந்துள்ளது எனலாம். இதனை அரசுருவாகும் கருத்தோடு இணைத்துப் பார்க்கலாம். இந்நிலப்பரப்பு இந்தியப் பின்னணியில் பார்க்கப்படுகிறது என்பதனை மகதநன்னாடு, மகதநன்னாட்டு வாள்வாய்வேந்தன், அவந்திவேந்தன், கங்கை, இமையம் போன்ற குறிப்புகளோடு பொருத்திப் பார்க்கவேண்டும். கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்காளர், பல்வேறுகட்டியர் என்ற அரசகுலத்தினர் பற்றிய குறிப்புகள் இளங்கோவடிகளின் அரச-நிலப்பரப்பியலின் (political geography) அறிவினை வெளிப்படுத்துகிறது.காவிரிபுகும்பட்டினத்தின் நிலப்பகுதி ஊர், பாக்கம், இருக்கை என்று சுட்டப்படுவது ஒரு rural landscape னை விவரிப்பதாக உள்ளது. வேனிற்காதையில் 'நால்வகை சாதியு நலம்பெறநோக்கி' என்ற குறிப்பு சமூகத்தின் நான்கு அடுக்கினையும் காட்டுவதாயுள்ளது. கடல்சார் வாழ்வில் நான்கு வகையான இனக்குழுவினரை அடையாளம் காட்டும் இந்நூல் பிராமண இனத்திலுள்ள குழுப்பிரிவுகளையும் நால்வகை மறையோர், வேள்விபார்ப்பான், மாமறையாளர், வெவ்விய பார்ப்பான், வலவை பார்ப்பான், வண்டமிழ் மறையோன் என்ற தொடர்கள் மூலம் குறிக்கிறது. இசைக்குழாத்தில் யாழ்புலவர், யாழ்பாணர், பாடற்பாணர், பாடும்பரணர் என்ற

கிடைநிலையமைப்பு இருந்துள்ளது. இவர்களுடன் இந்நகரின் பண்பாக இளங்கோவடிகள் சிலவற்றைக் குறித்துள்ளார்: பேசாப்பாத்திரமான கண்ணகி, கற்பின் மனையுறைமகளிர், மலவற் பெண்டிர், பொய்கரிமாக்கள், பிறன்மனை நயப்போர். இக்கூறுகள் இன்றைய காலகட்டத்திற்கும் பொருந்தும்.

இந்நகரின் சமூகக் கட்டமைப்பினைக் குறுக்காகவும், நெடுக்காகவும் பார்க்கலாம். அங்கு மக்கள் 26 தொழில்சார் குழுக்களாக (professional groups) அமைந்திருந்தனர். கல்வி புலமைத்துவமுடையோர், காவலர், பலவகை கைவினைஞர்கள், வணிகர், உழவர், கணிகையோர், பாணர், மறையோர், பார்ப்பனர், நம்பியர், புலம்பெயர் புதுவன், புலம்பெயர்மாக்கள் என்று பல தரப்பினராக வசித்துள்ளனர். இவர்களுள் மாதவி எழுத, படிக்கத் தெரிந்தவராக வாழ்ந்துள்ளார். இசை, நடனம், கூத்து, பாடல், ஆடல் போன்றன கல்வியோடு தொடர்புடையன. இந்நகரின் பேசாப்பெண்ணாக கண்ணகி இருப்பினும் அவர் பேசவைத்த நபர்கள் வரிசையில் கவுந்தி அடிகள், ஆய்ச்சியர், சாலினி, குன்றக்குறவர், மதுரைமக்கள், கதிரவன் இவர்களுடன் இளங்கோவடிகள்.

#### கடவுளர்கள்

இளங்கோவடிகள் 30க்கும் மேற்பட்ட பெயர்களில் கடவுளைச் சுட்டினாலும் விநாயகர், கணபதி பற்றிய குறிப்புகள் இல்லை. வழிபாட்டிடங்கள் பொதுவாக கோயில், கோட்டம் என்று குறிப்பிடப்பட்டு இருப்பினும் அறவோர்பள்ளி என்ற குறிப்பு வழிபாட்டு இடமாக இல்லாமல் கல்விநிலையமாகவும் இயங்கியிருக்கும் எனலாம். நிக்கந்தகோட்டம் என்பது தத்துவப்பள்ளியினைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். மன்னவன்பேரிசை கோயில் என்பது அரண்மனையாக அமைந்திருக்கலாம்.

பதிநான்கு பெண்கடவுளர்கள், பொதுவாக பாவை, செல்வி, தெய்வம் என்ற சொற்களில் சுட்டப்படுகின்றனர். இவர்களுடன் சேர்த்து கண்ணகி தென்தமிழ்ப்பாவை என்று அழைக்கப்படுகிறார். இவர் வடக்கில் வழிபடப்படும் தெய்வமன்று.

#### மானிடவியல் கூறுகள்

எயினர் கூட்டுண்ணும் நடுவர்மன்றம் என்ற தொடர் சிலப்பதிகாரக் காலம்வரை egaliterian society என்ற தன்மை தமிழகத்தில் இருந்ததனைச் சுட்டுகிறது எனலாம்.[17] சாலினி, ஆயர்முதுமகள் போன்ற சொற்கள் சிலப்பதிகாரக் காலம் வரை shamanistic features வழக்கில் இருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன. தமர், கொடி, சுற்றம், கிளை, குடிமுதற்சுற்றம் போன்ற சொற்கள் இந்நூலினை மானிடவியல் பின்னணியில் ஆய்வதற்கு அனுமதிக்கின்றன. கடல்சார் வாழ்வில் நான்கு வகையான இனக்குழுவினரை அடையாளம் காட்டும்.

#### ஊழ்

சிலப்பதிகாரம் முன்வைக்கும் கருத்தியலாக ஊழ்வினை/விதியினைச் சொல்லலாம்.[18] இது காரணம் அறியப்படாத செயலுக்கு ஊழினை வழிமொழிந்து, காரணத்தினைக் கண்டுபிடிக்க இயலாமல் தடுக்கும் கருத்தினை முன்வைக்கிறது. இங்கு ஊழ் என்பது சாவு என்று அறியப்படுகிறது. அப்படி சிலப்பதிகாரத்தில் இறந்தவர்கள் 2 ஆண்கள், 2 பெண்கள், ஒரு கொலை, 3 தற்கொலைகள். இவையனைத்தினையும் ஊழ் நியாயப்படுத்துகிறது. என்றால், ஊழ் என்று சொல்லி ஒரு கொலையினை நியாயப்படுத்த முடியும். வள்ளுவர் தந்த ஊழ் என்ற சொல் அதே பொருளில் கம்பராமாயணத்தில் விதி என்று மாறுகிறது என்பார் க.கைலாசபதி. ஊழ், பால், இரண்டும் ஒருபொருள் தரும் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டு இவற்றுள் பால் எனும் சொல் தொடக்கத்தில் மனிதசமத்துவம் (social equality) பற்றிப் பொருள்தரும் என்றும் அதுவே பிற்காலத்தில் அசமத்துவத்தினை (inequality) நியாயப்படுத்தும் சொல்லாக மாறுகிறது என்றும் சொல்வார்.[19]

இதில் மாதவி செய்த புரட்சி என்னவெனில் விதியால் அவள் சாகவில்லை. கோவலன் பிரிதலுக்கான காரணத்தினை அறிய முயல்கிறாள். மடல் மேல் மடல் எழுதுகிறாள். தமிழர் இலக்கிய வரலாற்றில் படிக்கப்படாத இரு கடிதங்கள் மாதவி எனும் பெண் எழுதியவை.

நன்கு கட்டமைக்கப்படாத அரசு, எழுதாச்சட்டங்கள் கொண்ட அரசன், உயர்குடியினரின் வேதவாக்குச்சொற்கள், தனிமனிதப் பாதுகாப்பற்ற சூழல் கோவலனின் இறப்பிற்குக் காரணமாகலாம். இதனை விமர்சிக்காமல் அறிஞர்கள் ஊழின்மேல் பழிபோடுவது சமூகப்பொறுப்பிலிருந்து தப்பிப்பதாகும். அரசுருவாகும் சூழலில் எதுபோன்ற அரசு உருவாகக்கூடாது என்பதனை இளங்கோவடிகள் முன்னுணர்ந்து உரைக்கிறார் என்று கருதவேண்டியுள்ளது.

#### காலமும் கருத்தும்

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்தினை ஏற்றால் அதாவது சிலப்பதிகாரம் 8-9 ஆம் நூற்றாண்டினது என்ற கருத்தினை ஏற்றால் அதேகாலத்தில் கம்பராமாயணம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தினை முன்வைக்கிறது; சிலப்பதிகாரம் எதிர்நிலை

எடுக்கிறது. இராமாயணத்தின் கதைத்தலைவன் வாழ்த்தப்படுகிறான்; கோவலன் வீழ்த்தப்படுகிறான். பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை தொடக்கம் சிலப்பதிகாரத்திற்கு காலம் வகுத்த அறிஞர்களின் கருத்துகளை மீளாய்வு செய்யும் பேராசிரியர். இராம.சுந்தரம் மொழி வளர்ச்சியில் நிகழ்ந்த தன்மை ஒருமையாக நான் என்ற சொல்லின் அடிப்படையிலும் அந்த எந்த எனும் சுட்டுச் சொற்கள் அடிப்படையிலும் இளங்கோவடிகள் கண்ணகியினை கொற்றவையல்லள் என்பதாலும் கி.பி.800-900 களில் கொற்றவை சக்திவடிவமாக மாறுவதாலும் சிலப்பதிகாரம் கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இயற்றப்பட்டிருக்கலாம் என்று முடிப்பார்.[20]

இங்கு கங்கை, இமையம், கருநாடர், கலிங்கம், மகதம் பற்றியெல்லாம் பேசிய இளங்கோவடிகள் பவுத்தமும், சமணமும் செழித்தோங்கிய காஞ்சி பற்றி குறிப்பு தரவில்லையே என்ற கேள்வி எழுகிறது. அங்கு வந்த யுவான்சுவாங் (602-664)பற்றியும் குறிப்பு இல்லை. வடக்கிருந்து விஞ்சையன் தம்பதியினர் இந்திரவிழாவிற்கு வருகை தந்த குறிப்பு உண்டு. ஆனால், வடக்கிற்கு வந்த இட்சிங்(635-713) பற்றியும் பாகியான்(399-412) பற்றியும் குறிப்பு இல்லை. எனவே, நான்காம் நூற்றாண்டிற்கு முன்னதாக இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கு வரலாமா? அதாவது, சீனப்பயணிகள் பற்றிய குறிப்பு இல்லை என்பதால் இந்நூல் குப்தர் காலத்திற்கு முன்பு அல்லது அதனையொட்டி எழுதப்பட்டதாகக் கொள்ளலாமா?

சிலப்பதிகாரத்தினைப் போற்றும் தமிழ் சமூகத்தில் தமிழ் ஆர்வலர்கள் இளங்கோ, மாதவி, கண்ணகி என்று பெயரிட்டுக்கொள்ள கோவலன் என்ற பெயரினை ஏன் தவிர்த்தனரோ?

**குறிப்புகள்**

1. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy:from the Earliest times to the sixth Century CE.2003. பழந்தமிழ்க் கல்வெட்டுக்களின் காலத்தினை மூன்றாகப்பிரிக்கும் இவரது நூல் இந்தியக் கல்வெட்டியல் ஆய்வில் ஒரு மைல்கல். என்றாலும், இந்நூலின் குறைகளைத் தர்க்கமுறையில் பேரா.எ.சுப்பராயலு அணுகியிருந்தார். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புள்ளிமான்கோம்பை நடுகல் கல்வெட்டின் எழுத்து அமைதியின் அடிப்படையில் தமிழ்க்கல்வெட்டின் தொடக்ககாலம் கி.மு ஆறாம் நூற்றாண்டு என்பார் கல்வெட்டறிஞர் சு.இராஜவேலு (தொலைபேசி செய்திபகிர்வு:27-11-2019).

2. இக்கல்வெட்டுப் பாடத்துடன் வெளியிடப்பட்டு அதன் சமூக, அரசியல் கூறுகள் விளக்கப்பட்டவுடன் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழக அரசமரபு வரலாற்றிலும் ஒரு தெளிவு கிடைத்தது. தேசியவாத வரலாற்றாசிரியர்களால் முன்வைக்கப்பட்ட களப்பிரர் காலம் (கி.பி.300 முதல் கி.பி.600 வரை) இருண்டகாலம் என்ற கருதுகோள் திருத்தப்பட்டு அக்காலக்கட்டத்தின் வரலாற்றுப்போக்கு நிறுவப்பட்டது. பார்க்க:எ.சுப்பராயலு, எம்.ஆர்.ராகவாச்சாரியார், பூலாங்குறிச்சி கல்வெட்டுகள், ஆவணம், இதழ் 1,1991.பக்.57-66.

3. க.கைலாசபதி, சிலப்பதிகாரச் சிந்தனைகள் என்ற கட்டுரையில் உ.வே.சா அவர்கள் சுவடிகளைத் தேடும் பணியில் ஒரு வித்வானிடம் சிலப்பதிகாரம் பற்றி விசாரித்தபோது அதனை வித்வான் சிறப்பதிகாரம் என்று பதில் இறுத்ததாகக் குறிப்பிடுகிறார் என்கிறார். க.கைலாசபதி, அடியும் முடியும், பாரிநிலையம்,சென்னை, ப.200.

4. புறம்:144;நற்றிணை:216.

5. Gananath Obeyesekere, The Cult of the Goddess Pattini, The University of Chicago Press, Chicago,1984. இந்நூலில் மானிடவியல் கோட்பாட்டுப் பரிச்சயத்துடன் தென்கிழக்காசியப் பின்னணியில் பலவகைச் சான்றுகளுடன் கண்ணகி ஆராய்ச்சிப் பொருளாகியுள்ளார்.

6. Robert Caldwell, A Comparative Grammar of South Indian Languages, 1856. இந்நூல் தென்னிந்திய மொழிகளிடையேயான ஒத்த ஓசை, இலக்கணக்கூறுகளை மட்டும் வெளிப்படுத்தவில்லை. உலக மொழிகளின் அரங்கில் தமிழிற்கு ஒரு தனி அந்தஸ்தினை உருவாக்கியது. தமிழர்களின் அரசியல்வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தினை ஏற்படுத்தியது. ஆனால், இந்நூல் வெளியிடப்பட்ட காலத்தில் திருக்குறளைத் தவிர தமிழில் வேறு செம்மொழி இலக்கியங்கள் வெளியிடப்படவில்லை.

7. 1872 இல் முதன்முதலில் தி.ஈ.ஸ்ரீநிவாசராகவாச்சாரியார் என்பவர் சிலப்பதிகாரத்தின் முதல் எட்டு காதைகளை வெளியிட்டார். தொடர்ந்து, 1876 இல் கானல்வரி முதலான நான்கு காதைகளையும் சேர்த்து வெளியிட்டார். அடுத்து, புகார் காண்டத்தினையும் அச்சேற்றினார். 1880 இல் தி.க.சுப்பராய செட்டியார் அடியார்க்கு நல்லார் உரையுடன் புகார் காண்டத்தினை மட்டும்

அவருடைய உரையுடன் வெளியிட்டார். 1892 இல் உ.வே.சாமிநாதையர் முழுநூலினையும் அரும்பதவுரையுடன், அடியார்க்குநல்லார் உரையுடன் சேர்த்து வெளியிட்டார். இதற்கிடையில் 1891 இல் பெ.சுந்தரம்பிள்ளை தம் மனோன்மணியம் நாடகத்தில் இடையிடையே சில சிலப்பதிகார வரிகளை எடுத்தாண்டுள்ளார் என்கிறார் க.கைலாசபதி. 1942 இல் ந.மு.வேங்கடசாமி நாட்டார் உ.வே. சா.பதிப்பித்த நூல்படியின் அடிப்படையில் இசைக்குறிப்புகளுடன் எளியநடையில் உரையெழுதி வெளியிட்டார். சிலப்பதிகாரத்தின் வரலாற்றியலை அறிவதற்கு க.பஞ்சாங்கம் எழுதிய சிலப்பதிகாரத் திறனாய்வுகள் (2002) என்ற நூல் பெரிதும் துணை நிற்கும். இப்பத்திக்கு அந்நூலே பெரிதும் பயன்பட்டது.

8. V.R.Ramachandra Dikshitar, Cilappatikaram, 1939. இம்மொழிபெயர்ப்பிற்கு Jules Bloch என்ற மொழியியல் வல்லுநர் முன்னுரை எழுதியிருந்தார். இதன் இரண்டாம் பதிப்பிற்கு (1978)K.R.Srinivasa Iyengar முன்னுரை எழுதினார். தீக்ஷிதர் இம்மொழிபெயர்ப்பிற்கு உ.வே.சாவின் பதிப்பினையே பயன்படுத்தினார். இந்நூலின் பின்னிணைப்பு (ப.404) ஒன்றில் (அந்திமாலைச் சிறப்புச்செய்காதை) இடம்பெற்றுள்ள சமஸ்கிருத சொற்களின் விகிதாசார அடிப்படையில் சிலப்பதிகாரம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பார். Alian Danielou, Ilango Adikal Shilappatikaram:The Ankle Bracelet (first published:1965), Aleph Book Company,2016.இந்திய இலக்கியத்தில் இசை கொள்கை பற்றி ஆய்வு மேற்கொண்டிருந்தபோது இந்நூலினை மொழிபெயர்க்க வேண்டுமென்று ஆவல்கொண்டதாகக் கூறுவார். சிலப்பதிகாரத்தில் பல்லவர், குப்தர் பற்றி குறிப்பு இல்லை என்பதால் இதனை அதற்கு முந்திய காலகட்டத்தினைச் சார்ந்தது எனலாம் என்று முன்னுரையில் குறித்துள்ளார் (p.ix).

9. கல்வெட்டு ஆராய்ச்சியாளர், வானியலாளர், தமிழறிஞர் போன்றோர் வகுத்தளித்த இந்நூலிற்கான காலத்தினை தருக்கமுறையில் ஏற்றும், மறுத்தும் தம் முடிவுகளை வெளியிட்டார். அவருடைய கருத்துகள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனினும் புறக்கணிக்கப்பட முடியவில்லை. பார்க்க: காவிய காலம், எஸ்.வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், தொகுதி,3, பாரிநிலையம், சென்னை, 1991,பக்.79-139.

10. தொ.மு.சிதம்பர ரகுநாதன், இளங்கோவடிகள் யார்?: சிலப்பதிகாரம் பற்றிய ஒரு சமூகவியல் பார்வை, மீனாட்சி புத்தகநிலையம், சென்னை, 1984. இடைக்காலத் தமிழகத்தின் வணிக வர்க்கத்தினருக்கும், அரசவர்க்கத்தினருக்கும் இடையிலான முரண்பாட்டினை விளக்கும் புரட்சிக்காப்பியமே சிலப்பதிகாரம் என்பது இந்நூலாசிரியரின் கருத்தாகும். இதனை எம்.ஏ.நுஃமான் தம் மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும் (அன்னம், (பி) லிட். 1987) என்ற நூலில் மார்க்சிய கோட்பாடுகளைக்கொண்டே தர்க்கரீதியாக மாற்றுக்கருத்தினை வைத்துள்ளார். சிலப்பதிகாரம் வணிகச்சார்பான நூல்தான் என்பதை ஏற்கும் எம்.ஏ.நுஃமான் தொ.மு.சிதம்பர ரகுநாதனின் முடிவுகளில் வேறுபடுகிறார். சிலப்பதிகாரம், வணிகவர்க்கம் புரட்சி செய்வதற்காக எழுதப்பட்ட இலக்கியம் என்பதனை ஏற்க இயலாது என்பார்.

11. மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகாரம் (இரஸனை), என்.சி.பி.எச்.சென்னை,2015. வ.வே.சு. அய்யரவர்களுடைய கம்பராமாயண ரஸனை என்ற நூல் வாசிப்பினால் தூண்டப்பட்டு மேனாட்டு இலக்கியங்களில் சிறந்தவற்றைப் படித்து இந்நூலினை இயற்றியதாகச் சொல்கிறார். கோவலன் நிலையில் நாம் இருந்திருந்தால் நாமும் அவன் செய்ததையே செய்திருப்போம் என்று கோவலன் கண்ணகியினைப் பிரிந்ததனை நியாயப்படுத்துகிறார். இங்கு, இரஸனை கோவலனை வென்று மாதவியிடம் துரத்திற்று என்று சொல்ல வருகிறார். ப.131. இளங்கோவடிகள் மும்முறை ஊழினை வற்புறுத்துகிறார் என்றும் அது கோவலன், கண்ணகி, மாதவி இம்மூவருடன் சூழ்ச்சி செய்கிறது என்றும், இரசிக்கிறார். பக்.20-21. ஆனால், கோவலன் கண்ணகியிடம் இல்லாத ஒன்றினை மாதவியிடம் கண்டான். அதுதான் கலை: எண்ணும், எழுத்தும் என்றார் வ.ஐ.சுப்ரமண்யம். வ.ஐ.சுப்ரமண்யம், காப்பியக் கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை(முதல் பதிப்பு:1952),1987.ப.70.

12. க.கைலாசபதி, அடியும் முடியும்: இலக்கியக் கருத்துக்கள், பாரி நிலையம், சென்னை,1996. See:fn.no.18 in Concept of Destiny in Early Tamil Literature in On Art and Literature,NCBH,1986. ஊழ் என்ற சொல்லின் பிற பொருள்களான பால், முறை, உண்மை, தெய்வம், விதி போன்றவற்றைப் பட்டியலிட்டு காலந்தோறும் இவற்றின் பொருள்கள் மாறுவதனை

விளக்குகிறார். ஒத்த பொருள் கொண்ட இச்சொற்கள் தொடக்கத்தில் மனித சமூகத்தின் சமத்துவத்தினைச் சொல்லி இறுதியில் அசமத்துவத்தினை நியாயப்படுத்துகின்றன என்பார். இப்படி, மனித சமூகத்தின் அசமத்துவத்திற்குக் காரணம் ஊழ், விதி கற்பிக்கப்படுகிறது என்பார். தொடக்க காலத்தின் egalitarian society என்ற கருத்தினை முறியடிக்க ஊழ் என்ற சொல் ஒரு anchor ஆகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கணிக்கலாம்.

13. இடைக்காலத் தமிழகத்தின் வரலாற்றுப்போக்கில் வேந்தர்களின் எழுச்சி, அரசுருவாக்கம் பற்றி பல அறிஞரும் தம் தம் ஆய்வில் பரக்கப் பேசியுள்ளனர். ஒரு நெடிய பட்டியலைத் தயாரிக்க முடியும். இவ்வரிசையில் பேராசிரியர் K.A.Nilakanta Sastri முதல் Whitney Cox வரை இப்பட்டியல் நீளும்.

14. தமிழக வரலாற்றில் இக்காலக்கட்டத்தினை ஒரே கால அலகாக (unit of time) எடுத்துக்கொள்ளவேண்டும் என்பார் கார்த்திகேசு சிவத்தம்பி, Karthigesu Sivathamby, Literary History in Tamil, Tamil University, Thanjavur, *1986*,p.*118*. சோழர் காலகட்டத்தினை மொத்தமாக இணைக்கும் இக்கால அலகில் சோழர்காலத்தின் சமூக-வரலாற்றுப்போக்கு புள்ளியியல் முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பேரரசும் பெருஇலக்கியங்களும் இக்காலக்கட்டத்திலேயே உருவாயின. பார்க்க: Noboru Karashima, South Indian History and Society: Studies form the Inscriptions from C.800 to 1800 AD,OUP,1984; Y.Subbarayalu, South India Under the Cholas, OUP,2011.

15. இவ்விரு பெரிய இலக்கியங்களில் பெரியபுராணம் பேரரசு உருவாவதற்கான ஏதுநிலை கருத்தியலை உருவாக்குவதற்கு துணைநின்றது என்பதனை க.கைலாசபதி தம் நாடும் நாயன்மாரும், பேரரசும் பெருந்தத்துவமும் என்ற கட்டுரைகளில் விவரித்துள்ளார். பார்க்க: க.கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், (முதல்பதிப்பு, *1966*), என்.சி.பி.எச். சென்னை,*1991*.

16. *19-05-1976* முதல்*04-05-2017* வரை ம.பொ. சிவஞானம், பாரதிய வித்யாபவன் சென்னையில் ஆற்றிய சிலப்பதிகாரம் பற்றிய *13* தொடர் சொற்பொழிவுகள் சிலப்பதிகார ஆய்வுரை என்ற தலைப்பில் *1978* இல் நூலாக வெளியிடப்பட்டது. இதில் இளங்கோவடிகளை, முதல் தேசியகவி என்று மதிப்பிடுகிறார். காடுகாண் காதையில் கண்ணகியும் கோவலனும் சமணர் தலத்தினைத் தொழுது வலம் வந்து சென்றதால் அவர்களை சமணர் என்று அடையாளப்படுத்துகிறார்.

17. வேட்டுவவரியில் *10* ஆம் வரியில் கூட்டுண்ணும் எனும் சொல் இடம்பெற்றுள்ளது. இது கூட்டாக உண்ணும் இனக்குழுப் பண்பாடும், பழங்குடித்தன்மையுமாகும். இது உலகம் முழுவதும் வழக்கில் இருந்த ஒன்று. இது பற்றி ஜார்ஜ் தாம்சன் போன்ற அறிஞர்கள் ஆய்ந்துள்ளனர். இவருடைய கருத்தினையொட்டி தமிழறிஞரும் இச்சொல்லை ஆய்ந்தனர். K.Kailasapathy, On Art and Literature, NCBH, 1986, Madras, p.146.fn.no.8ff.

18. ஊழ் வகுத்த பாதையில் சிலப்பதிகாரக் கதை நகர்ந்தாலும், தம் ஒப்பாய்வில் கா.செல்லப்பன் கதைச் சம்பவங்களுக்குத் தீது என்கிற உலகஇயல்புதான் காரணம் என்பார். ஊழ் என்ற மைய இழையில் தம் ஆய்வினை நகர்த்திப்போகும் அவர் சிலப்பதிகாரத்தினை உலக இலக்கியப்பட்டியலில் வைக்கிறார். கண்ணகி கதாபாத்திரம் உருபெற்று முதிர்ந்து முடிவுறுவதற்கு ஊழ் / கர்மாவே காரணம் என்பார். K.Chellappan, Shakespeare and Ilango as Tragedians:A Comparative Study, Tamil University, Thanjavur, 1985.p.128;136-148.

19. அடிக்குறிப்புகள் *17*,*18* களில் உள்ள செய்திகள் இங்குப் பொருந்தும்.

20. பிறமொழி இலக்கியத்தின் பின்புலத்திலும், இந்தோ-ஆர்ய இலக்கியங்களின் ஒப்பீட்டுப் பார்வையிலும் சிலப்பதிகாரத்தின் காலத்தினை கி.பி.இரண்டிலிருந்து தள்ளித் தள்ளி கி.பி.*1150* க்கு எஸ்.வையாபுரிப்பிள்ளை கொண்டு வருவார். இவரின் மாணவரான வ.ஐ.சுப்ரமண்யம் உலகின் பிறமொழி காப்பிய இலக்கியங்களுக்கு மாறாக சிலப்பதிகாரத்தின் காப்பியத்தலைவன் கொலையுறுவது தமிழ் இலக்கியத்தின் புதியஉத்தி என்பார். வ.ஐ.சுப்ரமண்யம், காப்பியக் கட்டுரைகள், (முதல் பதிப்பு:*1952*),ப.*54*. இவர்களிடமிருந்து வேறுபடும் இராம.சுந்தரம், (சொல்புதிது சுவை புதிது, தமிழ்நூலகம்,சென்னை, *1978*.ப.*79*;*89*) சிலப்பதிகாரத்திற்கு வேறொரு காலத்தினை மொழியியல் அடிப்படையில் உறுதிப்படுத்துகிறார்.

*(12-11-2019 அன்று தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் டிஜிடல் பூம்புகார் என்ற தலைப்பில் நடத்திய பணிப்பட்டறையில் அளிக்கப்பட்ட கட்டுரை).*

●

# உ.வே.சாமிநாதையரின் பெங்களூர்ப் பயணம்


முனைவர் இரா. வெங்கடேசன்


வெற்றிவேற்கை

உரையும் கதைக்குறிப்பும்

(3rd Edition)

1919


University of Madras

PURANANURU (101 - 125)

With commentary

Edited with explanatory notes

BY

V. SWAMINATHAIYAR,

Tamil Pandit, Presidency College, Madras.

Price 8 Annas.

Madras:

PRINTED AT THE VAIJAYANTI PRESS,

[1911ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதையர் மாணவர்களுக்காகப் பதிப்பித்து வெளியிட்ட புறநானூறு (101 125 பாடல்கள் வரை) மூலமும் உரையும் கொண்ட பதிப்பு, சாமிநாதையர் பெங்களூர் செல்லும்போதெல்லாம் வாழ்குடை சுப்பிரமணிய சர்மா வீட்டில் தங்குவது வழக்கம். சர்மா அவர்கள் 1919ஆம் ஆண்டு பள்ளிக்கூட மாணவர்களுக்காகப் பதிப்பித்து வெளியிட்ட வெற்றிவேற்கை பதிப்பு ஆகிய இரண்டின் முகப்புப் பக்கம்]

யோனே நோகுச்சி உலகப் புகழ்பெற்ற ஜப்பானியக் கவிஞர்களுள் ஒருவர். ஜப்பானிய மொழியிலும் ஆங்கில மொழியிலும் கவிதை எழுதும் புலமைபெற்ற நோகுச்சியைத் தமிழ்ப் பயண இலக்கியத்தின் முன்னோடியான ஏ.கே. செட்டியார் ஒருமுறை சந்தித்தார். ஜப்பான் தலைநகர் டோக்கியோ நகரில் சக்குராயாமா என்ற பகுதியில் இயற்கை வனப்பு நிறைந்த தோட்டமொன்றின் நடுவேயிருந்த நோகுச்சியின் அழகிய வீட்டில் இருவரின் சந்திப்பு நடைபெற்றது.

ஏ.கே. செட்டியார், நோகுச்சியின் சந்திப்பு குறித்து எழுதியபோது நோகுச்சியின் வீட்டில் கண்ட காட்சியைப் பற்றி இப்படி எழுதினார்:

“பனையோலையில் எழுதப்பெற்ற வரவேற்புரை ஒருபுறம்; வெள்ளித் தாம்பாளம், வெள்ளிக் கூஜா முதலிய சன்மானப் பொருள்கள் ஒருபுறம்; தாகுரின் அரிய நூல்கள் பிறிதொருபுறம்! இந்தியச் சர்வகலாசாலைகள் அளித்த வரவேற்புப் பத்திரங்கள் ஒருபுறமாக வைக்கப்பெற்றிருந்தன.”

ஜப்பானியக் கவிஞர் நோகுச்சி, சன்மானமாகப் பெற்ற பொருட்களைத் தம் வீட்டில் காட்சிப்படுத்தி வைத்திருப்பது பற்றி செட்டியார் எழுதியிருப்பதைப் படித்தபோது தமிழ்ப் பெருங்கவிஞர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வாழ்க்கைக் குறிப்பொன்று சற்றென்று முன்வந்து நின்றது.

ஒருமுறை, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர்மீது பிள்ளைத்தமிழ் நூலொன்றைப் பாடி முடித்து அரங்கேற்றிய பின்னர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குத் திருவாவடுதுறை மடத்தின் சார்பாக ஏறுமுக உருத்திராட்ச கண்டி ஒன்று சன்மானமாக அளிக்கப்பட்டது. அந்தக் கண்டியைப் பணத்திற்கு முட்டுப்பாடு வரும்போதெல்லாம் அடகு வைப்பதும், பணம் கிடைத்தபின் கடன்காரர்களிடத்தில் வட்டியும் முதலும் கொடுத்து மீட்பதுமாக மகாவித்துவானின் வாழ்க்கை நிலை இருந்தது.

ஒருமுறை புராண அரங்கேற்றம் செய்வதற்காகத் திருப்பெருந்துறைக்குப் பயணம்செய்ய நேர்ந்தபொழுது கண்டியை மீட்டு அணிந்துகொள்ள வேண்டுமென்று உ.வே. சாமிநாதையர் உள்ளிட்ட அவரது மாணவர்கள் வற்புறுத்திச் சொன்னபோது கையில் பணம் இல்லாமல் சோழன்மாளிகை இரத்தினம் பிள்ளையிடம் முந்நூறு ரூபாய் கடனாகப் பெற்றுவரச் செய்து கண்டியை மீட்டு அணிந்துகொண்டு சென்றிருக்கிறார்.

மகாவித்துவானவர்கள் தல தரிசனத்திற்காவும், புராணம் இயற்றி அரங்கேற்றம் செய்வதற்காகவும் தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். இளமைக் காலத்தில் வேண்டிய வித்துவான்களைத் தேடிச் சென்று பாடம் கேட்கும்பொருட்டும் அவர் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

1841ஆம் ஆண்டு ஒருமுறை திரிசிரபுரம் இலட்சுமணப் பிள்ளையின் உதவியினால் சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பும் மகாவித்துவானுக்கு வாய்த்தது. காஞ் சீபுரம் சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை, மழவை மகாலிங்கையர் ஆகிய அறிஞர்களை இந்தப் பயணத்தின்போது சந்தித்துத் தமிழ் நூல்கள் பலவற்றில் தமக்கிருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டார்.

மகாவித்துவானின் பல்வேறு பயணங்களுள் பெங்களூர்ப் பயணம் மிக முக்கியப் பயணமாக இருந்தது. தம் வாழ்நாளின் இடைப்பகுதியில் (1850) மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் கல்வி ஆற்றலால் புகழ்பெற்று விளங்கியிருந்தார். தமிழ்நாட்டின் எல்லை கடந்தும் அவரது புகழ் அப்போது பரவியிருந்தது. ஒருமுறை இவருக்கு லண்டனிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் 'மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இந்தியா' என்று மட்டும் முகவரியில் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதம் எந்தத் தடையுமின்றி இவருக்குக் கிடைத்தது. மகாவித்துவானின் பெரும்புகழ் ஒன்றே அதற்குக் காரணம் என்பது மிகையாகாது.

மொழி, மாநிலம் என்ற எல்லைகள் கடந்து மகாவித்துவானைப் பலரும் அக்காலத்தில் தெரிந்துவைத்திருந்தனர். பெங்களூரிலிருந்த தேவராசப்பிள்ளை என்பவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் கல்வி ஆற்றலையும் பாடம் சொல்லும் திறமையையும் அறிந்து வைத்திருந்தார்.

தேவராசப் பிள்ளையின் தந்தை கம்பெனியாருக்கும் மைசூர் அரச குடும்பத்தாருக்கும் துவிபாஷி (மொழி பெயர்ப்பாளர்) வேலை பார்த்து வந்தார். இதனால் தேவராசப் பிள்ளையின் குடும்பம் செல்வத்திலும் புகழிலும் நன்றாக விளங்கியிருந்தது. தேவராசப் பிள்ளையவர்கள் தமிழ் நூல்களை விரும்பிக் கற்கும் இயல்பைக் கொண்டவராக இருந்தார்.

பெங்களூரில் இருந்த வித்துவான்களிடம் சில தமிழ் நூல்களை தேவராசப் பிள்ளை கற்றறிந்திருந்தார். மேலும் பல தமிழ் நூல்களைக் கற்றறிந்துகொள்ளும் விருப்பம் அவரிடம் மிகுதியாக இருந்தது. அதற்குத் தக்கவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்பதை அவர் அறிந்துகொண்டார். மகாவித்துவானிடம் பாடம் கேட்க வேண்டுமென்ற தம்முடைய விருப்பத்தை நண்பர்கள் மூலமாக மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தெரிவித்தார்; பெங்களூருக்கு வரவழைத்து அவரிடம் தமிழ் நூல்களைப் பாடம் கேட்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்யத் தொடங்கினார். திரிசிரபுரத்தில் (திருச்சி) இருந்த தேவராசப் பிள்ளையின் நண்பர்கள் மூலமாக மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பெங்களூர்ப் பயணம் ஏற்பாடாயிற்று.

பெங்களூர் செல்வதற்கு முன்பாக மகாவித்துவானவர்கள் "இங்கே படித்துக்கொண்டு உடனிருக்கும் மாணவர்களையும் அழைத்துக் கொண்டு வரலாமா?" என்று கேட்டார். "எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் அழைத்து வரலாம்" என்று அவர்கள் உறுதியளித்தனர்; இவர் பெங்களூர்ப் பயணத்திற்கு மகிழ்ந்து உடன்பட்டார். பிள்ளையவர்கள் தம் குடும்பத்தினர், மாணவர் சிலருடன் 1850ஆம் ஆண்டு (சௌம்ய ஆண்டு) பெங்களூர் சென்றார். அப்போது மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு வயது 35.

உடன் சென்ற மாணவர்களுள் சுப்பராய செட்டியாரும் ஒருவர். பெங்களூர் சென்று தேவராசப் பிள்ளையின் வீட்டில் தங்கியிருந்து தேவராசப் பிள்ளை விரும்பிய தமிழ் நூல்களிலிருந்து பாடம் சொல்லி வந்தார். இடையிடையே தேவராசப் பிள்ளை முன்னரே தாம் கற்று முடித்திருந்த நூல்களில் ஏற்பட்டிருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தும் வந்தார். இருவருக்கும் பொழுது மகிழ்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் கழிந்தது.

பிள்ளையவர்கள் பெங்களூர் செல்லுகையில் உறையூர்ப்புராணத் தமிழ் வசனத்தைக் கையில்

எடுத்துச் சென்றிருந்தார். ஓய்வு நேரங்களில் மெல்ல மெல்ல சிந்தித்து அதனைச் செய்யுளாகப் பாடியும் வந்தார்.

பெங்களூர்ப் பயணத்தின்போது திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்து விளங்கிய சிவஞான முனிவரிடம் தவசிப் பிள்ளையாக இருந்த பெரியவர் ஒருவரையும் ஒருநாள் கையுறையுடன் சென்று சந்தித்து சிவஞான முனிவரின் இயல்புகளைக் கேட்டறிந்து இன்புற்றார்.

கன்னட மொழியில் வழங்கிவந்த குசேலோபாக்கியானத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுள் நடையில் இயற்ற வேண்டுமென்பது தேவராசப் பிள்ளையின் விருப்பமாக இருந்தது. அதை அறிந்து மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவற்றைச் செய்யுள் நடையில் இயற்றி தேவராசப் பிள்ளைக்கு அளித்தார்.

1850ஆம் ஆண்டு (சாதாரண - சித்திரை) அந்நூலை இவரே பரிசோதித்தும், சிறப்புப் பாயிரம் அளித்தும் வல்லூர் இராமசாமிப் பிள்ளை மூலமாக அச்சிட்டு வெளியிடவும் செய்தார். ஸ்காந்த புராணத்திலுள்ள ஆறு சங்கிதைகளில் ஒன்றான சூதசங்கிதை என்ற நூலையும் தேவராசப் பிள்ளைக்கு இயற்றி அளித்தார். தேவராசப் பிள்ளைக்குப் பல நூல்களைப் பாடம் சொல்லி முடித்தார்.

சிலகாலம் கழித்து மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ‘ஊர்செல்ல வேண்டுமென்று’ தேவராசப் பிள்ளைக்குத் தெரிவித்தார். புறப்படும்பொழுது ஐயாயிரம் ரூபாய் பணம், உயர்ந்த பீதாம்பரம் முதலியவைகளை மகாவித்துவானுக்குத் தேவராச பிள்ளை அளித்தார். இவருக்கு அதுவரையில் அவ்வளவு பெரிய தொகையை யாரும் அளித்ததில்லை என்பதால் மிகவும் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார்.

புறப்படுகையில் பெங்களூரில் இருந்த வேறுசில செல்வர்களும் மகாவித்துவானுக்குப் பொருளுதவி செய்தனர். பயணத்திற்கு வேண்டிய வசதிகள் தேவராச பிள்ளையால் செய்தளிக்கப்பட்டன. மகாவித்துவான் நன்முறையில் திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். பிள்ளையவர்கள் பெங்களூருக்குச் சென்று பெற்றுவந்த சிறப்பு பற்றி திரிசிரபுரம் எங்கும் அந்நாளில் வியந்து பேசப்பட்டது. மகாவித்துவானவர்கள் தம் வாழ்நாளில் தமிழக எல்லை கடந்து சென்ற ஒரே ஊர் பெங்களூர் மட்டுமேயாகும்.

ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் போன்றே அவரது மாணவரான உ.வே. சாமிநாதையரும் வாழ்நாளில் வெளிமாநிலப் பயணமாகப் பெங்களூருக்கு மட்டுமே சென்றுவந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

உ.வே. சாமிநாதையரவர்கள் சென்னை, மைசூர், அண்ணாமலை, ஆந்திர பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடத்திட்டக் குழு உறுப்பினராக இருந்தார். அதனால் அப்பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக்குழுக் கூட்டம் எங்கு நடைபெற்றாலும் அதில் கலந்துகொள்வது வழக்கமாக இருந்தது.

ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டக் குழுக் கூட்டம் பெரும்பாலும் சென்னையிலேயே நடைபெறும் என்பதால் ஆந்திராவுக்குச் செல்ல வேண்டிய சூழல் சாமிநாதையருக்கு ஏற்படட்டதில்லை. மைசூர் பல்கலைக்கழகத்தின் கூட்டம் சில நேரங்களில் சென்னையில் நடைபெற்றாலும், பெரும்பாலும் பெங்களூரில் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. இதனால் சாமிநாதையர் பலமுறை பெங்களூருக்குச் சென்று வந்திருக்கிறார். பெங்களூர்ப் பயணம் அவரது ஓய்வுக் காலத்திற்குப் பின்னர் (1919) அமைந்திருக்கிறது.

சாமிநாதையர் 1920ஆம் ஆண்டில் இரண்டுமுறை பெங்களூருக்குச் சென்று வந்திருக்கிறார். 1920ஆம் ஆண்டு அக்டோபர் நான்காம் நாள் மாலை சென்னையிலிருந்து இரயிலில் புறப்பட்டு மறுநாள் காலையில் பெங்களூர் சென்று சேர்ந்திருக்கிறார். பெங்களூர் வா. பி. சுப்பிரமணிய சர்மா (வாழ்குடை பி. சுப்பிரமணிய சர்மா) பெங்களூர்த் தண்டு இரயில் நிலையத்திற்கு வந்து இவரை வரவேற்று அழைத்துச் சென்றிருக்கிறார். சர்மா வீட்டில் தங்கியிருந்துவிட்டு அன்று பிற்பகல் நடைபெற்ற மைசூர் பல்கலைக்கழகப் பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கிறார். இன்னின்ன நூல்களைப் பாடமாக வைக்கலாம் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சாமிநாதையர் இந்தப் பெங்களூர்ப் பயணத்தின்போது இருமல் தொல்லையால் மிகவும் அவதிப்பட்டுள்ளார். இரயிலில் உடன் பயணித்த இசுலாமியப் பயணி (துலுக்கப் பிரயாணி என்று எழுதியிருப்பார் சாமிநாதையர்) ஒருவர் “உப்பு நீரில் நனைத்து ஊற வைத்து வறுத்த நாலு வாதாம் (பாதாம்) பருப்பை முதலில் உண்டும் பின்னர், வற்றல் மிளகாயைக் கிள்ளிப் போட்டுக் காய்ச்சிய அரைச் சேர் பாலை இரவு உணவின் பின் உண்டுவந்தால் மூனு வேளையில் இருமல் வாங்கிவிடும்” என்று சொல்லியிருக்கிறார். அதை அப்படியே செய்திருக்கிறார். பயணி சொல்லிய வைத்தியம் இவருக்கு நல்ல பயனை அளித்திருக்கிறது.

இதே ஆண்டு மே மாதத்திலும் ஒருமுறை பெங்களூர் சென்று வந்திருக்கிறார். 1920ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சாமிநாதையர் பெங்களூர் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சாமிநாதையர் எப்போது பெங்களூர் சென்றாலும் சுப்பிரமணிய சர்மா வீட்டில் தங்குவது வழக்கமாக இருந்தது.

சாமிநாதையருக்கு 1928ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி அன்று பெங்களூர் நரஸிம்மாச்சாரியார்

கூட்டத்திற்கு வரவேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறார். கடிதத்துடன் நடராசர் பிரசாதத்தையும் ஆச்சாரியார் அனுப்பி வைத்திருந்தார். அவரின் அழைப்பைக் கண்டு ஜனவரி 26ஆம் நாள் சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை பெங்களூர் சென்று சேர்ந்திருக்கிறார். சனிக்கிழமை (ஜனவரி, 28) பாடத்திட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. கூட்டத்திற்குப் பின்னர் நரசிம்மாசாரியார் வீட்டிற்குச் சென்று தங்கியிருந்தார். மைசூர் மஹாராஜா கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்த ராகவாசாரியார் இவரைச் சந்தித்திருக்கிறார். மாலையில் சுப்பிரமணிய சர்மா வந்து இவரை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று (ஜனவரி 29) பெங்களூரிலிருந்த பி. டி. ஸ்ரீநிவாசையங்காரையும், சாமிநாதையர் என்பவரையும் சென்று சந்தித்திருக்கிறார். மறுநாள் சேவூர் ஸ்ரீநிவாசையங்காரையும், பம்பை சுப்பிரமணிய ஐயரையும் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார். ஜனவரி 30ஆம் தேதி இரவு பெங்களூரிலிருந்து புறப்பட்டு மறுநாள் சென்னை வந்து சேர்ந்திருக்கிறார்.

சாமிநாதையர் 1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்று ஜனவரி 26ஆம் நாள் பெங்களூரை அடைந்து அன்று மாலையில் நடைபெற்ற பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கிறார். இந்தமுறை சாமிநாதையர் நாராயணராவ் என்பவரை உடனழைத்துக்கொண்டு பெங்களூருக்குச் சென்றிருக்கிறார். ஜனவரி 28ஆம் நாள் மாலை பெங்களூரிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை சென்னை வந்தடைந்திருக்கிறார்.

1930ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒருமுறை கி.வா. ஜகந்நாதையரை உடனழைத்துக்கொண்டு பெங்களூர் சென்றிருக்கிறார். ஜனவரி 24ஆம் நாள் இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை பெங்களூர்த் தண்டு இரயில்நிலையம் சென்று சேர்ந்திருக்கிறார். சுப்பிரமணிய சர்மா இரயில்நிலையத்திற்கு வந்து இவரை அழைத்துச் சென்றிருக்கிறார். 25ஆம் தேதி மாலையில் பெங்களூர்ப் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றிருக்கிறார். இந்தப் பயணம் மேற்கொண்ட காலத்தில் தக்கயாகப்பரணி பதிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தமையால் சுப்பிரமணிய சர்மாவின் குருநாதர் ராமதாசர் என்பவரைச் சந்தித்து தக்கயாகப்பரணி தொடர்பான செய்திகளைக் கேட்டறிந்தார்.

ஜனவரி 27ஆம் நாள் இரண்டாம் வகுப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல் மாலையில் சிட்டி இரயில்நிலையத்திலிருந்து இண்டர் கிளாஸில் சென்னைக்குப் புறப்பட்டிருக்கிறார். மறுநாள் காலை 6.30 மணிக்குச் சென்னை வந்துசேர்ந்தார். இரயில்நிலையத்திற்குக் கோதண்டராமன் வந்து இவரை அழைத்து வந்திருக்கிறார்.

சாமிநாதையர் 1930ஆம் ஆண்டு, ஏப்ரல் 20ஆம் நாள் சி. சுப்பிரமணியத்தை உடனழைத்துக்கொண்டு பெங்களூருக்குச் சென்றிருக்கிறார். ஜனவரி 22 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு 25ஆம் தேதி ஸ்ரீரங்கப்பட்டணம் சென்று சாமிதரிசனம் செய்துவிட்டு அன்று இரவே புறப்பட்டு மறுநாள் (ஜனவரி 26) காலை சென்னை வந்து சேர்ந்திருக்கிறார்.

1934ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் தேதி சென்னையிலிருந்து இரவு இரயிலில் புறப்பட்டுப் பெங்களூருக்குச் சென்றிருக்கிறார். சுப்பிரமணிய சர்மா வீட்டில் தங்கியிருந்துவிட்டு மறுநாள் பெங்களூர் சென்ட்ரல் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார். கூட்டத்தில் நரசிம்மாசாரியார், கோபாலசாமி ஐயங்கார், பதிவாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். பாடப் புத்தகங்களும், தேர்வுகளும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டன. அங்கிருந்து அலசூருக்குச் சென்று சர்மா வீட்டில் தங்கியிருந்தார். அங்குப் பெங்களூர்க் கோட்டை உயர்நிலைப் பள்ளிக்கூடத் தமிழ்ப் பண்டிதர் செங்கல்வராய ஐயர் வந்து பரிசிக்கப்பெற்று வித்துவான் தேர்வுக்குக் கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்றிருக்கிறார்.

ஜனவரி, 11ஆம் நாளன்று K. R. சீனிவாசையங்கார், R. நரசிம்மாசாரியார் இருவரின் வீட்டிற்கும் சென்று வந்திருக்கிறார். சந்திப்பின்போது நரசிம்மாசாரியார் தம்முடைய கன்னடமொழி சரித்திர நூலை இவருக்குக் கொடுத்திருக்கிறார். அன்று மாலை பெங்களூரிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலையில் சென்னை வந்து சேர்ந்திருக்கிறார்.

மகாவித்துவான் காலத்திற்கும் சாமிநாதையர் காலத்திற்குமான கல்விச் சூழல் வெகுவாக வேறுபட்டிருந்தது. இருவரும் இருவிதமான கல்விமுறைகளை எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள். ஆசிரியரைத் தேடிச் சென்று அல்லது வசதியிருப்பின் ஆசிரியரை அழைத்துக் கொண்டு வந்து விரும்பிய நூல்களைப் பாடம் கேட்டுக்கொள்ளும் சூழல் மகாவித்துவானின் காலத்தில் இருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் மகாவித்துவானின் பெங்களூர் பயணம் அமைந்தது. சாமிநாதையரும் இந்தக் கல்விப்புலப் பின்புலத்தில் வந்தவராயினும் நிறுவனக் கல்விப்புலச் சூழலையும் சந்தித்தவராக இருந்தார். சாமிநாதையரவர்களின் காலத்தில் நிறுவனக் கல்விமுறை நன்றாக வளர்ச்சி பெற்றிருந்தது. அதன் பின்புலத்தில்தான் சாமிநாதையரின் பெங்களூர் பயணம் அமைந்தது. தமது 65ஆம் வயதில் சாமிநாதையர் பெங்களூருக்குப் பயணம் மேற்கொண்டார். ஒரு நூற்றாண்டை நிறைவடையும் அவரது பெங்களூர்ப் பயண நினைவுகளை அவரது 165ஆம் ஆண்டு பிறந்தநாளில் நினைவுகூர்ந்து போற்றுவோம். ●